Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு
THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 8 (26 5-66) இதழ் 108

பராபவ வைகாசி 13 ஸபர் 5 வியாழக்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்,
47, பீச்றோட், யாழ்ப்பாணம்.

மில்க் வைற்
நீல சோப்
10 சதம்
கட்டியை வாங்கி
அதிக லாபமடையுங்கள்

# போதனாமொழியில் சமரசத் திட்டம்

## வீட்டு மொழியில் கல்வி போதிக்க வாய்ப்பு

### பிரதமர் பரிசீலனை செய்து வருகிறார்

கொழும்பு, புதன்

**போதனாமொழிப் பிரச்னைக்கு ஒரு சமரசத் திட்டத்தை அரசாங்க உயர்தர பீடம் தயாரித்து பிரதமரின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்துள்ளது. ஒரு பிள்ளையின் போதனாமொழி தாய்மொழியாகவே இருக்கலாம் ஆனால் இவ்விதம் போதனாமொழியைத் தெரிவுசெய்யும் பெற்றோர் தமது பிள்ளையின் போதனாமொழி எதுவெனத் தாம் விரும்புவதை எழுத்து மூலம் தெரிவிக்கவேண்டும் என்பதுதான் இந்தச் சமரசத் திட்டமாகும்.**

சிங்களம் அல்லது தமிழ்தான் போதனாமொழியாக இருக்குமென்றும் இந்த இரண்டு மொழிகளில் எது தங்கள் பிள்ளைகளின் போதனாமொழியாக இருக்க வேண்டுமென்பதை பெற்றோர் தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென்று கல்விஅமைச்சர் திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லை தாம் சமீபத்தில் சமர்ப்பித்த கல்வி வெள்ளை அறிக்கையில் தெரிவித்திருந்தார்

போதனா மொழி பற்றிய கல்வி அமைச்சரின் இந்த யோசனை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து இந்த யோசனையை தமிழ்க் காங்கிரசும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் எதிர்த்ததுடன் தாய் மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று திருத்தப் பிரேரணையும் கொண்டு வந்தனர். திருத்தப் பிரேரணை குழுக் கூட்டத்தில் தோல்வியடைந்தது. எனினும் இது பெரும் பிரச்னையாகுமென தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் பிரதமரிடம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இவ்விஷயம் பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன்படி உயர்தரபீடம் போதனா மொழி பற்றிய பிரச்னை பற்றி ஆராய்ந்து இந்தசமரசத்திட்டத்தைத் தயாரித்துள்ளது. போதனா மொழிப் பிரச்னைக்கு ஒரு சமரசத் தீர்வு காணு முகமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தைப் பிரதமர் இப்பொழுது பரிசீலனை செய்துவருகிறார்.

#### சமரசத் திட்ட விபரம்

ஒரு பிள்ளையின் வீட்டில் பேசும் மொழியே அந்தப் பிள்ளையின் போதனா மொழியாக இருக்கவேண்டுமென இச்சமரசத் திட்டம் வியாக்கியானம் செய்கிறது. தாங்கள், தங்கள் வீட்டில் சிங்களம்தான் பேசுகிறோம் என்றோ தமிழ்தான் பேசுகிறோம் என்றோ பெற்றோர் ஒருவர் எழுத்தில் பிரகடனம் செய்தால், அந்தப் பெற்றோர் தமது பிள்ளைக்கு சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி போதனை பெற்றுக் கொடுக்க இச்சமரசத் திட்டம் வாய்ப்பளிக்கிறது,

இச்சமரசத் திட்டம்பற்றிய தமது கருத்தைப் பிரதமர் தெரிவித்ததும் இத்திட்டம் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## "தமிழ்ப் பிள்ளைகளின் நிலை பாதிக்கும்"

போதனா மொழிபற்றிய இச்சமரசத்திட்டத்தின்மீது கல்வி மந்திரியின் திட்டத்தை எதிர்க்கும் ஒரு பிரமுகர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழுகின்ற தமிழ்ப் பேசும் பெற்றோர் தமது பிள்ளைகளைச் சிங்கள மொழி மூலம் கல்வி கற்கவேண்டுமென்றே இத்திட்டம் வழிகாட்டுவதாக உள்ளதுடன், வெளி மாகாணங்களில் போதியளவு தமிழ் மொழியைப் போதனா மொழியாகக்கொண்ட பாடசாலைகள் இல்லையானாலும் இருக்கும் தமிழ்ப் பாடசாலைகளின் தரம் குறைந்ததாக இருந்தாலும் தங்கள் பிள்ளைகளை சிங்கள மொழிமூலமே கல்வி பெறச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தையும் இத்திட்டம் ஏற்படுத்துகிறது

வெளிமாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கென தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை அரசாங்கம் நடத்த முடியாதாகையால், தமிழ் உத்தியோகத்தர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களத்தையே போதனா மொழியாக ஏற்றுக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை என்றும் அவர் கூறினார்.

---

புவனர்ஸ்அயர்ஸ், மே 25

இங்குள்ள சோவியத் தூதரகத்தில் மரணமான ரஷ்ய ராஜதந்திரியின் சடலம் நேற்று விமானம் மார்க்கமாக பாரிஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவரது மரணம் மர்மமாகவே இருக்கிறது. சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என அறிவிக்கப்பட்டபோதிலும் உத்தியோகபூர்வமான அறிவிப்பில்லை. (பி டி ஸி)

## ஏழாலை கொலைச்சம்பவம்: மூவர் விடுதலை

மாவிட்டபுரம், புதன்

கடந்தமாதம் 22-ந் திகதி இரவு ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்தவர்களான கணபதி சின்னத்தம்பி, பட்டாணி செல்லமுத்து ஆகிய இரு இளைஞர்களும் யாழ்ப்பாணத்தில் படம் பார்த்துவிட்டு வீடு திரும்புகையில் மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் இனந் தெரியாத நபர் ஒருவரால் கணபதி சின்னத்தம்பி குத்திக் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின்மீது ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சுன்னாகம் ஊரெழுவைச் சேர்ந்தவர்களான தம்பிப்பிள்ளைசின்னத்தம்பி, தம்பிப்பிள்ளை இராசரத்தினம், தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம், தம்பிப்பிள்ளை செல்வரத்தினம் ஆகிய நால்வரும் நேற்று மல்லாகம்நீதிபதி திரு ஜி எவ் எச் அத்துறுபான முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்கள்.

சுன்னாகம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு பேர்ஸி விஜயசூரியா நீதிபதியிடம் அரசாங்கப் பரிசோதகரின் அறிக்கை வராமையால் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்படவில்லையென்றும் அரசாங்கப் பரிசோதகரின் அறிக்கை வெளிவரும் வரை சந்தேக நபர்களை ரிமாண்டில் வைக்கும்படியும் விண்ணப்பித்தார். இதனை ஆட்சேபித்த சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் நீதிபதியிடம் சட்டப்படி சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப்படாவிட்டால் சந்தேக நபர்களை 14 நாட்களுக்கு மேல் ரிமாண்டில் வைத்

(2ம் பக்கம் பார்க்க)

## வெள்ளைவாரணனார் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சேக்கிழார் விழாவில் நேற்று பங்குபற்றவிருந்த திரு. வெள்ளைவாரணனார் தவிர்க்கமுடியாத காரணங்களால் வரமுடியவில்லை. அவர் இன்று கட்டாயம் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவதுடன் முன்னர் வகுத்த கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டிய. திருகோணமலை, மட்டக்களப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்.

## சுழிபுரத்தில் மர்மத் திருட்டுகள்

சுழிபுரம், புதன்

திட்டமிட்டு, மர்மமான முறையில் கைதேர்ந்த திருடர் கோஷ்டியொன்று இப்பகுதியில் கடந்த சில தினங்களாக தமது கைவரிசையைக் காட்டிவருவது இங்கு பலவீடுகளில் நடைபெற்ற திருட்டுக்களிலிருந்து தெரியவருகிறது.

நித்திரையிலிருக்கும்போது பெண்களின் நகைகள் 'மாய'மாக மறைந்துவிடுகின்றதாம். வீட்டிலுள்ள பெட்டிகளில் இறுகப் பூட்டப்பட்டு வைத்த நிலையிலுள்ள பணம், ஆபரணங்கள் எப்படியோ காணாமல் போய்விடுகின்றனவாம்.

இப்படியான 'மர்மத்' திருட்டுக்கள் குறித்து இப்பகுதி மக்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர்.

இத் திருட்டுக்களைத் தொடர்ந்து உள்ளூரில் இப்போது வீடுகளுக்கிடையே சண்டைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன.

இத்திருட்டுக்கள் குறித்து பொலிஸாருக்கு புகார் செய்திருந்தும் எவரும் இன்னும் பிடிபடவில்லை.

## தீவுப்பகுதி முன்னேற்றம்

### எம். பி. தலைமையில் ஆராயப்படும்

யாழ்ப்பாணம், வியா

ஊர்காவற்றுறைத் தொகுதியின் அபிவிருத்திபற்றி ஆராயும்பொருட்டு தீவுப்பகுதி எம் பி திரு வி நவரத்தினம் தலைமையில் இன்று தமிழரசுக்கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கூட்டமொன்று நடைபெறும்.

தீவுப்பகுதி தமிழரசு வாலிப முன்னணி ஒழுங்கு செய்துள்ள இக்கூட்டத்தில் பல பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

## செடிக்குத் தெளித்த கிருமி நாசினி! மாணவன் உயிரை பலிவாங்கியது!

சாவகச்சேரி, செவ்.

காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தசமயம் கத்தரிச்செடிகளுக்கு கிருமிநாசினி அடித்துக்கொண்டிருந்தபொழுது மயக்கமடைந்த மாணவனொருவன் மரணமான சம்பவம் சாவகச்சேரியில் நடந்துள்ளது.

சாகச்சேரி இந்துக்கல்லூரி மாணவனான எஸ் மகாலிங்கத்தின் மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. திடீர்மரண விசாரணை அதிகாரி மரண விசாரணை நடத்தினார்.

கத்தரிச்செடிகளுக்கு அடித்த கிருமிநாசினி, காற்றுப் பலமாக அடித்ததால், அம்மாணவன் சுவாசிக்கநேர்ந்ததென்றும், மூர்ச்சித்தமாணவனை உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றதாவும், அங்கு மரணமானார் என்றும் விசாரணையின்போது கூறப்பட்டது.

நற்செயலாக ஏற்பட்ட மரணம்எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரசாரம் — நமது அரசியல் நிருபர்

# ஊர் இரண்டுபட்டால் நஷ்டம் தமிழருக்கே

## தமிழ்ப் பல்கலைக்கழகம்; போதனமொழி! தேசிய ஐக்கியம்

துரியோதனன் கண்ணுக்கு யாரைப்பார்த்தாலும் அயோக்கியனாகத் தெரியுமாம். இதைப்போலத்தான் எமது எதிர்க்கட்சியினர் சிலருக்கும் எதைப் பார்த்தாலும் சிங்களம் மட்டும் சட்டத்துக்கும், சிங்கள சமூகத்துக்கும்விரோதமான செயலாகவே தோன்றுகிறது.

கல்வி அமைச்சரின் வெள்ளை அறிக்கையில் மூன்றாம் வகுப்பு முதல் ஆங்கிலம்கட்டாயபாடமாகஇருக்கவேண்டுமென்ற அம்சமும், தாய்மொழியேபிள்ளைகளின் போதனமொழியாக இருக்க வேண்டுமென்ற சிறுபான்மை மக்களின் கோரிக்கையும் எதிர்க்கட்சியினருக்குத் தேசத்துரோகமாகவே தோன்றுகிறதாம். இதில் ஆச்சரியமெதுவுமில்லை. போதனமொழி பெற்றோர் விரும்பும் மொழியாக இருக்கக்கூடாதென்றும் தாய் மொழியே போதனமொழியாக இருக்கவேண்டுமென்றும் கல்வி அமைச்சரின் உயர்கல்வித்திட்டம் அமைச்சருக்கு அதிகாரங்கள் வழங்குதை நீக்க வேண்டுமென்றும் தமிழ்க்காங்கிரஸ்-தமிழரசுக்கட்சித் தலைவர்கள் 'ஒற்றுமையாக' அரசாங்க பார்லிமெண்டரிக்குழுக்கூட்டங்களில் கண்டனமும் கருத்து தெரிவித்தது ஆளும் கட்சியிலுள்ள சிலர்இந்த எதிர்ப்புக்கு 'வடை புவாத முலாம் பூச' முன்வந்திருப்பதுதான் ஆச்சரியமளிக்கிறது.







ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின்செயற்குழு,தேசிய ஐக்கியத்தையும் வகுப்பு சௌஜன்யத்தையும் ஏற்படுத்துவதில தேசிய அரசாங்கம் வெற்றிபெற்றிருப்பதாகவும் இதைத் தொடர்ந்து பேணவேண்டுமென்றும் தெரிவித்துள்ள கருத்தும்குழுவில்பிரதமர்,தேசிய ஐக்கியம் பற்றி வற்புறுத்தியிருப்பதும் ஆளும்கட்சிக்குள்எவ்விதத்திலும்' வகுப்புவாதமுயற்சி' வெற்றியளிக்க மாட்டாதென்ற நம்பிக்கையை அளிப்பதாக உள்ளது.

ஃ ஃ ஃ

தமிழ் பேசும் மக்களுக்கென தமிழைப் போதனமொழியாகக் கொண்ட பல்கலைக்கழகமொன்றை வடக்கு மாகாண மக்களும் சுலபமாகப் போய் வரக்கூடிய ஓர் இடத்தில்,கிழக்கு மாகாணத்தில் அமைத்துத் தரவேண்டுமெனக் கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 18எம்.பிக்கள்ஒருமகஜரைப் பிரதமரிடமும் கல்விமந்திரியிடமும்சமர்ப்பித்திருக்கின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென்றும், இந்துக் கலாச்சாரப் பல்கலைக்கழகம் வேண்டுமென்றும் இருந்து வந்த வாதப்பிரதிவாதங்களும் சர்ச்சைகளும் இன்னும் ஓயவில்லையாயினும் இந்த மகஜர், இந்த சர்ச்சைகளை ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக மகஜரைப்பார்வையிட்ட கல்வி மந்திரி திரு. இரியகொல்ல, பார்லிமெண்ட் கட்டிடத்தில் தமது நண்பர்களுடன் பேசுகையில், "பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தான் வேண்டுமென்றால் அதற்குச்சம்மதிக்கத்தானே வேண்டும்" என்று கருத்துத்தெரிவித்தாராம்.

கல்வி மந்திரி எந்தநோக்கத்துடன் இதைத்தெரிவித்திருப்பாரென்பதும் சிந்திக்கவேண்டியவிஷயம்! தமிழ்ப் பல்கலைக்கழகம்தான் தந்துவிட்டோமோ, கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களைப்பற்றி இனிஉங்களுக்கு என்ன கவலை என்று அவர் கேட்கலாம். அவர் கேட்காவிட்டாலும்பின்னர் வரும் கல்வி அமைச்சராவது கேட்கலாமல்லவா?

பல்கலைக் கழகம் கிழக்கு மாகாணத்தில் ஓர் இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென மகஜர் கோருகிறது. கொழும்பு, பேராதனை பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பல்கலைக் கழகப் பிரிவுகள் அமைக்கலாமென்ற யோசனை வெளிவந்ததும், கிழக்கு மாகாணத்திலும் வேண்டும். வடக்கு மாகாணத்திலும் வேண்டுமென்று ஒவ்வொரு மாகாணத்தவரும் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கை இந்த மகஜருடன் நின்றுவிடலாம். ஆனால் இரத்மலானையில், தமிழ்மக்கள் கட்டியெழுப்பிய இந்துக்கல்லூரிக்கு நேர்ந்த கதி, கிழக்குமாகாணத்தில் அமைக்கும் பல்கலைக்கழகத்துக்கும் நேர்ந்துவிடாதா?

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கலாசாரப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கலாம்; அல்லது இந்துக் கலாசார பல்கலைக் கழகம் ஒன்று தனியாக அமைக்க வேண்டுமென்று கோரலாம். ஆனால், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஒரு வைபவத்தில் யாழ்ப்பாணம் எம். பி. குறிப்பிட்டதுபோல, தமிழர் தமக்குள் சண்டைபோட்டுக் கொண்டு, பிறரின் நகைப்புக்கிடமாக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். தமிழர்கள் எந்தவிஷயத்திலும் தமக்குள் சண்டைபோட்டுக் கொள்வதால் அதனால் தமிழருக்குத்தான் நஷ்டமே தவிர வேறுயாருக்குமல்ல. இதைக் கடந்தகால அனுபவங்களிலிருந்து நாம் இன்னும் உணரவில்லை. பல்கலைக்கழக விஷயத்தில் அரசாங்கக் கட்சிக்குள்ளிருக்கும் தமிழ் பேசும் மக்களின் இருபெரும் கட்சிகள் வேறுபட்ட கருத்துக்கொண்டிருந்தால், பல்கலைக்கழகம் எதுவுமே கிடைக்காமல் போகலாம் அல்லது முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த வழியையே பின்பற்றி இந்த அரசாங்கமும் காலம் கடத்தலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்துப்பல்கலைக் கழகம் அமைக்கும் விஷயத்திலும் எங்கே அமைப்பதென்ற விஷயத்திலும், அரசியல் நோக்கத்தை விடுத்து கல்வி நோக்கத்தைமட்டுமே கருத்தில் கொண்டு, தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் மட்டுமல்ல கல்விமான்களும் கூடி ஆலோசனை செய்து ஒருநல்ல முடிவுக்கு வரவேண்டும். அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த கே. எம். பி. ராஜரத்தினவும் தமிழ் எம். பிக்களும் 'மீன்' விஷயமாக ஒன்று சேர்ந் ஆலோசனைசெய்ய முடியுமானால், கல்வி, எதிர் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுசம்பந்தமாக இவர்கள் பேசுவது கஷ்டமா?

ஃ ஃ ஃ

தேசிய அரசாங்கம் இரு பெரும் சமூகங்களான சிங்கள — தமிழ் மக்களுக்குள் மட்டும் ஒற்றுமையை ஏற்படுத்தவில்லை. சிறுபான்மை சமூகத்தவர்களுக்கிடையிலும் ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஒற்றுமையை 'கட்சி'விருப்பு வெறுப்புக்கள் சீர்குலைக்காமலிருக்கவேண்டும்.

## "மாட்டிறைச்சி இலக்கியம்!"

ஈழத்தில் தமிழ் எழுத்தாளர்களின் தொகையும்அவர்களுடைய படைப்புகளை வாசிக்கும் ரசிகப் பெருமக்களின் தொகையும், நத்தை வேகத்தில் என்றாலும், அதிகரித்து வருகிறது. வாலிபர்கள் பலர் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு கதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதிக்குவிப்பது, சில வருடங்களுக்கு முன்னிருந்த நிலையுடன் ஒப்பிடும்போது, மிகவும்உற்சாகமளிக்கும் ஓர் அறிகுறி.

ஆயினும் சில குறைபாடுகளை எடுத்துக்காட்ட வேண்டியது இன்று எனது அருவருப்பான கடமையாகிவிட்டது.

சிலநாட்களுக்குமுன் ஒருவர் இலக்கியத்தை மரக்கறி இலக்கியம், மாமிச இலக்கியம் என்று பிரித்தார். யாழ்ப்பாணத்திலே 'மச்சப் பேசாதே!' என்று சொல்வார்களே, அதைத்தான் அந்த அன்பர் குறிப்பிட்டிருக்கவேண்டுமென்று நான நினைக்கிறேன். உள்ளதை உள்ளபடி, ஒன்றையும்ஒளிக்காமல், அப்பட்டமாக, பச்சையாக சொல்வது தான் மச்சப் பேச்சு, அது நாறும் பேசும் பேச்சு காற்றில் கலந்து மறைந்துவிடும். அச்சில் வருவது நீக்கிரையாகும் வரை அண்ணை உறுத்திக் கொண்டேயிருக்கும்.

சமீபத்தில் வெளியான ஒரு சிறுகதைத் தொகுதியை நான் வாசிக்க நேரிட்டது இரண்டு மூன்று கதைகளை வாசித்தபின் அதில் புலால் வெடில் நாற்றமெடுத்தது. மேற்படி அன்பர் அதைநிச்சயம் 'மாட்டிறைச்சி இலக்கியம்' என்று வர்ணித்திருப்பார்!

தற்கால இலக்கிய ஜாம்பவங்கள் முன்னேற்றம், முற்போக்கு, நற்போக்கு, யதார்த்தம் பதார்த்தம்என்றுஎன்னென்னவோ கூறுகிறார்கள். மற்றவர்கள் எழுதுவதெல்லாம்'பிற்போக்கு' இலக்கியம்! மேற்சொன்னசிறுகதை தொகுதியை யதார்த்த இலக்கியம் என்று எடுத்துக் கொண்டால் அது வெறும் பிழை.

சிறுகதைகள் மக்களின் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களை சித்தரித்து, அவர்களுடைய இன்ப துன்பங்கள், ஏற்றத்தாழ்வுகள், கஷ்டநிஷ்டூரங்களை பிரதிபலிக்க வேண்டியது அவசியம்தான் ஆனால் அவற்றை எழுத்தில் வடித்துக் காட்டும் திறமை, சொல்லாமல் சொல்லும் வன்மை. பட்டும் படாமல் நாசூக்காக எடுத்தியம்பும் ஆற்றல், இவைகள் இருந்தால் தான் அவற்றை இலக்கியம் என்ற வட்டத்திற்குள் சேர்க்கலாம்.

பெண்கள் களவொழுக்கம் செய்வதும், சோரம் போவதும், கணவனைக் கைவிட்டு வேறொருவனைக் கைபிடிப்பதையும் கதைகளில் சித்தரிப்பதைக் கண்டு பண்பாடுள்ள பலர் வெட்கப்படுகின்றனர். காதல் காட்சிகளை விரும்புவதும், பாலுணர்ச்சி வேகம் ஆண் பெண் இரு பாலாரிடத்தும் பற்பல அருவருக்கத்தக்க செயல்களைத் தூண்டுவதும் இன்று நேற்று தோன்றியவையல்ல. விபசாரம் தான் உலகத்தில மிகப் பழைய தொழில். இவற்றை சித்தரித்துக் காட்ட முயலும்போது ஒருவித பண்பாடு, இதம், புனித, மெருகு முதலியவை இருக்கவேண்டும்.

உலகப் பிரசித்தி பெற்ற கதை எழுத்தாளர் சொமர் செட் மோம் தமது பெரும்பாலான சிறு கதைகளில் பெண்களின் பரத்தைக் குணம், கற்பு தவறல் ஆகியவற்றையே நிலைக்களனாக வைத்து எழுதியுள்ளார். அவற்றை வாசிக்கும் போது புலால் நாற்றம் எழவில்லை. உயர்ந்த இலக்கியமாகவே தோற்றுகின்றன.

இலக்கிய மட்டமான புத்தகங்கள் பள்ளிக்கூட மாணவ மாணவிகளிடம் சிக்கிக்கொண்டால் அனர்த்தம் விளையுமென்பதை நமது தேசபிதாக்களும் பிரதேச கலாமன்றம் போன்ற அதிகாரம் வாய்ந்த ஸ்தாபனங்களும் உணர்ந்து உடனே தக்க நடவடிக்கை எடுகக வேண்டும்.

வழிப்போக்கன்

## ஏழாலை கொலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்க முடியாதெனவும் ஆகையால் சந்தேக நபர்கள் நால்வரையும் விடுதலை செய்யும்படி கூறி தனது வாதத்திற்கு ஆதாரமாக அண்மையில் சுப்பிரீம் கோர்ட் நீதியரசர் திரு. ரி. எஸ் பெணண்டோ அளித்த தீர்ப்பை வாசித்துக்காட்டினார்.

இதுபற்றி இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஜிவிஜயசூரியா நீதிபதியிடம் தெரிவிக்கையில் முதல்மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிராக சாட்சியங்கள் இல்லாதபடியால அவர்களை விடுதலை செய்வதில் ஆட்சேபனை இல்லையென்றும் ஆனால் நாலாம் சந்தேக நபருக்கு எதிராக சாட்சியங்கள் இருப்பதால் அவரைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்கும்படியும் விண்ணப்பித்தார்.

இதனை ஏற்க மறுத்த நீதிபதி முதல் மூன்று சந்தேக நபர்களையும் விடுதலை செய்து நாலாம் சந்தேக நபரான தம்பிப்பிள்ளை செல்வரத்தினத்தை 5000 ரூபாய் பிணையில் செல்லும்படியும் இம்மாதம் 30-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார். சந்தேநபர்கள்சார்பில்வழக்கறிஞர் திரு. வி. செல்வத்துரையின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானார் பொலிஸ் குற்றப்பிரிவு சார்ஜண்ட் திரு எஸ் கிருஷ்ணராசாவின் உதவியுடன் இன்ஸ்பெக்டர் திரு பேர்ஸி விஜயசூரியா ஆஜரானார்

நாட்டிலும் நகரிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியத் தகராறு

## இம்மாத இறுதியில் பேச்சுக்கள்

ஜாகர்த்தா, மே 25

மலேசியத் தகராறு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதிக்குள் பாங்ஹாக்கில் நடைபெறுமென நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் நேற்று இங்கு தெரிவிக்கையில் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலைகள் உருவாகிவிட்டன என்றும் இடமும் திகதியும்மட்டுமே நிச்சயிக்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

உத்தேச பேச்சுக்களில் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்கும் மலேசியத் துணைப் பிரதமர் துன் அப்துல் ரசாக்கும் கலந்துகொள்வார்கள்.

இதற்கிடையில், இந்தோனேஷிய பார்லிமெண்ட் அடுத்த மாதத்துக்குள் கூட்டப்படலாமென்று மேஜர் ஜெனரல் சுஹார்த்தா அறிவித்துள்ளார்.

## சுப்ரமண்யம் மாஸ்கோ விஜயம்

புதுடில்லி, மே 35

இந்திய உணவு, விவசாய மந்திரி திரு. ஸி. சுப்ரமண்யம் இம்மாதம் 31-ம் திகதி ரஷ்யா செல்வார். ரஷ்யாவில் அரசாங்கப் பண்ணைகள் செயல்படும் முறைகளை இவர் அவதானிப்பார்.

ரஷ்யாவில் இவர் 15 தினங்கள் தங்கியிருப்பார்.

## மாலைதீவுக்கு ஜெர்மன் தூதர்

பொன், மே 24

இலங்கையில்மேற்கு ஜெர்மன் ஸ்தானிகராக இருக்கும் டாக்டர் ஹெர்பர்ட் சுவோர்பெல் மாலைதீவுக்கும் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

# "சோஷலிஸத்தை நாம் பற்றி நிற்கின்றோம்"

— இந்தியப் பிரதமர்

பூனா, மே 25

இந்திய அரசாங்கம் சோஷலிசத்தைப்பற்றி நிற்கிறதென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீண்டும் தெரிவித்துள்ளார்.

நேற்று இங்குநடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அவர் பேசுகையில், சோஷலிசத்தைக் கைவிட்டால் நாட்டுக்கு வேறு வழியில்லை என்று கூறினார்.

ஆர்ப்பாட்டங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஆர்ப்பாட்டங்கள் வழிசெய்யாது என்றும் இதற்குப் பதிலாக அவை சிக்கலாக்கும் என்றும் தெரிவித்தார்.

ராஜீய எல்லைப் பிரச்னைகளை கிளர்ச்சிமூலம் தீர்க்க முற்படக் கூடாது என்றும் அவர் கூறினார்.

இக்கூட்டத்துக்கு இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வந்திருந்தனர்.

## எச்சரிக்கை

லண்டன், மே 25

இவ்வருட ஜூலை மாதத்துக்கு முன்னதாக ரொடீஷியாவில் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஸாம்பிய அதிபர் கௌவுண்டா பிரிட்டனை எச்சரிக்கை செய்துள்ளார்.

## 2000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

ஏதன்ஸ், மே 25

இரண்டாயிரம் கிரேக்க ரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். இதன்விளைவாக சகல ரயில் சேவைகளும் ஸ்தம்பிதம்அடைந்தன.

(பி.டி.ஐ)

## வானொலி டெலிபோன் சேவைகள்

லண்டன், மே 25

இலங்கைக்கும் பிரிட்டனுக்குமிடையேயான வானொலி டெலிபோன் சேவைகள் இம்மாதம் 30-ம் திகதியும் ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதியும் நிறுத்தி வைக்கப்படும். (பி.டி.ஐ)

## திருட்டு வகையில் இது ஒரு ரகம்!

மணிலா, மே 25

ஒருபெண்ணை முத்தமிட்டு அப்பெண்ணிடமிருந்து பத்து டாலர்களை ஒருநபர் அபகரித்துக்கொண்ட சம்பவம் இங்குள்ள கேவிட் எனுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

ஒருதேநீர்க் கடையில் இருந்த இப்பெண் நித்திரையிலாழ்ந்துகொண்டிருந்தபொது ஒரு ஆடவன் அவளைமுத்தமிட்டு அப்பெண்ணிடமிருந்த பணத்தைக் களவாடியதாகச் சொல்லப்படுகிறது. (பி டி ஐ)

## அபிஷேகம்

கொடிகாமம், செவ்வாய்

கொடிகாமம் சித்திர வேலாயுதர் கோவிலில் நேற்று முன்தினம் சந்தான கிருஷ்ண அபிஷேகமும் அன்னதானமும் நடைபெற்றது.

## புலிவாய்க்குள் கை விட்டவர்!

டாக்கா, மே 25

ஒருதொழிலாளி, தன்னைத்தாக்கிய ஒரு வங்காளப் புலியைப் பலவீனப்படுத்துவதற்காக அதன் வாய்க்குள்தனது கையைவிட்டு அதன் நாக்கை முறுக்கினார் என்று இங்கு செய்தி கிடைத்துள்ளது.

காட்டுக்குச் சென்ற இரு நண்பர்கள் அந்தப் புலியை துரத்திஅதனைக் காட்டுக்குள் விரட்டிவிட்டனர் என்றும் தாக்கப்பட்டவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

## நைல் நதியில் தமிழர் மூழ்கி மரணம்

கெய்ரோ, மே 15

நைல்நதியில் தமிழர் ஒருவர் மூழ்கி மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியஅரபுக் குடியரசு விமானத் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் இந்தியர் திரு. பி. ஆர். கிருஷ்ண மூர்த்தி (45 வயது) நைல் நதியில் மூழ்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நதியில் அவர் நீந்தும்பொழுதே இப்பரிதாப சம்பவம் ஏற்பட்டதாம்.

## தொண்டமான் பயணமானார்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் நேற்று இந்தியா பயணமானார். கொழும்பிலிருந்து விமானத்தில் பிரயாணமான திரு. தொண்டமான், விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பலாலிவிமான நிலையத்தில் இரண்டுமணி நேரம்தங்க நேரிட்டது.

இந்தியா செல்லும் திரு. தொண்டமான், இலங்கையிலிருந்து தாய்நாடுசெல்லவிருக்கும் இந்திய வம்சாவழியினரைக் குடியேற்ற உத்தேசிக்கப்படும். அந்தமான்தீவுக்கு இந்திய அரசாங்க அதிகாரிகளுடன் சென்று பார்வையிடுவார். பின்னர் திரு. தொண்டமான் ஜெனிவா செல்வார்,

## கொடித்தினம்

கொழும்பு, செவ்வாய்

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் சமூக சேவை தேசிய சபை இன்று பன்னிரண்டவது கொடித்தினத்தைக்கொண்டாடுகிறது.

# காஷ்மீரின் வடக்கே 20,000 சீனத் துருப்புகள்

ஸ்ரீநகர், மே 25

காஷ்மீரின் வட எல்லையில் இருபதினாயிரம் சீனத்துருப்புகள் குவித்துவைக்கப்பட்டிருப்பதாக லடாக்கிலிருந்து கிடைத்த ஊர்ஜிதமான செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு காலாட்படை டிவிஷன், ஒரு எல்லைப் பாதுகாப்புப் பட்டாளம், 2 காலாட்படை, ஒருகுதிரைப்படை ஆகியவை இப்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக இச்செய்திகள் கூறுகின்றன.

1962-ம் ஆண்டின் போதோ அல்லது அண்மையில் ஏற்பட்ட இந்திய— பாகிஸ்தான் நெருக்கடியின் போதோ இருந்ததைவிட அதிகசீனத்துருப்புகள் இங்குவிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(பி.டி.ஐ)

## ஜோடி கைது

யாழ்ப்பாணம், புதன்

கரையூரைச் சேர்ந்த மார்ட்டின் கஸில்டி என்ற யுவதியை அல்வாயைச் சேர்ந்த நாகராசா என்பவர் பெற்றோரின் அனுமதியின்றிக் கடத்திச்சென்றதாக கரையூர்ப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சார்ஜண்ட் துரைசிங்கம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியொன்று தேடுதல் நடத்தியபோது வட்டுக்கோட்டையிலுள்ள சனப்புழக்கமற்ற கிராமத்தில் இருவரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் திரு. வீ. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

## உலகம் சுற்றும் பெண் விமானி

புதுடில்லி, மே 25

உலகம் சுற்றும் பிரிட்டிஷ் பெண் விமானியான செல்வி ஷீலா ஸ்கொட் நேற்று இங்கு வந்து சேர்ந்தார்.

ஒரு என்ஜின் பொருத்தப்பட்ட விமானமொன்றில் இவர் உலகம்சுற்றி வருகிறார்.

இதுவரை இவர் இருபத்திரண்டு நாடுகளுக்கு மேலாக பறந்து வந்திருக்கிறார். இதுவரை இவரது விமானம் கடந்த தூரம் 30,000 மைல்.

இன்று இவர் இங்கிருந்து பம்பாய்க்குப் பயணமானார். (பி.டி.ஐ)

## சுபந்திரியோ மனைவிக்கும் கல்தா!

ஜாகர்த்தா, மே 25

இந்தோனேஷியாவின் முன்னாள் வெளிநாட்டு மந்திரியான டாக்டர் சுபந்திரியோவின் மனைவியும் இந்தோனேஷிய சுகாதார மந்திரியுமான டாக்டர் திருமதி எஸ். சுபந்திரியோ பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருட அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட சதி முயற்சிக்கு முன்னர் திருமதி சுபந்திரியோ சுகாதாரஉதவி மந்திரியாகவிருந்தார்.

திருமதி சுபந்திரியோ மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக இப்பொழுது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்பொழுதிலும் அவரின் நடமாட்டங்கள் மர்மமாகவே இருக்கிறது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது பற்றி ஊர்ஜிதமான செய்திகள் எதுவும் வெளிவரவில்லை.

சுகாதார அமைச்சிலிருந்து எட்டு உயர் அதிகாரிகளும் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

(பி டி.ஐ.)

## நைஜீரியாவில் அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டன

லோகாஸ், மே 25

நைஜீரியாவில் சகல அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் யூனியன்களும் கலைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தலைவர் இரான்ஸி இதுபற்றித் தெரிவிக்கையில், நாட்டின் ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் பதினாறும் திகதி நைஜீரியாவில் திடீர் இராணுவப் புரட்சி ஏற்பட்டதும அதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி நிறுவப்பட்டதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

# "ஈழத்து எழுத்தாளர்களின்நூல்கள் பாட நூல்களாக்கப்பட வேண்டும்"

## நூல் வெளியீட்டு விழாவில் யாழ். மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், வியா

"ஈழத்து எழுத்தாளர்களின் பல்வேறு தரப்பட்ட சிறந்த நூல்கள் பாடசாலைகளில் பாடநூல்களாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பள்ளியில் படிக்கும் சிறுர்கள் நம் நாட்டவர்களுடைய ஆக்கங்களைப் படித்து உயர்ச்சி பெலலாம். எழுத்தாளர்களும் வளம் பெறுவார்கள்."

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரையின் 'வீ' நூல் அறிமுகவிழாவில் யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மங்கல விளக்கேற்றித் வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்நூல் வெளியீட்டுவிழாவுக்கு இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமை வகித்தார். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர் 'வீ'யின் முதற் பிரதியை வெளியிட்டு வைத்தார். உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் முதற்பிரதியை வாங்கினார்.

திரு. இ. மகாதேவா பேசுகையில் கூறியதாவது:

"எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரை இந்திய தமிழ் சிறுகதை எழுத்தாளர்களையே மிஞ்சிவிட்டார் என்று நூலில் ஒரு குறிப்புப் போடப்பட்டுள்ளது. இந்நூலில் வெளியாகியுள்ள சிறுகதைகளைப் படிக்கும்போது அந்தக் குறிப்பு முற்றிலும் உண்மை என்பது புலனாகின்றது. இந்நூலில் கிறிஸ்தவ, கத்தோலிக்க, இந்து மத சம்பந்தப்பட்ட கதைகளும் பாலுணர்ச்சியை மையமாகக் கொண்ட கதைகளும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் இந்நூல் ஒவ்வொரு வகைப்பட்டவர்களைக் கவர்வதற்காக எழுதப்பட்டுள்ளது என்றுகூடச் சொல்லலாம். தனித் தமிழில் பண்டிதர் நடையில் கூட ஒருகதை எழுதப்பட்டிருக்கிறது. பண்டிதர் ஒருவர்தான் இந்தக் கதையை எழுதினாரோ என்றுகூடச் சந்தேகப்படும் விதத்தில் அருமையாக எழுதியிருக்கிறார் நூலாசிரியர்."

கிரு. வ. அ. இராசரத்தினம் பேசுகையில், திரு. பொன்னுத்துரையின் எழுத்தாற்றல்பற்றியும் நூலில் வந்துள்ள கதைகள்பற்றியும் கூறினார்.

திரு. க. தி. சம்பந்தன் பேசுகையில், நூலாசிரியர் இலக்கியத்துக்காகவே தன்னை அளித்துக் கொண்டிருப்பவர் என்றார்.

திரு. செம்பியன்செல்வன் பேசுகையில், இந்த நூலில் பொன்னுத்துரையின் ஒரு பக்க சாயலைக் காணக்கூடியதாகவிருக்கிறதென்றார்.

நூலாசிரியர் திரு எஸ். பொன்னுத்துரை பேசுகையில் கூறியதாவது:

பலவகைப்பட்ட சிறுகதைகளை நான் இந்நூலில் சேர்த்திருப்பதற்குக் கார

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழர் தமக்குள் சண்டையிடுவதை மற்றையோர் பார்த்துச் சிரிக்கின்றனர்"

—ஜீ. ஜீ.

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை மக்கள் அனைவரையும் ஒன்றுசேர்க்க தேசிய அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. தமிழ் மக்கள் தனியே பிரிந்து வாழ முடியாது; சிங்கள மக்களும் பிரிந்து வாழமுடியாது. இரு சமூகத்தினரும் ஒன்றுசேர்ந்தால்தான் நாடு முன்னேறும். நமது பிரதமர் நியாயமாக நடந்துகொள்வார்" என்று தொழில் வீடமைப்பு மந்திரி ஜனுப் எம். எச். முகமது யாழ்ப்பாணம் றெக்ளமேஷன் சனசமூக நிலைய ஆண்டுவிழாவில்பேசுகையில் குறிப்பிட்டார்,

இவ்விழாவில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜீ, ஜீ. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

தமிழர்கள் தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொள்வதைப் பார்த்து சிங்கள மக்கள்சிரித்துக்கொண்டு, நல்ல திட்டங்களைப் பின்போடுகிறார்கள்.

நான் இங்கு தமிழருக்கு ஒரு சர்வகலாசாலை வேண்டும் என்றேன். சிலர் இதை எதிர்த்து திருக்கோணமலையில் வேண்டும் என்கின்றனர். அதுவும்வேண்டும் இதுவும்வேண்டும் என்று கூறும் பழக்கம் தமிழரிடம் கிடையாது. அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். நான் என்னசெய்வேன் என்பது எனக்குத்தெரியும்.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, திரு, யேசுதாசன் ஆகியோரும் பேசினர்.

## விவசாயப் பயிற்சிக்கு தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி கழகச் சார்பில் கண்டி பல்கலையிலுள்ள றிங்னிட்டி கல்லூரியில் அடுத்த மாதம்15-ம் திகதியிலிருந்து 8 மாதங்களுக்கு நடைபெறவிருக்கும் விவசாயப் பயிற்சிக்கு வட மாகாணத்திலிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்முறை இப்பயிற்சிக்கு இலங்கையிலிருந்து இவர்கள் மூவருமே தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சென்றவருடம்அம்பாந்தோட்டையிலிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கனகபுரம் ஆகிய மூன்று இடங்களைச்சேர்ந்த அம்மூவரும் இங்குள்ள இளம் விவசாய கழகங்களின் முக்கிய உறிப்பினர்களாவர்.

உபகாரச் சம்பளத்தில் பயிற்சிபெறும்இவர்கள், விவசாய அபிவிருத்தி, கோழி வளர்ப்பு, பன்றி, ஆடு, மாடு ஆகிய கால்நடைகள் வளர்ப்பு முதலிய துறைகளில் நவீன முறைப்பயிற்சிகளைப்பெறுவார்கள்.

இப்பயிற்சி முடிந்தபின் இவர்கள் விவசாயிகளுக்கு விவசாயத்துறையில் நவீன முறையில் பயிற்சியளிப்பார்கள்.

## ஈழத்து எழுத்தாளர்களின்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ணம் என்னுல் எதையும் எழுத முடியும் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவே. 1962-ம் ஆண்டுவரை என்னை ஒரு பிரிவினர் 'டப்பி' ஒன்றுக்குள் அடைத்துவைத்திருந்தனர். நான் என்று சுதந்திரப் பறவையானேனே அன்றுதான் எனக்கு இலக்கிய உலகில் தனியிடம் கிடைத்தது.

பதிப்பாசிரியர் திரு. எம். ரகுமான் பேசுகையில், அரசாங்கம் புத்தக வெளியீட்டுக்கு நல்லாதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திரு. நா. சண்முகநாதன் நன்றியுரை கூறினர்.

## விரிவுரையாளர் வருகிறார்

யாழ்ப்பாணம், வியா.

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ., எம். லிட்., விமானமூலம் இன்று யாழ்ப்பாணம் வந்தடைவார்.



பச்சையப்பன் கல்லூரிப் பழைய மாணவர்களின் அழைப்பினை ஏற்று வரும் இவர் இங்கு பத்து நாட்கள்தங்கியிருப்பார். டாக்டர் மு. வரதராஜனின் மாணவரான இவர் தமிழில் சிறந்த புலமை உடையவர். சென்னைத் தமிழ் இசைச்சங்கத்தில் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவராகையால், தமிழ்இசைபற்றி சிறந்த அறிவு இவர்க்கு உண்டு.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாட்களில், யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகளில் மாணவர்கட்குச் சொற்பொழிவாற்ற இசைந்துள்ளார். பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தினரின் அழைப்பிற்கிணங்க பேராதனையிலும் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

ஜி. சி. ஈ. பரீட்சை

## மீண்டும் ஒரு சந்தர்ப்பம்!

கொழும்பு, புதன்

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஆங்கிலத்தில் ஜி சி ஈ (சாதாரண) பரீட்சையில் சித்திபெருதவர்களுக்கு மீண்டும் இவ்வருடம் ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் பரீட்சையில் ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக கல்விமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. காமினி ஜெயசூரியா தெரிவித்தார்.

கல்குடா எம். பி திரு. டபிள்யூ. தேவநாயகம் பார்லிமெண்ட் ஒத்திவைக்கும் நேரத்தில் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. காமினி ஜெயசூரியாஇப்படியாகப் பதிலளித்தார்.

## உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[26-5-66—1-7-66]

**மேட இராசி**

வாக்குக்கலகம், அதிகாரிகள் கஷ்டம், செய்தொழிற்குறைவு, தாரபுத்திர சுகக்குறைவு, உடல்நலிவு, கடன் பிரச்சினை, குடும்ப கஷ்டம், பணமுடை.

**இடப இராசி**

வாக்குக்கஷ்டம், சச்சரவு, ரோகபீடை, தொழிற்சங்கடம். அதிகாரிகள் தொல்லை. தொழிலில் இடர், சத்துரு வீழ்ச்சி, சுகபோகம், நல்லவர் சேர்க்கை, பணச் சேர்க்கை, புத்திரலாபம்.

**மிதுன இராசி**

தெய்வ வழிபாடு, உடல் நலிவு, நண்பர் தொல்லை, பணவிரயம், தாரபுத்திர சுகம், அரசதண்டனை உடல் நலக்குறைவு, தொழிற்கஷ்டம்.

**கடக இராசி**

செய்காரியத்தடை- பொருள் அழிவு, அதிகாரிகள் உதவி, தர்மவழியில் ஈடுபாடு, மனப்பயம், இனபந்துக்கள் பகை, பூமிச் செல்வம் சேர்க்கை, வாகன லாபம்

**சிங்க இராசி**

தெய்வ வழிபாடு, கடன் நீக்கம், பணவரவு, தர்மவழியில் மன ஈடுபாடு, மேன்மையான நிலைமை கிட்டல், தாரபுத்திரசுகம், பிரயாண சுகம்.

**கன்னி இராசி**

இடப்பிரிவு. இடமாற்றம், பொருள் விரயம், வயிற்றில் ரோகபீடை, வாகனநட்டம், பூமிநட்டம், புத்திரரால் சுகம், கடன்படும் நிலை.

**துலா இராசி**

செய்காரியசித்தி, இனபந்துக்கள் பிணக்கு-கலகம், உடல்ரோக பீடை, பண முடக்கம், நிலைப்பிரிவு, மாதுருபிதுருவழி கஷ்டம்- கவலை, மனச்சஞ்சலம்.

**விருச்சிக இராசி**

செய்தொழிற்கேடு, பூமிக் கஷ்டம், வீண்பழி. சத்துரு பயம், பயனற்ற பிரயாசம், பொருள் அழிவு, உடல் நலிவு-கடன்படல், பகைமை அதிகரிப்பு.

**தனு இராசி**

பிரயாணகஷ்டம். உடல் ரோகபீடை, செய்காரியக் கேடு, பொருட்சேதம், இனபந்துக்கள் கலகம், விரயம், உடல்நலிவு, வீண் பிரச்சினைகளில் ஈடுபாடு, கவலை.

**மகர இராசி**

சத்துருநாசம், மனச்சந்தோஷம், தேகாரோக்கியம், சந்தான விருத்தி, தொழில் வெற்றி, வாக்குவன்மை, பேச்சுச்சித்தி, செய்காரியச் சிறப்பு, உடல்நலம்.

**கும்ப இராசி**

மனச்சஞ்சலம், நிதானமற்றபுத்தி, வயிற்றில்ரோக பீடை, தொழிற்றடை, பண அழிவு, பகைவர் அதிகரித்தல், இனசன சகோதர பகை, பெரியோர் உதவி கிட்டல்.

**மீன இராசி**

வித்தைமேன்மை, ஆயுத கோரபயம், பொருள்வரவு, தொழிற்சிறப்பு, தேகநலம், உறவினர்-பெரியோர்உதவி. பூமிப்பலன், சகோதர வழிச் சிறப்பு.


★ வலிமை
★ குளிர்மை
★ சிக்கனம்



இவற்றிற்கு

பிரசித்தி பெற்ற யானை மார்க்

அஸ்பெஸ்ரஸ்

கூரை சீற்றுக்களையே உபயோகியுங்கள்.

கிடைக்குமிடம்:

சண்முகம் ஸ்ரோர்ஸ்

(யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள்)

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 697


## சிமெந்து தொழிற்சாலையில் 2-வது சூளை இயங்க ஆரம்பித்தது

மாவிட்டபுரம், புதன்

மேற்குஜெர்மனி அளித்த 4கோடி 60 லட்சம் ரூபாய் கடனுதவியுடன் அமைக்கப்பட்ட காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் இரண்டாவதுபுதிய சூளை சென்ற திங்கட்கிழமைபகல் 12 மணிக்கு பரீட்சார்த்தமாக வேலை செய்யஆரம்பித்தது. சிமெந்துத் தொழிற்சாலையின் 2-வது அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இச்சூளைபரீட்சார்த்த வேலை ஆரம்பம் மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமிகோவில் பிரதமகுரு சிவ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களால் செய்யப்பட்ட சைவசமயச் சடங்குகளைத் தொடர்ந்து தொழிற்சாலை அதிபர் திரு. எஸ். சுப்பிசமணியம் தீப்பந்தம் ஏற்றி சூளையை வேலை செய்யும் வண்ணம் ஆரம்பித்து வைத்தார் இச்சூளை வாயிலில் 'சுவஸ்திகம்' என்னும்சிவசின்னத்தைபிரமஸ்ரீ ஷண்முகநாதக்குருக்கள் வரைந்து திலகமிட்டதை அங்குள்ளஜெர்மன்தொழில் நிபுணர்கள் கூர்ந்து கவனித்துவிட்டு தொழிற்சாலை அதிபரிடமும், குருக்களிடமும்'சுவஸ்திக'ச்சின்னத்திற்கும் ஜெர்மன் கலாச்சாரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டெனக் கூறினர்கள்.

### பழையசூளை புதுப்பிக்கப்படும்

இப்புதிய சூளை வருடமொன்றிற்கு 1,75,000 தொன் கிளிங்குகளும்அதற்குச்சற்று கூடுதலான தொன் சிமெந்தும் உற்பத்திசெய்யும். இப்பொழுது உள்ள சூளை மூலம் 80,000 தொன்கிளிங்கர்உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டாவது சூளை சரிவர இயங்க ஆரம்பித்ததும் பழைய சூளையின் வேலை நிறுத்தப்பட்டு நவீன முறையில் அச்சூளை புனருத்தாரணம் செய்யப்படவிருக்கிறது. பழைய சூளையின் அபிவிருத்தி வேலைகள் முடிந்து வேலை ஆரம்பிக்கப்பட்டதும் 20,000 தொன் கூடுதலாக அதாவது 100000 தொன் கிளிங்கர் உற்பத்திசெய்யப்படும். இப்போதுள்ள திட்டத்தின்படி இரண்டு சூளைகளும்1968-ம்ஆண்டு பிற் பகுதியில் ஒரேநேரத்தில் வேலை செய்யும்போது275000தொன் கிளிங்கரும் அதற்குக்கூடுதலான சிமெந்தும் உற்பத்தி செய்யப்படும்.

1968-ம் ஆண்டுக்குப்பின் இலங்கையின் சிமெந்துத் தேவை பாதிக்குமேல் உற்பத்தியாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைபெற்ற அபிவிருத்திவேலைகளில் இரண்டாவது சூளையைவிட ஒரு மில், பக்கிங்பிளான், ஒரு கிரேஸர், நான்கு மூலப்பொருட்கள் சேகரித்துவைக்கும் சைலோஸ்கள், சிமெந்து சேகரித்துவைக்கும் நான்கு சைலோஸ்கள், களிமண்ணையும், கல்லையும் கலக்கும் இயந்திரம், மண்வறுக்கும் இயந்திரம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

### மின்சாரம் உற்பத்தி

பழைய சூழையின் வேலை நிறுத்தப்பட்டு அபிவிருத்தி வேலைகள் செய்யப்படும்போது 4,000 கிலோவார்ட் மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்சாரநிலையமும், ஒரு சிமெந்து மில், ஒரு'ரே' மில், என்பன கட்டப்படும். தற்போதுள்ள மின்சாரநிலையம் மூடப்படும். இரண்டு சூளைகளும் வேலைசெய்யும் போது தேவைப்படும் 6500 கிலோ வார்ட்மின்சாரத்தி தேவையான அளவு மின்சாரம் சுன்னுகம் மின்சாரநிலையத்திலிருந்து பெறப்படும்.

சினிமா

## தெய்வத்தாய்

விமர்சனம்

தந்தை குற்றவாளி, தனயன் இரகசிய பொலிஸ் அதிகாரி. தாய் இருவருக்குமிடையில் தவித்து தந்தையை மகன் கைது செய்வதைப் பார்க்காமல் உயிர் நீத்து விடுகிருள். 'தெய்வத்தாய்' கதை இதுதான்.

எம். ஜி. ஆர். 'சி. ஐ. டி. யாக வருகிறார். சண்டைக் காட்சிகளில் சக்கைபோடு கிறார். இடி வாங்கியவர்களின் எலும்புகள் என்ன பாடுபட்டிருக்குமோ என்ற 'கவலை' ஏற்படுகிறதுநமக்கு! காதல் காட்சிகளில் குறும்பாகவும் 'குளோசா, கவும் நடித்திருக்கிறார்.

எம். ஜி. ஆரின் காதலியாக வரும் சரோஜாதேவி தமது காதலரை நினைத்துக் கொண்டு கிளாஸில் 'ஐஸ்' துண்டுகளைப் போடும்போது தோற்றம், நடிப்பு எல்லாம் குழுமையாக இருக்கிறது. காதல் காட்சிகளில் மேல் நாட்டுத்'தழுவல்' இருந்தாலும் ரசிக்கும்படியாக இருக்கிறது.

கதையுடன் அதிகம் சம்பந்தப்படாமல், ஒரு 'சான்ஸ்' கிடைக்காத பாடகராக வரும் நாகேஷ் தமக்கும் கச்சேரி செய்ய ஒரு சான்ஸ் கிடைக்கப்போகுது என நினைத்து அதற்காகச் செய்யும் ஏற்பாடுகள் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் ஒரு சிரிப்புக்கச்சேரிதான்!

அசோகன், சகஸ்ரநாமம், நம்பியார், பண்டரிபாய் ஆகியோருக்கு வழமையான பாகங்கள்தான். சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

பாடல்களில் 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் அது முடிந்தபின்னால் ஒரு பேச்சிருக்கும்' படம் முடிந்தபின்பும் நினைவிலிருக்கும். 'வண்ணக்கிளி சொன்னமொழி' யும் இனிமையாக இருக்கிறது.

கமராக்காரர் சஸ்பென்சுக்கேற்றவாறு கமராவைத் திருப்பியிருக்கிறார்.

தமிழ்த்திரைப் படத்தின் தரத்தை 'தெய்வத்தாய்' மூலம் ஒருபடி உயர்த்தியுள்ள டைரக்டர் மாதவனைப் பாராட்டவேண்டும்.

இப்படம் இப்போது யாழ்ப்பாணம் வெலிங்டன், ராஜா ஆகிய தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருக்கிறது.

—கணேஷ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

### மதியாமடு சின்னப்பூவரசங்குளம் ரேட்டு வேலை

1966-ம் ஆண்டு ஆனி மாதம் 3-ந் திகதி நண்பகல் 12 மணி வரை மேல்பற்று தெற்கு கிராமச்சபை அக்கிராசனரால்மேற்படி ரேட்டு வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பணமாக ரூபா 50/- செலுத்தியதன்பேரில் வழங்கப்படும். உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படவேண்டும். மேலும் பத்திரப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தகப்படவேண்டும். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கும் அதே நேரத்தில் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கும் இக்கேள்வியின் நகல் பிரதியொன்று அனுப்பி வைக்கப்படவேண்டும். 1-6-66 நண்பகல் 12 மணி வரை எமது அலுவலகத்தில் பத்திரங்கள் வழங்கப்படும். விபரங்கள் எதுவும் வவுனியா உ. உ. ஆணையாளர் அலுவலகத்திலும் இங்கும் தெரிந்து கொள்ளலாம்.

செ. சுப்பிரமணியம் ஜே பீ.
கி. ச. அக்கிராசனர்.

கி. ச. அலுவலகம்,
நயினாமடு, நெடுங்கேணி.
17-5-66 439

REGAL--JAFFNA
NOW SHOWING!
URSULA ANDRESS
in
H. Rider Haggard's
SHE
(Cinemascope - Tecnicolor)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

# "ஒருவருடத்துக்குள் 5,000 வீடுகள் கட்டினேம்"

## அரசாங்கத்தின் சாதனை பற்றி வீடமைப்பு மந்திரி

யாழ்ப்பாணம், புதன் "சிறிமா அரசாங்கம் நாலு வருட காலத்தில் இந்நாட்டில் 1552 வீடுகளைத்தான் கட்டி முடித்தது. ஆனல் தேசிய அரசாங்கம் பதவி ஏற்று ஒருட காலத்தில் 5082 வீடுகளை கட்டியிருக்கிறது.

பாஷையூரில் 24 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டத்திற்கு அத்திவாரக்கல் நாட்டிய பின் பேசும்போது வீடமைப்பு மந்திரி ஜனப் எம். எச். முகமது மேற்கண்டவாறு கூறினர்.

மந்திரி முகமத் கரையூரில் 48 வீடுகள் கொண்ட இரண்டாவது வீடமைப்புத் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

மந்திரி தொடர்ந்து கூறியதாவது:

இந்நாட்டில் வீட்டுப் பிரச்னையை தீர்க்கவேண்டுமானல் 4 லட்சம் வீடுகளைக் கட்டவேண்டும். இது மிகவும் கஷ்டமான காரியம்.

தேசிய அரசாங்கத்தின் திட்டம் கொழும்பில் மாடி வீடுகளைக் கட்டுவது. ஆனல் சில பகுதி மக்களுக்கு மாடி வீடு விருப்பமில்லாதிருக்கிறது. இப்பகுதியில் 6000 ரூபா அரசாங்கம் கொடுத்து வீடு கட்டி, பின்பு 20 வருட காலத் தவணையும் கொடுக்கிறது. மக்கள் இப்பணத்தைத் திருப்பிக் கொடுக்க போதிய அவகாசம் உண்டு.

இலங்கையில் 4 லட்சம் மக்கள் வேலையின்றி இருக்கிறார்கள். ஒரு வருட காலத்தில் இப்பிரச்னையைத் தீர்க்க முடியாது. அதற்கு அவகாசம் வேண்டும். தேசிய அரசாங்கத்தை வீழ்த்த பலரும் பல பல விதத்தில் முயற்சி செய்து வருகிறார்கள். இதிலிருந்து தேசிய அரசாங்கத்தை காப்பது மக்கள் கடமை,

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஆசிரியர் மா. மார்ட்டின், ஏ. போல்ராஜ் ஆகியோரும் பேசினர்கள்.

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
என்.டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி

# "கூட்டுறவு எண்ணமுள்ளோர்"

## சில்லாலை மக்களுக்கு பாராட்டு

கொழும்பு, வியாழன் "குணவிசேஷங்கள்மிகுந்த கூட்டுறவு எண்ணங்கொண்ட மக்கள்வாழும் நல்ல கிராமம்தான் சில்லாலை. சின்னரோமை என்ற சிறப்புப் பெயர் பெற்ற பக்தி விசுவாசமுள்ள இக்கிராமத்தின் பங்குக் குருவாகக் கடமையாற்றியதை என் பாக்கியமாகக் கருதுகிறேன்."

சில்லாலையில் பங்குக் குருவாகக் கடமையாற்றி தன் தாயகமான ஒல்லாந்து தேசத்துக்குத் திரும்பிச் செல்லும் வண. ஏ. வசன்பர்க் அடிகளார், சில்லாலை சமூக சேவா வெளியூர்ச் சங்கத்தின் 20-ம் வருட விசேஷ பொதுக் கூட்டத்தில், கொழும்பில் வாழும் சில்லாலை மக்களால் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொட்டாஞ்சேனை கத்தோலிக்க இளைஞர் சங்க மண்டபத்தில் சங்கத்தின் பாதுகாவலர் திரு. எஸ். லூயிஸ் அல்பிரட் தலைமையில் நிகழ்ந்த இந்தப் பொதுக் கூட்டத்தில் திரு. சில்லையூர் செல்வராசன் சங்கம் நடத்தும் "சில்லைத்தூதன்" பத்திரிகையின் சிறப்பாசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. என். ஏ. இம்மானுவேல், திரு. செல்வராசன், திரு. அன்ரன் விமலசேகரம் ஆகியோரும் பேசினர்.

பின்னர் சிற்றுண்டி விருந்துபசாரத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த புதிய உத்தியோகஸ்தர் தெரிவில் திரு. எஸ். எம. ஜோசப் சங்கத்தின் நடப்பு வருடத் தலைவராக ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். "வெளியூர்களில் வசிக்கும் சில்லாலை மக்கள் அனைவரும் தாங்கள் தாய்க் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பதில் தம்மோடு ஒத்துழைப்பதில் விசேஷ அக்கறை செலுத்தவேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

உபதலைவர்கள்: திரு.எஸ். பி. டேவிட், திரு. எஸ். ஏ. விமலசேகரம். செயலாளர்: திரு. வி. ஜே. கொன்ஸ்டன்டைன். உப செயலாளர்: திரு. ஏ. ரூபர் யேசுதாசன். பொருளாளர்: திரு. என் ஏ. யேசுதாசன். உப பொருளாளர்: திரு. எஸ். எட்வர்ட். நிர்வாக உறுப்பினர்: திரு பி. அந்தோனிப்பிள்ளை, திரு. வி. ஜோசப், திரு. பி. எஸ். அமிர்தநாதர், திரு. எஸ். மரியதாஸ், திரு. எஸ். அன்ரன் ஜோசப், சங்கப் பாதுகாவலர்: திரு. எஸ். லூயிஸ் அல்பிரட், திரு. என். ஏ. இம்மானுவேல், திரு. எஸ். இராஜநாயகம்.

திரு. சூ. கிறிஸ்தோபர் நன்றியுரை கூறினர்.

இப்பொழுது
திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடோர்ன் (பதுளை)
தீவொளி (நுவெரேலியா)

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்

தெய்வத்தாய்

இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி

# வரி விளம்பரம்

## தேவை

மனேஜர், உதவி மனேஜர், ரெக்னீசியன்ஸ், மெக்கானிக்ஸ்.

மனேஜர், உதவிமனேஜர், ரெக்னீசியன்ஸ் அனுபவமுள்ள டிராக்டர் மெக்கானிக்ஸ் தேவை. விபரங்கட்டு அசோகா என்ஜினியரிங் கோப்பரேஷன், உயிலங்குளம், 375

விற்பனையாளர்கள்

விற்பனையாளர்கள்தேவை. நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றீஸ், (வெலிங்டன் சந்தி)யாழ்ப்பாணம். 389

அச்சுக்கோர்ப்பதில் பயிற்சி பெறுபவர்கள்

தினசரிப்பத்திரிகை ஒன்றுக்கு அச்சுக்கோர்ப்பதில் (கொம்போஸிங்) பயிற்சி பெறுவதற்குப் படித்த இளைஞர்கள்உடனடியாகத்தேவை. தமிழ்மொழியில் போதுமான அறிவு பெற்றிருப்பது அவசியம். ஆங்கிலத்தில் அறிவு பெற்றிருப்பது மேலதிக தராதரமாகக்கணிக்கப்படும், விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்குட்பட்டவர்களாகவும் நல்ல உடலுறுதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். விளம்பர இலக்கம்: 383 'ஈழநாடு' மேற்பார்த்து த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 28-5-66 383

தொழிலாளர்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஆரம்பித்த பித்தளை உருக்குத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பித்தளைப் பிணைச்சல்கள், கைபிடிகள், பூட்டுகள் மற்றும் பித்தளைச் சாமான்களை உயர்ந்த முறையில் மட்டசுத்தமாக எமரி (EMERY) அடித்து பொலிஸ் (POLISH) செய்வதற்கு சுமார் ஐந்து வருட அனுபவம் வாய்ந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் உடனே தேவை விளம்பரஇல. 382, ஈழநாடு த/பா என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 382

### வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

கடையும் வீடும்

நான்கு அறைகளுள்ள கடையும் தற்கால முறைப்படி அமைந்தவீடும்வளவும்- யாழ்ப்பாணப் புகையிரத வீதிச் சந்தியில். எவ்வித வியாபாரத்திற்கும் குடியிருப்பிற்கும் சிறந்தவை. விபரங்கள் தருபவர் இம்மானுவேல், ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். 394

## தமிழணங்கினரை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நான்கு குழுவினராகப் பிரிக்கப்பட்டு, மூன்று நான்குதிசைகளில் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. இது ஒரு சிறந்த ஏற்பாடுதான். ஆயினும், இதனை மற்றொரு வகையில் அமைத்திருப்பின் மிகமிகச் சிறந்த ஏற்பாடாகி பாராட்டத் தக்கதாயிருந்திருக்கும். ஒவ்வொரு நாளும காலைநிகழ்ச்சியாக அறிஞர் கருத்தரங்கும் மாலை நிகழ்ச்சியாகப் பல்லாபிரவர் ஒருங்குகேட்டுப் பயனடையத் தக்க வகையில் பொதுக்கூட்டம் என் நிகழ்ச்சியை அமைத்திருப்பின் அது ஓர் அரிய சாதனையாய்த் திகழ்ந்திருக்கும்.

## விற்பனைக்கு

பொருளியல் மாதிரி வினவிடைகள்

பொருளியல் (54 மாதிரி வினவிடைகள்) G. A. Q, A/L, பரீட்சைகளுக்காக வெளியிடப்பட்டுள்ளது. விலை 12-00, தபாற்செலவு 1/50. மா புவனேந்திரன், வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 379

காணி

பூனகரி பட்டினத்தின் குடியிருப்புப் பகுதியில் 126 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பெரிரேட் முன்னல் உள்ளது. பூனகரிசச் சந்தியிலிருந்து 100 யார்தூரத்திலுள்ளது. விலையைக் குறிப்பிட்டெழுதவும். செல்லப்பா சிவலிங்கம். வறுத்தலைவிளான், தெல்லிப்பளை. 395

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

எனது சகோதரன் செல்வன் குகானந்தனுக்கும் (பளை தட்டுவன்கொட்டி தோட்ட அதிபர்) 13 லஸ்கொரின் வீதி, கொட்டாஞ்சேனையில் உள்ள குமாரசுவாமி தம்பதிகளின் புத்திரி செல்வி பரமேஸ்வரிக்கும் 1-6-66 காலை 6 தொடக்கம் 8-30 வரையில் வரும் சுபநேரத்தில், திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அன்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படமாட்டாது. நல்வரவை எதிர்பார்க்கும் சிவப்பிரகாசம் தம்பதிகள். P 108, அரசாங்க மாடி வீடு, கொழும்பு 5. 385

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கேவுாலடி, யாழ்ப்பாணம்

## வைத்தியம்

சலக் கழிச்சல், தோசம்ல் பந்தமான சொறி, சிரங்கு தேமல், கரப்பான் முதலிய வியாதிகள் குணப்படுத்த உத்தரவாதம். சச்சிதானந்தா வைத்தியசாலை, இந்திரன் அம்மன் கோவிலடி துன்னலை வடக்கு, கரவெட்டி. 324

## வாடகைக்கு

3 அறைகளும், புறம்பான குசினியும் உள்ள வீடு வாடகைக்கு இருக்கிறது. விபரங்கள் நேரில் அறிந்துகொள்ளவும். 245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 397

## மரண அறிவித்தல்

தங்கம்மா

காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் கந்தையா, திருமதி அ. செல்லம்மா ஆகியோரின் தாயாரும், ஓய்வு பெற்ற பெல்மதுளை ஓவசியர் திரு. அரியரத்தினத்தின் மாமியாருமான திருமதி செல்லப்பா தங்கம்மா காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று மாலை செம்மணி மயானத்தில் நடைபெறும். செல்வபதி, 89, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியத் தமிழ் மாநாடு போதித்தவை

# தமிழணங்கினரை நாணச் செய்த ஆங்கில நங்கையின் மழலைத் தமிழ்

## தமிழின் பழமையை ஆராய்ந்தவர்கள் பாரதி கூறிய புதுமையை மறந்தனரே !

(வித்துவான் பொன். முத்துக்குமாரன் )



கட்டுரையாசிரியா

மேனியின் வண்ணம் அவர் ஒரு மேல்நாட்டுமங்கையர் எனப்பறைசாற்றுகின்றது. இடையில் உடுத்த உடையும் தலையில் முடித்த முடியும் அவர் ஒரு தமிழ்நாட்டுத் தயலாரென்றே சாட்சிசொல்கின்றன. இத்தகைய இளநங்கையர் ஒருவர் மாநாடு காண வருகின்றார். மலேசிய தமிழ்நாட்டுக்கு வந்த விருந்தினர் தங்கும் இடமும் கருத்தரங்கு நிகழும் கலாமண்டபமும் இணைந்தமைந்துள்ள இடம் மலேசியப் பல்கலைக்கழகத்து மூன்றுவது கல்லூரியான வானளாயமாபெரும் கட்டிடம். அக்கல்லூரியின் அழகியவாயில் அந்நங்கையர் நுழைகின்றார். வாயிலின் முன்னமைந்த வரவேற்பு அறையில் தமிழணங்கினர் சாதுரியமாகக் கடமையாற்றுகின்றனர், அவர்களில் ஒருவர் விருந்தினரின் பெயரை வினவி, மாநாட்டு இலச்சினை பொறித்த பட்டியைக் கொடுப்பார். மற்றொருவர் விருந்தினர் தங்கும் அறையின் திறவுகோலை வழங்குவார். வேறொருவர், மாநாட்டில்நிகழ்த்த விருக்கும் ஆய்வுக்கட்டுரைகளின்பிரதிகளை அளிப்பார். இவ்வாறே அவ்வணங்கினல்லார் ஒவ்வொருவரும் தமக்கமைந்த ஒவ்வொருபணியை உவந்து விரைந்து செய்குவர். விருந்தினராய் வாயிலில் நுழைந்த அந்நங்கையர் அந்தத் தமிழணங்கினர் முன்புசென்றார். அவரைக் கண்டதும் அவ்வணங்கினரில் ஒருவர் 'Your name please?' என வினவினார். நினைக்குந்தோறும் பேசுந்தோறும் எப்போதும் அனைத்தும் ஆங்கிலமேமயமான அவ்வணங்கினல்லார்க்கு அந் நங்கையர் அமிழ்தமயமான தமிழில் அளித்தபதில் ஆச்சரியத்தையளித்தது. "என் பெயரையா கேட்கிறீர்கள்? என்பெயர் பிருந்தா' என அவர் மழலை மொழியில் கூறிய மதுரத்தமிழைக் கேட்டதும் அந்த அணங்கினல்லாரின் அழகியமுகம் நாணத்தாற் சிவந்தது. தமிழன்பர் நெஞ்சம் தமிழ்வாழும் என்று உவந்தது. தமிழ் மாநாட்டில், தமிழ் மாநாடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் ஆங்கில உரையாடல் அந்த அணங்கினல்லாரிடத்தில்மட்டும் தான் நிகழ்ந்தது, மற்றும் எங்கும் தமிழ் என்பதே பேச்சு என்று யாரும் நினைத்தால் அது தவறு. தமிழ்மாநாட்டில் எங்கும் யாரும் ஆங்கிலத்திற்றான் உரையாடினர். இடையிடை தமிழும் ஒலித்தது. வரவேற்பு அறையில் அந்த ஆங்கிலநங்கை விருந்தினராய்வந்து தமிழ் மாநாட்டில் எங்கும் எப்போதும் யாருடனும் அழகிய மழலைத்தமிழில் உரையாடிய ஆங்கில மங்கையின் அந்த நிகழ்ச்சி மாநாட்டினர்க்கும், மலேசியத் தமிழ் மக்களுக்கும் மற்றுள்ள தமிழ்கூறு நல்லுலகத்திற்கும் ஓர் அரிய அறிவுரை போதித்தது. அவசியம்நேர்ந்தபோதன்றித் தமிழ் மக்கள் தம் தாய் மொழியிலேயே உரையாடல் வேண்டும்; தமிழ்மொழியிலேயே தம் தம் கருமத்தை ஆற்ற வேண்டும்; அங்ஙனமன்றி தமிழ்மக்களே தமிழிற் பேசவே கூசினால், அந்நிய மொழியினர் நம்தமிழைக் கற்று நல்ல தமிழில் பேசி நம்மை நாணித்தலை குனியச்செய்வர்.

### ஆர்வம்பெரிது நேரம் சிறிது

மாநாட்டின் கருத்தரங்கு 18-4-56முதல் 23-4-66 வரை காலையும் மாலையும் முறையாய்த் தொடர்ந்து நிகழ்ந்துமுடிவுற்றன. ஒவ்வொரு நேர நிகழச்சியிலும் பலநாட்டுப் பேரறிஞர்கள் பதின்மருக்குக் குறையாத எண்ணிக்கையினர் கருத்துரை வழங்கலில்கலந்து கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவரதும் ஆர்வமோ மிகப் பெரியது! அவர்களுக்குக் கொடுத்த நேரமோ மிகச் சிறியது! இத்தகைய நிகழ்ச்சியை எங்காயினும் காண்பதுவோ மிக மிக அரிது! ஆயினும், மேலைத்தேய அறிஞர்களும், கீழைத்தேய அறிஞர்களும் ஒருமுகமாக, தமிழ் நினைவாக, ஒருங்கு கூடவும், தமக்குள் கலந்து உரையாடவும், அதனால் ஒருவர் அறிந்த உயர்ந்த சிந்தனைகளை ஒருவர் அறியவும் வாய்ப்பு ஏற்பட்டதை அதனை இம் மாநாடு ஏற்படுத்திச் சாதித்ததை நோக்கும் போது அதுவே பெரிய ஆக்கவேலை எனலாம்.

### பழமைதான்; புதுமை இல்லை

மாநாடு எதனை ஆராய்ந்தது? பண்டைத் தமிழர் வாழ்வை ஆராய்ந்தது! பண்டைய இலக்கியப் பண்பை ஆராய்ந்தது! பண்டைய வரலாற்றை ஆராய்ந்தது! பண்டைய அரசியலை ஆராய்ந்தது! சங்ககாலம்முதல் ஆங்கிலேயர்காலம்வரை சல்லடை இட்டு ஆராயப்பட்டது; தொல்காப்பியனார் முதல் கிறிஸ்தவ பாதிரிமார்வரை தமிழ்வளர்த்த பெரியாரெல்லாம் பேசப்பட்டனர். தமிழ் பிறந்து, தமிழ் தவழ்ந்து, தமிழ் நடந்து தமிழ் விளையாடி, தமிழ் தன்னாட்டிலும் பன்னாட்டிலும் தழைத்து வாழ்ந்த வாழ்வெல்லாம் ஆராயப்பட்டன. இதே சமயத்தில் ஒன்று மாத்திரம் மறக்கப்பட்டது. அது எது? பாரதியார் பாடிய ஓர் அருமைப்பாட்டு. அந்த அருமைப் பாடலின் பொருள் மாநாட்டில் மறந்தோ மறைந்தோ போய்விட்டது. இரண்டொருவர்எண் ணியுமிருப்பர்.

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடையபுது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும், மறைவால் நமக்குள்ளே பழங் கதையைச் சொல்வதிலோர் மகிமையில்லை, திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதைவணக்கம்செய்தல்வேண்டும்'

எந்தக் கருமத்தைச் செய்யுமுன்னும் விநாயகரை நினைத்தல் சைவர்களின் தலையாயகடன், எந்தத் தமிழ்மாநாடு கருத்தரங்கு நடத்துமுன்னும் இந்தப்பாடலை நினைந்து நடத்தல் தமிழ் மாநாட்டாரின் தலையாய கடன்.

முன்னொரு காலத்திலே பாண்டிநாட்டிலே பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சமோ கொடும்பஞ்சம்! மன்னன் சிந்தித்தான். புலவர்கள் வாடவோ, வருந்தவோ அவன் மனம் சகிக்கவில்லை. புலவர்களை அழைத்தான். எல்லாப் புலவர்களும் அரசவையை அடைந்தனர். "புலவர்களே, என்நாடு மழையின்மையினால் வறுமைக்கு இடமாயிற்று, நீங்கள் எல்லாம் வளமுள்ள நாட்டுக்குச் செல்லுங்கள். என்நாடு மீண்டும் வளம் பெற்றதும் மறவாது வந்துசேருங்கள்" என்று வருத்தத்தோடு கூறி வழியனுப்பி வைத்தான். சில ஆண்டுகள் கழிந்தன. பாண்டியநாட்டில் மழை பொழிந்தது. வளம் நிறைந்தது. மன்னன் எல்லா நாட்டுக்கும் தூதரை அனுப்பிப் புலவர்களை அழைப்பித்தான். புலவர்கள் இருவர் மூவராய்ப் பலர் வந்து சேர்ந்தனர். அவர்களனைவரையும் அவன் தன் அவைக்கு அழைத்து உபசரித்து, அவர்களில் ஒவ்வொருவரது திறமையையும் ஆராய்ந்தான். அங்ஙனம்ஆராய்ந்த முடிவில் அவன்மனம் ஆனந்தப்படவில்லை. கவலையில் ஆழ்ந்தது. அங்கு வந்த புலவர்களில் எழுத்ததிகாரம் வல்ல புலவர்கள் பலர் இருந்தனர். சொல்லதிகாரம் வல்ல புலவர்கள் பற்பலர் சூழ்ந்திருந்தனர். ஆயினும் என்ன? பொருளதிகாரம் வல்லவர் சிலராயினும்-இல்லை ஒருவராயினும் அங்கு இருந்தாரா? இல்லையே. அது போல மலேசிய மகாநாட்டில் பண்டை நூல்களை ஆராய்ந்தோர் பலர், பற்பலர் இருந்தனர். இற்றைக்கு வேண்டிய எதிர்காலத்திற்கு இன்றியமையாத பொருளதிகாரம், அகப்புறப்பொருள் வல்ல புலவர் ஒருவராயினும் வந்தாரா? இல்லையே, நன்றாக இல்லையே?

### நிகழ்ச்சியை மாற்றியமைத்திருக்கலாம்

பிராமணன் பிராமணன் அல்லாதானையும் பிராமணனாக உயரச்செய்யும் பணியினாலேயே தான் பிராமணன் ஆகின்றான். கற்றவன் கல்லாதவனையும் தன்னைப்போல் அறிவுடையவனாக்குவதனாலேயே தான் கற்றவன் என்ற தகுதியைப் பெறுகின்றான். கற்றவன் தன்னையொத்த கற்றவர்களுக்குத் தன் கல்வித்திறமையைக் காட்டுவதால் அவன் கற்றவனென்ற தகுதியையும் தலைமையையும் பெறுதல் ஒருபோதும் இல்லை. அதுபோல கற்றவர் கூடி ஆராயும் கருத்தரங்கு அக்கற்றவர்களின் அளவோடு நின்று கற்றவர்களுக்கு மாத்திரம் களிப்பினையும் பெருமையினையும் அளிப்பதால் ஒருவித பயனும் இல்லை. கற்றவர்களது கருத்தரங்கானது எவ்வளவு கடினமானதாயினும் பொது மக்களின் பொருட்டு எளிமையானதாகி, எவ்வளவு நுண்மையானதாயினும் அந்தப் பொதுமக்களின் நன்மையின் பொருட்டுப் பருமையானதாகி, பொது மக்களை வாழ்விக்கவல்லதாயிருத்தல் வேண்டும். மலேசியத் தமிழ்மாநாட்டின் கருத்தரங்கு ஆறு நாளும் உரிமையுடைய சிலருக்குப் பயன்தருமளவினதாயே நடந்துமுடிந்தது. அதனைப்பற்றி அறியாத மக்கள் ஆயிரர், பல்லாயிரர் என அநேகர். அக்கருத்தரங்கு எல்லாம் முடிந்தபின், அறிஞர்கள்

(5-ம் பக்கம் பார்க்க)



தமிழாராய்ச்சி மகாநாட்டையும் கருத்தரங்கையும் மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்துகிறார்.



தமிழாராய்ச்சிக் கருத்தரங்கில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டவர்களில் சிலர்.

யாழ். மத்தியகல்லூரி

ஜி. சி. ஈ. (உயர்தரம்) முதலாவது ஆண்டு விஞ்ஞான, கலை வகுப்புகளில் சில இடங்கள் மட்டுமே உண்டு. கல்லூரி காரியாலயத்திலிருந்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று 30-5-66-ந் திகதியோ அன்றேல் அதற்கு முன்னதாகவோ விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். 440

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ் பேசும் சிறுபாலார்

## முஸ்லிம்கள்

(ஏ. எம். ஏ. அஸீஸ்)

16-ம் நூற்றூண்டில், ஐரோப்பியர்கள் இந்தியா செல்வதற்குக் கடல்மார்க்கமான பாதையைக்கண்டுபிடித்து, இந்துசமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டமை, முஸ்லிம்கள் வாணிபத்துறையில் வகித்து வந்த முதன்மை ஸ்தானம் ஆட்டம் காண்பதற்குக் காலாயிற்று வெளிநாட்டு வாணிபத்தில் ஏகபோக ஆதிக்கமும் உள்நாட்டுவர்த்தகத்தில் பெருஞ் செல்வாக்கும் செலுத்திவந்த இலங்கை முஸ்லிம்களுக்கு இது பேரிடியாக அமைந்தது. இவர்களில் சிலர் கமக்காரர்களாகவோ அங்காடி வியாபாரிகளாகவோ மாறினர். முஸ்லிம்கள் கொழும்பு நகர எல்லைக்குள் வீடு கட்டவோ காணிகொள்ளவோ கூடாதென்று ஒல்லாந்தர்கள் விதித்திருந்ததடை 1832-ம் ஆண்டிற்றான் பிரித்தானிய ஆட்சியாளர்களால் நீக்கப்பெற்றது

இதனைத்தொடர்ந்துவந்த அரைநூற்றூண்டு காலத்தில் (1832—1882) பிரித்தானியர்கள் இலங்கை முழுவதிலும் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். தமதுமூலதனத்தைக் கோப்பி போன்ற பயிர்ச் செய்கை முயற்சிகளில் முதலீடு செய்தார்கள். நாட்டை வளப்படுத்தினார்கள். உள்ளூர் மக்களுக்கும் புதிய வேலை வாய்ப்புக்கள் கல்வி வசதிகள் ஆகியவற்றைவழங்கினார்கள். ஆனால் இலங்கை முஸ்லிம்களோ, ஐரோப்பிய வாழ்க்கை முறையும் கிறிஸ்துவ மதமும் இரண்டறக் கலந்ததென்ற எண்ணத்தினால் ஐரோப்பிய நாகரிகத்தையே வெறுத்து வந்ததன் காரணமாகவும் நாட்டின் பொருளாதார அமைப்பில் ஏற்பட்டுவந்தமாற்றத்தைப் புரிந்துகொள்ளத் தவறியமை காரணமாவும் மேற்குறித்த வாய்ப்புகளினால் பயனடையாது போயினர். ஆயினும் மதமாற்றத்திற்கு இடமளியாதிருந்தமையின் காரணமாகத் தமது சமுதாயத் தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொண்டார்கள். முஸ்லிம் பகுதியெங்கணும், நகரம், கிராமம் என்ற பேதமின்றி நிறுவப்பட்டிருந்த பள்ளிவாசல்கள் பேணிக் காத்துவந்த சமூக-சமயக் கட்டுக்கோப்பு சீர்குலையாதவாறு சமுதாயத்தில் ஆலிம்கள் தொண்டு புரிந்தமையால் இந்நிலை ஏதுவாயிற்று.

இதே காலக்கட்டத்தில் (1880). இலங்கையின் ஏனைய இனத்தவர்களாகிய பௌத்தர்களும் இந்துக்களும்தமது இனமும் மதமும் கலாசாரமும் நிலைபெற்றிருக்க வேண்டுமானால் ஐரோப்பிய நெறிகளுக்கும் ஆசிய ஆதாரங்களுக்குமிடையில் ஒருவித இணக்கம் காணவேண்டியது இன்றியமையாததென்பதையுணர்ந்து, அதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்தார்கள். செய்யது அஹமத் ஹான் அவர்கள், இந்திய முஸ்லிம்கள் மத்தியில் ஐரோப்பியக் கல்வி முறையைப் பரப்பும்பொருட்டு மேற்கொண்ட வெற்றிகரமான முயற்சிகள் பற்றியும் இலங்கை முஸ்லிம்கள் அறிந்திருந்தார்கள். இதுவிஷயத்

(VIII-ம் பக்கம் பார்க்க)

## இந்தியர்கள்


(பி. பஸ்தியாம்பிள்ளை)

இவ்வாராய்ச்சிக் கட்டுரை 19-ம் நூற்றூண்டின் முற்பகுதியில் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த தோட்டத் தொழிலாளர்களின் சமூக நிலைமையைச் சுருக்கமாக எடுத்துக்காட்டும். 19-ம் நூற்றூண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயரது முயற்சியால் இலங்கையின் பொருளாதார நிலை மாறியது. அவர்களது உழைப்பினால்நெற்பயிர்ச்செய்கை ஆகிறுவாப்பயிர்ச் செய்கை ஆகியன கைவிடப்பட்டு கோப்பிப் பயிர்ச்செய்கை அதிகமாக ஆரம்பிக்கப்பட்டது.

உண்மையில் கோப்பிப் பயிரிடுவரலாற்றில் 1870-ம் 80-ம் ஆண்டுகளே மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதனால் இப்பத்து ஆண்டுகளில் இக்கோப்பிப் பயிரீட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட இந்தியத் தொழிலாளர்களுடைய சமூகநிலையைப் பற்றி ஆராய்வது ஓர் அவசியமான செயலாகும். ஆனால், இக்காலத்துக்கு முன்பும் பின்பும் இத்தொழிலாளர்களிடையே நிலவிய சமூகநிலையையும் ஒப்பிட்டுக்காட்ட முயலப்படுகிறது.

வேறு சில குடியேற்ற நாடுகளில் இந்தியத்தோட்டத் தொழிலாளரிடையே நிலவிய சமூக நிலையையும் இலங்கையில் அவர்களிடையே நிலவிய சமூகநிலையையும் பல இயல்புகளில் ஒப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன். மற்றைய இந்தியத் தோட்டத்தொழிலா

(VIII-ம் பக்கம் பார்க்க)



படம்: லீலா ஸ்டுடியோ

1949-ல் யாழ்ப்பாண மாநகரசபையாக உயர் அந்தஸ்து பெற்றதும் பதினைந்து வட்டாரங்களாகவும் இதனைத் தொடர்ந்து 1964-ம் ஆண்டு பதினேழு வட்டாரங்களாகவும் விஸ்தரிக்கப்பட்டது.

இப்போதுள்ள மாநகரசபை கட்டடம் 1932-ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. இதனை மாவட்ட நகர சபைத் தலைவராகவிருந்த திரு. ஆர். ஆர். நல்லையா திறந்துவைத்தார். நகரசபையைப் பொறுத்தவரை திரு. சி. பொன்னம்பலம் கடைசித் தலைவராகவிருந்தார். இப்போது கவர்ச்சிகரமாகக் காட்சியளிக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபையைக் கட்டி முடிக்க மூன்று லட்சம் ரூபாமட்டுமே செலவு ஏற்பட்டது. மூக்கில் விரல் வைக்காதீர்கள். அது அந்தக் காலம். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இச்செலவில் சிறிதளவு கூட அரசாங்கம் கொடுக்கவில்லை. எல்லாமே நமது சொந்தப்பணம்தான்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல் மேயராக விருந்தவர் திரு. சாம் ஏ. சபாபதியாவர். இவர் நகர சபையிலும் பதவி வகித்திருந்தார். யாழ்ப்பாணம் மாநகரசபையில் மேயராக பதவிவகித்தவர்கள் விபரம் இதோ: திரு. சாம் ஏ. சபாபதி: 6-1-49—31-12-49. திரு க பொன்னம்பலம்: 6-1-50—31-12-51. திரு சாம் ஏ சபாபதி: 11-1-52—31-12-54. காதி மொசு ம மொ சுல்தான்: 5-1-55—31-12-55. திரு செ ச நவரத்தினம்: 16-1-56—31-12-57. திரு பொ காசிப்பிள்ளை: 6-1-58—4-8-58. திரு அ த துரையப்பா: 11-8-58—28-6-60. திரு பொ காசிப்பிள்ளை: 6-7-60—31-12-60. திரு தா ச துரைராஜா: 7-1-61—12-2 62. திரு ம ஜேக்கப்: 19-2-62—15-5-62. டாக்டர் ச அ தருமலிங்கம்: 28-5-62—4-4-63. திரு பீ ம ஜோன்: 11-4-63—6-5-63. திரு ச துரைராஜா: 15-5-63—30-6-64. திரு சு செ மகாதேவா: 8-7-64—31-12-65. திரு சி நாகராசா: 8-1-66—24-3 66. தற்போதைய மேயர் திரு அ த துரையப்பா.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் கடந்த வருட மொத்தவருமானம் சுமார் 45 லட்சம் ரூபா. இலங்கையில் கொழும்பு மாநகரசபைக்கு அடுத்ததாக கட்டடத்திலும் வருமானத்திலும் யாழ்ப்பாணம் மாநகரசபை விளங்குகிறது. ஒரு இரகசியம்: யாழ்ப்பாணம் மாநகர சபையின் வட்டாரங்கள் விஸ்தரிக்கப்பட்டு எல்லையும் விஸ்தரிக்கப்படுமானால்...புதிய நகரமண்டபமொன்று தற்போதுள்ள மாநகரசபைக்கு பின்புறமாக சவுக்கு மரங்களிருக்கும் டச்சுக்கால சேமக்காலையில் எழப்போகிறது!

—மகான்

—1—

# சைவ சமய ஆலயங்களும் நிர்வாகச் சீர்திருத்தமும்

## க. வை. ஆ. சர்மா

ஆன்மா லயப்படும் இடம் ஆலயம். லயப்படுதல் மன ஒடுக்கம் பெறுதல். சமய ஆலயங்கள்- வழிபடும் இடங்கள், சைவசமய ஆலயங்கள் சைவத்திருக் கோவில்கள் எனவும் வழங்கப்படுவன, நிர்வாகம் என்பது ஒன்றினது அமைப்பு முறையும் நடத்தும் ஒழுங்குமாகும். ''செய்வன திருந்தச் செய்'' என்பது நீதிநெறி. எந்த ஒரு செயலையும் இயன்றவரையும் திருத்தமாகச் செய்யவேண்டியது மக்கள் கடன். அதுவே சீர் திருத்தம் எனப்படுவது.

ஈழத்திருநாட்டிலே உள்ள சைவசமய ஆலயங்களின் நிர்வாகச் சீர்திருத்தம்பற்றியதாகவே இக்கட்டுரைத் தொடர் அமையும். எல்லாச் சீவராசிகளும் உயிர் வாழ்கின்றன, அவை வாழத்தான் பிறந்தன. அவற்றுள் சிறந்தவன் மனிதன். எதனால்? செய்யத்தக்கன இவை, செய்யத்தகாதன இவை எனப் பிரித்து உணரும் ஆற்றல் சிறப்பாக அவனுக்கு இருப்பதனால் மனிதன் சிறந்தவன். அந்த ஆற்றலை உணர்ந்து பயன்படுத்தானாயின் அவன் இழிந்தவனாவன்.

''தக்க வின்ன தகாதன
வின்னவென்(று)
ஒக்க வுன்னல ராயின்
உயர்ந்துள
மக்களும் விலங்கே''...என்பது அறிஞர் உரை.

இன்பமுந்துன்பமுங் கலந்துள்ளது மனித வாழ்வு. இயன்றவரையும் துன்பத்தை நீக்கி இன்பமாக வாழ விரும்புவது மனித இயல்பு. அடுத்தடுத்து இன்ப நுகர்ச்சிகளே ஒருவனுக்கு வந்துகொண்டிருக்குமாயின், அவன் தன்னையறியாமலே குணம் மாறிவிடுவான்; இன்பத்தின் பெருமதியை மறந்துவிடுவான். ஒரே சுவையுள்ள பண்டத்தை மீண்டும் மீண்டும் உண்பதானால் அது தெவிட்டிவிடுமன்றோ. அதனாலேயே, இன்பதுன்பங்கள் மாறி மாறி எமக்கு அருளப்படுகின்றன. துன்பம் வரும் போதுதான் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தெய்வம் என ஒன்று இருக்கிறது என்ற உணர்ச்சி மனிதனுக்கு வருகிறது. இன்பத்தையும் துன்பத்தையும் சமபுத்தி பண்ணி வாழ்பவனை அவை பாதிப்பதில்லை. அதுவே உத்தம ஒழுக்கம்.

''நல்ல குருநாதன் நம்மை
வருத்துவது
கொல்லவல்லக் கொல்ல
வல்ல நமது
பொல்லாக் குணம்
போக்க''

என்பதை நாம் ஒரு போதும் மறக்கலாகாது.

இன்பதுன்பங்களைச் சமபுத்தி பண்ணி ஏற்று வாழும் பயிற்சி ஒருவனுக்கு இலகுவில் கைகூடிவிடாது. அதற்குக் கடவுள் வழிபாடு செய்வதுதான் உரிய வழியாகும். கடவுள் வழிபாடு ஆன்மார்த்தமாகவும் பரார்த்தமாகவும் செய்யப்படவேண்டும். தன்பொருட்டாகமாத்திரம் செய்யப்படுவது ஆன்மார்த்த வழிபாடு. தன்பொருட்டாகவும் பிறர் பொருட்டாகவும் செய்யப்படுவது பரார்த்த வழிபாடு-ஆலய வழிபாடு.

ஒருவன் தான் தன்துவீட்டிலே நித்தியமும் செய்யும் சந்தியாவந்தனம், ஜபதபம்: உடையவர்பூஜை (சிவ பூஜை செய்தல்), நித்திய அக்கினி காரியம் என்பன ஆன்மார்த்த வழிபாட்டிலே அமையும். அவற்றைப்பற்றி இங்கு குறித்தல் மற்றொன்று விரித்தலாய்விடும்.

ஒருவன் தனக்காகமாத்திரம் உயிர்வாழ்வதில்லை, வாழவும் முடியாது. தான் வாழும் அதே நேரத்தில் எத்தனையோ பிறரையும் வாழவைக்கவேண்டும் ஆன்மார்த்த வழிபாடுமாத்திரம் ஒருவனுக்குப் போதாதா? எல்லோரும் ஆலய வழிபாடு செய்யத்தான்வேண்டுமா? என்று கேட்பவர்கள் எமக்கு வழிகாட்ட அவதரித்த சைவசமயகுரவர் முதலான பெரியார்களின் வாழ்க்கை முறையைச் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதனாலேதான் தன்பொருட்டாகவும் பிறர்பொருட்டாகவும் செய்யப்படுவது பரார்த்த வழிபாடு-ஆலய வழிபாடு எனக் குறிக்கப்பட்டது.

முதலில், ஆலயம் அமைய வேண்டிய இடம்பற்றிச் சிந்திக்கவேண்டும் ஊருக்கு ஓர் ஆலயம் இருக்கவேண்டும். இன்னும் சிறிது கூட்டிக் கணிப்பதானல் கிராமத்துக்கு ஒருகோவில் போதுமானது. ஏனெனில்-

''கோவில் இல்லாவூரில் குடியிருக்கவேண்டாம்''

என்றும்,

''ஆலயந் தொழுவது
சாலவும் நன்று''

என்றும் அமைந்த நீதிவாக்கியங்கள் கருத்தில் பாதனவாகிவிடும். அப்படியன்றித் தெருவுக்கொரு ஆலயம், திரும்பிய திசைகள்தோறும் ஆலயம், குறிச்சிகள்தோறும் ஆலயம் அமைப்பதானால் எந்த ஓர் ஆலயத்தையும் முறைப்படி நிர்வாகிக்க முடியாத நிலை வந்துவிடும். அது மாத்திரமல்ல, ஆலயங்களுக்குரிய புனிதத்தன்மை குறையநேரிடும். நகரங்களில் அமைந்துள்ள ஆலயங்களைத் தவிர்த்து நாட்டுப்புறங்களில் அமைந்துள்ளவற்றின் இடத்தைச் சிறிது உற்று நோக்கினால், அவை குடியிருப்புக்குச் சிறிது தூரத்தில் வயற்கரைகளை, குளக்கரைகளை, ஆற்றங்கரைகளை அடுத்து அமைந்திருப்பதை காணலாம். ஆலயங்களைச் சூழவர எவரும் குடியிருத்தல் தகாது என்ற நோக்கத்தினாலேயே முன்னோர் இப்படி அமைத்தனர்போலும். போட்டி மனப்பான்மையினாலாவது, அதிகார வெறியினாலாவது தற்புகழ்ச்சியை விரும்பியாவது ஆலயங்களை

(VIIIம் பக்கம் பார்க்க)

ஈழநா
வார ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை (IIIம்பக்கத்தொடர்ச்சி)

போலிருக்கும் ராய்சந்திரனுக்கு. தனது சின்ன எஜமான்தான் மறுபடியும் பெயில்ஞவாகப் பிறந்திருக்கிருன் என்றுகூட எண்ண ஆரம்பித்துவிட்டான். சின்ன எஜமானின் இறப்பையடுத்து பெயில்ஞ பிறந்தாலும், தனது மனைவி இந்த வயது சென்ற காலத்தில் இப்படியொரு அழகான குழந்தையைப்பெற்றெடுத்தது அபூர்வமென்று அவன் கருதியதாலும், பெயில்ஞவின் பழக்க வழக்கங்களில் — ''மா-மா'', ''பா-பா......'' என்று உச்சரிக்கும் விதங்களில் தனது சின்ன எஜமானைப்போல அப்படியொரு தனியொற்றுமை இருப்பதாலும் நிச்சயமாகத் தனது சின்னஎஜமான்தான் மறுபடியும் பெயில்ஞவாகப் பிறந்திருப்பதாக ஊர்ஜிதம்பண்ணிக்கொண்டான் ராய்சந்திரன். இந்த எண்ணமெல்லாம் மனதில் தோன்றும்போது, ''அடே, எனது எஜமானி சொன்னது அத்தனையும் சரி! ஆமாம்! அவரது குழந்தையை நான்தான் திருடிக்கொண்டுவிட்டேன்'' என்று அடிக்கடி தனக்குள் சொல்லிக்கொள்வான்.

பெயில்ஞவுக்காகஎதையும் செய்யத் தயாராயிருந்தான் ராய்சந்திரன். பெயில்ஞவை ஒரு செல்வந்தரின் மகன் போல வளர்த்துவிடவேண்டுமென்ற ஆசை அவனது எலும்புவரைஊறியிருந்தது. தனது சின்ன எஜமான் எப்படி வளர்க்கப்பட்டாரோ, அதுபோலத்தங்கஆபரணம், மணிமாலை ... இத்தியாதிகளெல்லாம் வாங்கிப்போட்டு அழகுபார்த்தான் ராய்சந்திரன்.

பெயில்ஞ பாடசாலைக்குப் போகும் பருவம் வந்தது. தன்னிடமிருந்த ஒரு சிறு நிலத்தையும் விற்றுக்கொண்டு பெயில்ஞவுடன் கல்கத்தாவுக்குப் போனுன். பெரும் சிரமப்பட்டு ஒரு வேலை தேடிக்கொண்டான். பெயில்ஞவைப் பெரிய பாடசாலையொன்றில் சேர்த்துப் படிக்கவைத்தான். பெயில்ஞவுக்கு ஒருவித மனக்கசப்பும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதுதான் ராய்சந்திரனின் பெருங்கவலையாயிருந்தது. தனக்கென்ற எண்ணமே இல்லாது எல்லாவற்றையும் மகனுக்கு சர்வபரித்தியாகம் செய்துவந்தான் ராய்சந்திரன்.

இப்படிப் பதினைந்து வருடங்கள் கழிந்துவிட்டன. பெயில்ஞ கல்விபயின்றுபெரியவனுகிவிட்டான். திடகாத்திரமான உடலுடன்ஒரு அழகான வாலிபனுகக்காட்சிதந்தான் பெயில்ஞ. இத்தனைக்கும் ராய்சந்திரன் தானே பெயில்ஞவின் தகப்பனென்றவிஷயத்தை வெளியிடவேயில்லை. பெயில்ஞவுக்கும் ராய்சந்திரனை தகப்பஞக மதிக்க முடியவில்லை. அவ்வளவுக்கு ஒரு வேலைக்காரன் போல பெயில்ஞவுடன் நடந்துகொண்டான். தன்னிடம் வளர்க்கும்பொறுப்பை ஒப்படைத்துவிட்டு பெயில்ஞவின் தாய் தந்தையர் இறந்துவிட்டதாக ஒரு பொய்யையும் சொல்லி வைத்தான் ராய்சந்திரன்.

ராய்சந்திரனுக்கு வயது போகப்போக உடல் நலம் குன்றிவந்தது. அவனை வேலைக்கு வைத்திருந்தவர்களும் அடிக்கடி பிழைகண்டு ஏசத்தொடங்கினர். சில காலம் ஒருமாதிரிச்சமாளித்துவந்தான் ராய்சந்திரன். பெயில்ஞ அடிக்கடி பணம் கேட்டுவந்ததால் அவனுக்கும் பணம் கொடுக்கவேண்டியிருந்தது நிலத்தைவிற்றுக்கொண்டுவந்த பணமும் கரைந்துபோய்விட்டது.

இறுதியாகத் தனது கையிலிருந்த பணம் முழுவதையும் பெயில்ஞவிடம் ஒப்படைத்துவிட்டு, தான் ஒரு அவசர காரியமாக அயல் கிராமத்துக்குச் சென்று உடன் திரும்புவதாயும் பெயில்ஞவிடம் கூறிவிட்டுக் கிளம்பிச் சென்ருன்.

(3)

ஒரு நாள் மாலை நேரம். அனுகுலும் மனைவியும் வீட்டிலிருந்து ஆறுதலாகப் பேசிக்கொண்டிருந்தனர். தனக்குக் குழந்தையில்லாத குறையைப்பற்றித்தான் இப்போதும் பேசிக்கொண்டிருந்தாள் அனுகுலின் மனைவி. மனதை வீணுக அலட்டிக்கொள்ளவேண்டாமென்று மனைவிக்குப் பல வழிகளில் சமாதானம் செய்துகொண்டிருந்தார் அனுகுல்.

திடீரெனப் பழக்கப்பட்ட குரலொன்று வீட்டின் முற்றத்தில் கேட்டது. ஏதோவொன்ருல் உந்தப்பட்டவராக அனுகுல் கதிரையை விட்டெழுந்து வீட்டின் முற்றத்துக்கு விரைந்தார். அங்கே ராய்சந்திரன் நின்றிருந்தான். அவனது மெலிந்த உடலையும், குழிவிழுந்த கண்களையும் கண்ட அனுகுல் மனம் நெகிழ்ந்துபோனுர். அவருக்கு என்ன பேசுவதென்றேபுரியவில்லை. ராய்சந்திரனை வீட்டினுள் அழைத்துச் சென்றவாறே சுகநலன்களையெல்லாம் விசாரித்தார். ராய்சந்திரனைக் கண்டு அனுகுல் அடைந்த மகிழ்ச்சியளவுக்கு, அவர்மனைவி அடையவில்லை. மாருக முகத்தை 'உர்' ரென்று வைத்துக்கொண்டு நின்ருள்.

ராய்சந்திரன் இதையெல்லாம் சட்டை செய்யாதவனுக, தனது எஜமானியின் கால்களில் 'தடா'லென்று விழுந்து வணங்கிவிட்டு ''அம்மா! உங்கள் குழந்தையைத் திருடியது வேறுயாருமல்ல. நான்தான் அக்குழந்தையைத் திருடினேன்! ஆமாம், நான்தான் திருடினேன்!'' என்று அமைதியாகச் சொன்னுன்.

இதைக் கேட்ட அனுகுல் அதிர்ச்சியுற்றவராய், ''ராய்சந்திரன்! என்ன, நீயா திருடினுய்?..... இப்போது எங்கே குழந்தை?'' என்று ராய்சந்திரனைக் கேட்டார்.

''அவன் என்னுடனேயே சுகமாக இருக்கிருன். வருகின்ற ஞாயிற்றுக்கிழமை உங்களிடம் கொண்டுவந்து ஒப்படைக்கின்றேன்'' என்ருன் ராய்சந்திரன்.

அனுகுலும் மனைவியும் திகைப்புக் கடலில் திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் வேளையில் ராய்சந்திரன் மெதுவாக வெளியே போய் விட்டான்.

ஃ ஃ ஃ

அன்று ஞாயிற்றுக்கிழமை. அனுகுலும் மனைவியும்வீட்டு வாசலில் நின்று வீதியையே பார்த்துக்கொண்டிருந்தனர். ராய்சந்திரன் சொன்னபடி தங்கள் பிள்ளையுடன் வராமல் விட்டுவிடுவானே என்ற ஏக்கமும் அவர்களுக்கு எழுந்தது.

பத்து மணியளவில் பெயில்ஞவின் கையைப் பற்றியவாறு வீட்டு வாசலில் நடந்துவந்தான். பெயில்ஞவைக் கண்ட அனுகுலின் மனைவி அப்படியே அவனைக் கட்டித்தழுவி அவனது நெற்றியில் முத்தமிட்டாள். உண்மையில் இவன் தனது மகன் தானு இல்லையா என்ற சிந்தனையெதுவும் அவளுக்கு எழவில்லை.

பெயில்ஞ மிகவும் அழகாக இருந்தான். செல்வந்தரின் பிள்ளைபோல ஆடம்பரமாக உடைகள் அணிந்திருந்தான். உண்மையில் அவன் தனது மகன்தான் என்று எண்ணிக்கொண்டாள் அனுகுலின் மனைவி. இதுபற்றி இம்மியளவு சந்தேகமும் அவளுக்கு ஏற்படவில்லை. மீண்டும் மீண்டும் பெயில்ஞவைக் கட்டித் தழுவி முத்தமாரி பொழிந்தாள். அனுகுலுக்கு ஒரு புறம் களிப்பு மிகுந்திருந்தாலும், இன்னெருபுறம் ஆச்சரியமாகவும் திகைப்டாகவும் இருந்தது.

அனுகுல் பார்த்துவந்த மாஜிஸ்டிரேட் தொழிலின் தன்மையோ என்னவோ, திடீரென்று அவர் ராய்சந்திரனைப் பார்த்து, ''ராய்சந்திரன்! இவன் எனது பிள்ளை என்பதற்கு என்ன ஆதாரம்?'' என்று கேட்டார்.

''ஆதாரம்......? நான்தான் உங்கள் குழந்தையைத் திருடினேன் என்பது கடவுளைத் தவிர வேறு யாருக்கும் தெரியாதவகையில் நான் எப்படி ஆதாரம் காட்ட முடியும்? கடவுள் இங்கு வந்து சாட்சி சொல்லாதவரையில் என்னுல் என்ன செய்ய முடியும்?'' என்ருன் ராய்சந்திரன்.

பெயில்ஞவுக்கு என்ன நடக்கிறதென்றே புரியவில்லை; எல்லாம் புதிதாகப்புதிராக இருந்தன. ஒன்றும் பேசத் தோன்ருமல் அப்படியே இருந்துவிட்டான்.

பெயில்ஞவுடன் தனது மனைவி உடனடியாக ஒட்டிக்கொண்டுவிட்டதைப் பார்த்த அனுகுலுக்கு வேறு ஆதாரங்கள் கேட்பது மடமைத்தனமானதென எண்ணினுர். தவிர, ராய்சந்திரனுக்கு இந்த வயதில் இப்படியொரு அழகிய பிள்ளை எப்படிக் கிடைக்குமெனவும், பலவருஷம் விசுவாசமாயிருந்த வேலைக்காரன் ஏன் தன்னை ஏமாற்றவேண்டும் என்றும் எண்ணியதால் அனுகுல் ஒருவாறு அமைதி அடைந்தார்.

ஆனுல், இவ்வளவு நாளும் குழந்தையை மறைத்து வைத்து ராய்சந்திரன் நாடகமாடியதை நினைக்க நினைக்க அனுகுலுக்கு ஆத்திரமாத்திரமாய் வந்தது. குழந்தையில்லாத நேரத்தில் தான் மனைவியுடன் பட்டபாட்டை நினைக்க அவருக்குச் சிம்ம சொப்பனமாயிருந்தது.

திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டவராய், ராய்சந்திரனுக்கு முன் போய் நின்றுகொண்டு, 'டேய், இனிமேல் ஒரு நிமிஷம் கூட நீ இங்கே இருக்கக் கூடாது. போ வெளியே!'' என்று கத்தினுர்.

எஜமானரது கடுமையான நடத்தையைக் கண்ட ராய்சந்திரனுக்கு அழுகை வந்துவிட்டது. அவன் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று உதிர்ந்தோடியது.

''எஜமான்! நான் எங்கே போவேன்? எனக்கோ வயதாகிவிட்டது. என்னை யார் இனிமேல் வேலைக்கு எடுப்பார்கள்?''- தழுதழுத்த குரலில் கேட்டான் ராய்சந்திரன்

ராய்சந்திரனது நிலையைக் கண்டு அனுகுலின் மனைவி மனமுருகிப்போனுள்.

''அவன் இங்கேயே இருக்கட்டும். அவனிருந்தால்தான் நம் பிள்ளையும் சந்தோஷமாயிருப்பான். அவன் பாவம், எங்கே போவான்?'' என்று பரிந்து பேசினுள் அவள்.

ஆனுல் ராய்சந்திரன் தன்னைப் பெருமளவில் ஏமாற்றிவிட்டதாகக் கருதிய அவரது உள்ளம் ராய்சந்திரனை மன்னிக்க மறுத்தது. அவருடைய ''தொழிற்புத்தி'' சிறிதும் மாறவில்லை. ''முடியாது. அவன் இங்கு இருக்க முடியாது.

அவன் செய்த காரியத்துக்கு-திருட்டுக்கு மன்னிப்பே கிடையாது'' என்று ஒரேயடியாக நின்றுகொண்டார் அனுகுல்.

(IV-ம் பக்கம் பார்க்க)

தொடர்நாடகம்

# அவன் சென்ற பாதை

### காட்சி 6

மாதோட்டத்துறை முகம். இரவு வேளை. தீபங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்எரிந்தவண்ணமிருக்கின்றன. கரியநிறமுடைய கூலிகள் கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்குகின்றனர். பெருவணிகர்கள் அதைக் கவனித்து நிற்கின்றனர். இறக்கிய பொருள்களைக் கொவ்வோரோதையும், கொடுப்போரோதையும் மிக்குநிற்கின்றன.

மாதவி, மங்களம் மற்றும் பின்னணி இசைகாரர் என்போர் கப்பலினின்றும் இறங்கி மேடைக்குவருகின்றனர். அவர்களின் பொருள்களைச் சுமந்து இரு கூலிகள் வந்து இறக்கி வைக்கின்றனர்.

கூலி 1:- (மாதவியை நோக்கி) அம்மா! இங்கு பல சத்திரங்கள் உள்ளன அவற்றிலே ஒன்றில் தங்கி விடிந்துபோகலாம்.

மாத:- இல்லை அப்பா! நாளை பிற்பகல் எனதுநடன நிகழ்ச்சி உண்டு. இப்பொழுதே புறப்பட வேண்டும். பல்லக்குகள் கிடைக்குமல்லவா?

கூலி 2:- கிடைக்கும். ஆனுல்...

மாத:- ஆனுல்...? ஏன் தயங்குகிருய்?

கூலி 1:- இரவுவேளைகளில் அநுரதபுரி வீதிவழியாக செல்லவியலாது.

மங்களம்:- ஏன் அப்படிச் சொல்கிருய்? சென்ற ஆண்டும் இந்த வேளையிலேதானே பிரயாணம் மேற்கொண்டோம்?

கூலி 2:- அன்றைய நிலை வேறு. இன்றைய நிலைவேறு. அமுதன் என்ற பயங்கர வழிப்பறிக் கள்வன் வழியிலே ஒரு குகையில் இருக்கின்ருன். இரக்கமற்ற கொடியவன் அவன். அவன் கைகளிலே சிக்கி யாரும் உயிருடன் மீண்டதில்லை.

பின் இசை:- (முதியவன்) அப்படியானுல் அதிகாலையிலே பிரயாணத்தை மேற்கொள்வோம், மாதவி! ஆபத்தை ஏன் விலை கொடுத்து வாங்கவேண்டும்?

மாத:- ஆபத்திற்குப் பயந்து குறித்த நேரத்திலே செல்லாதிருப்பது தவறல்லவா? எமது கடமையினின்றும் நாம் தவறக்கூடாது. பாருங்கள்.

பின் இசை:- அதுஉண்மை. ஆனுல்...

மாதவி:- ஆனுலும் இல்லை! ஒன்றும் இல்லை. நாம் போக வேண்டியதுதான் அமுதனைச் சந்திப்பதையே நான் விரும்புகிறேன். வருவது வரட்டும். வாருங்கள். இப்பொழுதே பிரயாணத்தைத் தொடங்குவோம்.

கூலி 1:- நெருப்புடன் விளையாட நினைக்காதீர்கள் அம்மா! அமுதன் சாதாரண மானவனல்லன். அவன் பெரிய அறிவாளி. பாரதத்திலும், யவனம் முதலாய மேற்றிசை நாடுகளிலும் மருத்துவம், அறிவியல் முதலியவற்றை முற்றக்கற்றவன். அவனது கொலைக்கருவிகள் அவன் சொந்தக்கண்டுபிடிப்புகளாம். அவற்ருல், தனிமனிதனுக ஆயிரம் பேரையும் அழித்திடும் ஆற்றல் மிக்கவன் அவன்! வீணிலே ஆபத்திற்சிக்கிக் கொள்ளாதீர்கள்.

— ''சொக்கன்''

மாத:- அவனை அடக்க ஒருவரும் முயலவில்லையா? ஒரு தனிமனிதனுக்கு அஞ்சி வாழ உங்களுக்கு நாணமாய் இல்லையா? உங்கள் அரசர் என்ன செய்கிருர்?

கூலி 2:- அமுதனைக் கைப்பற்ற ஆனவரை முயன்ருர்; பயன்தான் இல்லை. அந்த முயற்சியில் அரசரின் படையிலே பெருந்தொகையானவர் இறந்ததுதான் மிச்சம்!

கூலி 1:- அமுதனின் உடம்பை ஆயுதங்கள் ஒன்றுமே செய்வதில்லையாம். அவன் மாயாவி. புயல் போல வருவான். அலைபோல மறைவான். அவனை அடக்குவது மனித முயற்சியால் ஆகாதது, அம்மா!

மாதவி:- அப்படிப்பட்டவனை நான் கட்டாயம் காணத்தான் வேண்டும்.

(பின்னணியிசையினர், மங்களம் உட்படப் பயந்து அஞ்சிநிற்கின்றனர்.)

முதியோன்:- இது என்னம்மா பிடிவாதம்? அரசனுல் ஆகாதது உன்னுல் ஆகுமா? 'இளங்கன்று பயமறியாது' என்ற பழமொழியை உண்மையாக்கிவிடுவாய் போல இருக்கிறதே!

மாதவி:- பெரியவரே! கண்ணகியின் ஆற்றல் காவல்மதுரையையே சுட்டெரித்ததை நீர் அறியீரா; அதிகம் ஏன்? என்னிடம் உறுதியிருக்கிறது; அன்புள்ளம் இருக்கிறது; அந்த உள்ளத்தின் ஆற்றலால்அமுதனை அடிபணிய வைப்பேன். எனது தொண்டுகளால் அவனைத் திருத்தி, இந்த மாதோட்ட நகரையே அமைதிபெறவைக்கிறேன். வாருங்கள் என்னுடன்.

மங்: அம்மா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இது நடக்கக்கூடிய காரியமா?

மாத: நடக்கும்; நடக்க வேண்டும். மங்களம், நெருப்பை நெருப்பால் அணைக்கமுடியாது. ஆனுல் நீரால் அணைத்துவிடலாம். கொடுமையை அன்பாலேதான் வெல்லலாம். துணிந்து வாருங்கள். இங்கு இறங்கியதிலிருந்து எனது இடது தோளும், இடது விழியும் துடித்தவண்ணம் உள்ளன. ஏதோ ஒரு பெரிய நிகழ்ச்சிக்கு நான் மூலகாரணியாய் அமையப்போகிறேன் என்று, எனது உள்மனம் சொல்லிக்கொண்டேஇருக்கிறது. அது இந்த அமுதனைச் சந்திப்பதால் நிகழவும்கூடுமல்லவா? ஆனபடியால் தடுக்காதீர்கள் வாருங்கள். உங்கள் உயிர்களுக்கும், உடைமைக்கும் நான் பொறுப்பு.

கூலி 1: நீங்கள் சொல்கிறீர்கள். ஆனுல் இந்தவேளையில் அந்தவழியால்இங்குள்ள யாருமே வரமாட்டார்கள். பல்லக்குகளோ, எருதுகளோ கிடைக்கா. பிடிவாதத்தை விட்டு, சத்திரத்திலே தங்கி நாளை செல்லுங்கள்.

மாத: பரவாயில்லை. அறுபது கல் தொலைவுதானே? நாங்கள் நடந்தே செல்வோம். உயிருக்குத்துணிந்தவர்கள் என்பின்னுல் வாருங்கள்.

[மாதவி முன்னுல் நடக்கிருள். மற்றவர்கள் சிறிது தயங்கிவிட்டு சிந்தனையுடன் அவள் பின்னுல் செல்கிருர்கள். கூலிக்காரரும் தயக்கத்தோடு பொருள்களைத் தூக்கிக்கொண்டு பின்னுல் செல்கிருர்கள். மாதவி தவிர்ந்த மற்றவர்களின் முகங்களிலே அச்சமும், நடுக்கமும் முத்திரையிட்டிருக்கின்றன]

(திரை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

# திருக்கூத்து

— எழுதியவர்: கவி தாகூர் —

தமிழில்:
பெரி. சண்முகநாதன்

தனது எஜமானிடம் வேலைக்கு வந்து சேர்ந்த போது ராய்சந்திரனுக்கு வயது பன்னிரண்டு. எஜமானரது தாயில்லாத ஆண் குழந்தையைக் கவனிப்பது தான் ராய்சந்திரனது முக்கிய வேலையாகவிருந்தது.

குழந்தை வளர்ந்து, கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று பெரியவனாகிவிட்டான். அது வரைக்கும் ராய்சந்திரன்தான் அவனுடன் ஒட்டியிருந்து எல்லா உதவிகளையும் செய்து வந்தான். இப்போது அவன் சின்ன எஜமான் திருமணஞ்செய்து கொண்டு தனிக்குடித்தனம் போய்விட்டான்.

இதன்பின் ராய்சந்திரனது பெரிய எஜமான் அனுகுல் இரண்டாவது திருமணஞ் செய்துகொண்டார். புதிய எஜமானி வந்ததிலிருந்து ராய்சந்திரனது ஆதிக்கம் சற்றுக் குறைந்து போயிருந்தது. இரண்டாவது எஜமானிக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அனுகுல் இந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பையும் ராய்சந்திரனிடமே ஒப்படைத்தார். இது பற்றி அவர் மனைவி சங்கடப்பட்டாள். அனுகுல் ஒரு மாதிரிச் சரிசெய்துவிட்டார்.

ராய்சந்திரன் தனது பரிவான பராமரிப்பால் குழந்தையைத் தன்வசப்படுத்திக் கொண்டான். இப்போது குழந்தை நிலத்தில்தவழ்ந்து விளையாடுமளவுக்கு வளர்ந்துவிட்டது. குழந்தை வருங் காலத்தில் ஒரு பெரியவனாகி விடுவான் என்று பலர்பேசிக் கொண்டனர். அவ்வளவுக்குக் குழந்தையின் நடத்தையில் ஒரு தனி விவேகமும், கூர்மையும் தென்பட்டன. அனுகுலைப் பார்த்துக் குழந்தை "பா-பா..." என்று அழைக்கும். தாயைக் கண்டால் "மா-மா..." எனும். ராய்சந்திரனைக் கண்டதும் குழந்தை திக்கித்திக்கி "சா-ன..." என்று கூவும். இந்தக் கொஞ்சலான கொச்சை மொழியைக் கேட்டு எல்லோரும் அப்படியே மகிழ்ந்துபோவார்கள்.

இந்நேரத்தில்தான் அனுகுலுக்கு பத்மா நதிதீரத்தை யொட்டிய ஒரு நகருக்கு மாற்றலாகியது. சொந்த ஊரைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து குடும்பத்தோடு அந்நகருக்குச் சென்றார். போகும்வழியில், கல்கத்தாவில், அனுகுல் தனது குழந்தைக்காகப் பல தங்க ஆபரணங்களும், ஒரு அழகான தள்ளு-வண்டியும் வாங்கினார். சிறிது மனச்சங்கடத்துடன்தான் புதுஇடத்துக்கு அவர் போனார். ஆனால் பத்மா தீரத்தில் அழகுற அமைந்திருந்த அந்த இடம் அனுகுலுக்கு நன்குபிடித்துக் கொண்டது.

மழைகாலம் வந்தது. பல நாட்களாய்த் தொடர்ந்து மழை பெய்தது. பத்மா நதி பெருகி ஓடி நெற்களனிகளையும், நஞ்சைகளையும் நிரப்பியது. இப்போது ஆற்றின் ஓட்டத்தில் ஒரு உக்கிரம் தெரிந்தது. எந்நேரமும் பேரிரைச்சலுடன் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது.

ஒருநாள் மாலை-மழை விட்டிருந்தது. மழையில்குளித்த இயற்கை கதிரவனின் மாலை ஒளியைப் பருகிப் புன்னகை பூத்துக் கொண்டிருந்தது. இந்த இதமான காலநிலையில் அனுகுலின்குழந்தைக்கு வீட்டினுள் இருக்கப் பிடிக்கவில்லை. தள்ளு-வண்டியினுள் ஏறியிருந்துகொண்டு தன்னை வெளியே அழைத்துச்செல்லுமாறு அடம்பிடித்தது. அனுகுலின் அனுமதியுடன் ராய்சந்திரன் குழந்தையைத் தள்ளுவண்டியில் வைத்து மெதுவாக இழுத்துக் கொண்டு வெளியேபுறப்பட்டான்.

வீட்டுக்குச் சற்றுத் தூரத்திலுள்ள நெற்களனிகள் உள்ள பகுதிக்கு குழந்தையை இழுத்துக் கொண்டு வந்துவிட்டான் ராய்சந்திரன். பாதையின் மறுபுறத்தில் பத்மா பேரிரைச்சலுடன் ஓடிக்கொண்டிருந்தது. இந்த இடத்தில் வண்டியைச் சற்று நிறுத்திவிட்டு ஆற்றைப் பார்த்துக்கொண்டு நின்றான் ராய்சந்திரன்.

"சா-ன..."- குழந்தைதான் அழைத்தது. ராய்சந்திரன் குழந்தையைப் பார்த்தான். குழந்தை சற்று தூரத்தில் நெல்வயலின் பக்கமாகப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த கதம்பச் செடியை நோக்கிக் கைகாட்டிச் சிரித்தது. தனக்கு அந்தப் பூவைப் பறித்துத் தரும்படிதான் குழந்தை கேட்கிறான் என்று தெரியும் ராய்சந்திரனுக்கு. கதம்பச் செடியை நெருங்குவதானால் இருபது யார் தூரத்துக்கு சேற்றில்தான் நடந்துபோக வேண்டும். அதை நினைக்கத்தான் ராய்சந்திரனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"அதோ அந்தப் பறவையைப் பார்!...இதோ ஆற்றில் மிதக்கும் மரக்குத்தியைப் பார்!..." என்றெல்லாம் குழந்தையின் கவனத்தை வேறு பக்கம் திருப்பமுயன்றான் ராய்சந்திரன். ஆனால் குழந்தை விடாப்பிடியாக கதம்பச் செடியைக் காட்டியபடியே "சா-ன...சா-ன..." என்று சிணுங்கியது. குழந்தைக்குப் பூவைப் பறித்துக்கொடுப்பதைத் தவிர வேறுவழியில்லை ராய்சந்திரனுக்கு. ஆனால் தான் பூவைப்பறிக்கப்போக குழந்தை தற்செயலாக வண்டியை விட்டு இறங்கி ஆற்றின் பக்கமாகப்போய் விடுமோ என்ற பயம் அவனுக்கு. ஒரு மாதிரியாக மனதைச் சரிப்படுத்திக் கொண்டு சேற்றினுள் காலை வைத்து மெதுவாகக் கதம்பச்செடியை நோக்கிநடக்க ஆரம்பித்தான்.

ராய்சந்திரன் போய் அடுத்தகணம் குழந்தை தள்ளுவண்டியிலிருந்து ஒரு மாதிரியாகக்கீழே இறங்கியது. ஆற்றில்அலைகள் அசைவதைப் பார்க்கப் பார்க்கக் குழந்தைக்குப் பெரிய களிப்பாயிருந்தது. மெதுவாக ஆற்றை நோக்கித்தவழ்ந்தது குழந்தை; தனது சிறு கையினால் மண்ணை அள்ளி நீரில் இறைத்தது. இதனால் ஆற்றில் ஆயிரமாயிரம் அலை வட்டங்கள் ஏற்பட்டன. இதைப்பார்க்கப் பார்க்கக் குழந்தையின் களிப்புப் பன்மடங்கானது. அலைவட்டங்கள் ஆடுவது, குழந்தையை யாரோ ஆற்றினுள் இருந்து விளையாட வரும்படி அழைப்பது போலிருந்தது. மேலும் தண்ணீரை நோக்கித்தவழ்ந்தது குழந்தை.

கதம்பச் செடியை அடைந்த ராய்சந்திரன் ஒரு பெரியபூக்கொத்தைப் பறித்துக் கொண்டு திரும்பிவந்தான். தள்ளு-வண்டிக்கு வந்த ராய்சந்திரன் குழந்தையைக் காணுமல் திகைத்துப் போய்விட்டான். உடலிலுள்ள இரத்தம் உறைவது போன்றவொரு உணர்வுஏற்பட்டது அவனுக்கு. நாலு பக்கமும் பார்த்தான். யாரையும் காணவில்லை. ராய்சந்திரனுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. [illegible] கொண்டு "சின்ன எஜமான்! சின்ன எஜமான்!" என்று பலமாகக் கத்தினான். ஒரு பதிலுமில்லை. எங்காவதிருந்து "சா-ன..." என்ற குரல் வருகிறதா என உற்று உற்றுக்கேட்டான். பத்மாவின் பேரிரைச்சலைத்தவிர வேறெதுவும் கேட்கவில்லை. எதுவும் செய்யத்தோன்றுமல் ஆற்றைப் பார்த்தபடி சிலையாய் நின்றிருந்தான் ராய்சந்திரன்.

கொஞ்சங் கொஞ்சமாக இருள் கவியத் தொடங்கியது. வெளியே சென்ற ராய்சந்திரனையும் குழந்தையையும் காணுமல் அனுகுலும் மனைவியும் திகைத்தனர்; போய்த்தேடிவரும்படி மற்ற வேலைக்காரர்களை அனுப்பினர். சித்தப்பிரமை பிடித்தவன்போல'சின்ன எசமான்! சின்ன எசமான்!" என்று முனகிக்கொண்டிருந்த ராய்சந்திரனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார்கள் அவர்கள்.

வீட்டையடைந்ததும் தனது எஜமானியின் காலில் 'தடாலெ'ன்று விழுந்து கதறினான் ராய்சந்திரன். அனுகுலும் மனைவியும் பலவிதமான கேள்விகளைப் போட்டு ராய்சந்திரனைத் துளைத்தெடுத்தனர்.

"எனது குழந்தை எங்கே? எங்கே?" என்று ஒரேயடியாகப் புலம்பத் தொடங்கிவிட்டாள் அனுகுலின் மனைவி.

"சத்தியமாக எனக்கு எதுவுமே தெரியாது." என்ற ஒருவாக்கியத்தையே திரும்பத் திரும்பச் சொன்னான் ராய்சந்திரன். அனுகுலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை- சிலையாகிப்போயிருந்தார்.

"ராய்சந்திரன்! உனக்கு எவ்வளவு பணம்வேண்டுமானாலும் தந்துவிடுகிறேன். எனது குழந்தையை எனக்குத்தந்துவிடப்பா" என்று திரும்பத்திரும்ப ராய்சந்திரனைத் துளைத்துக்கொண்டிருந்தாள் அனுகுலின்மனைவி.

ராய்சந்திரனுக்குத் தன் தலையைப் பல தடவை அடித்துக்கொள்வதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை. ராய்சந்திரன் சித்திரவதைப்படுவதைப்பொறுக்காத அனுகுல், "ஏன் அவனைப்போய் துளைக்கிறாய்? அவன் ஏன் நம் குழந்தைதையைத் திருடவேண்டும்?" என்று மனைவியைக் கேட்டார்.

"இந்தக்காலத்தில் யாரை நம்புவது? குழந்தைக்கு எல்லாநகைகளையும்போட்டிருந்தேன். அவற்றை எடுப்பதற்காக இவன் எங்காவது வைத்திருப்பான். இனிமேல் இவன் இங்கு ஒருகணம்கூட இருக்கக்கூடாது" என்று சொல்லி ராய்சந்திரனுக்கு வாசலை நோக்கிக் கைகாட்டினாள் அனுகுலின் மனைவி. அனுகுலுக்கு மனைவியின் உத்தரவை மறுத்துப்பேச நாஎழவில்லை.

(2)

ராய்சந்திரன் தனதுமனைவியிருக்கும் கிராமத்துக்குச் சென்றான். அவனுக்கு மணமாகிப் பல வருஷங்களாயிருந்தாலும் பிள்ளையொன்றுமில்லை. ராய்சந்திரன் எஜமானரை வெறுத்துக் கிராமத்துக்குப்போய் இரண்டாவதுமாதம் அவன் மனைவி கருத்தரித்தாள் அந்த ஆண்டு இறுதியில் அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு இறந்தேபோய்விட்டாள். ராய்சந்திரன் அடைந்த துயரத்துக்கு அளவேயில்லை.

இப்போது ராய்சந்திரனுக்கு குழந்தையைத்தவிர வேறு நாதியில்லை. ஒரு சிறு வேலையில் சேர்ந்துகொண்டு தனது வருவாய்முழுவதையும் குழந்தைக்காகவே செலவழித்தான். காணுமல்போன சின்ன எஜமானது நடத்தையில் காணப்பட்ட அதேரகமான தனிவேகம், கூர்மையெல்லாம் தனது குழந்தையின் நடத்தையிலும் பிரதிபலிப்பதைக் கண்டான். சின்ன எஜமானின் குணங்களை அப்படியே அபகரித்திருக்கும்தனது குழந்தையைப் பற்றி ராய்சந்திரனது மனதின் அடியில் விபரிக்கமுடியாத பயமொன்று ஏற்பட்டிருந்தது. தான் இக்குழந்தையுடன் பழகி மகிழ்வதை குழந்தையில்லாமல்தவிக்கும் எஜமானிக்குச் செய்யும் துரோகமென நினைத்துச்சங்கடப்பட்டான். குழந்தை வளரவளர இந்தப் பயம், சங்கடமெல்லாம் ராய்சந்திரனது மனதில் வளர்ந்து கொண்டேயிருந்தது.

குழந்தைக்கு பெயில்னு எனப் பெயரிட்டிருந்தான். பெயில்னு சிரிக்கும்போது காணுமல் போன தனது சின்ன எஜமான் சிரிப்பது போல உணர்ந்தான். பெயில்னு அழும்போதெல்லாம், சின்ன எஜமான் எங்கோ கண்ணுக்கெட்டாத தூரத்திலிருந்து புலம்புவது

(11ம் பக்கம் பார்க்க)

[இரத்ததான கவிதைப் போட்டியில்
மூன்றும் பரிசு பெற்ற கவிதை-૧]

## உலகுக்கு உனது இரத்தம்

— கட்டுடைக்குமார் —

அன்னை தனது அன்பு ரத்தம் பாலாயீந்தனள்
ஆற்றல் மிக்க தந்தை ரத்தம் அன்னமிட்டது
சின்ன வயதில் பெற்றோர் தந்த ரத்த தானத்தில்
செழுமை சேர உடல் திரண்டு நாம் வளர்ந்தனம்

காடு மேடு கடந்து வந்து கலந்த நீரினுல்
களனி நிறைய நெல் விளைந்து கலகலக்குது
வாடி நின்ற வதனமிது மலர்ச்சி பொங்குது
மலர்ச்சி தந்த நமது ரத்தம் இயற்கை தந்ததே.

பட்டுப்பூச்சி ரத்தம் நமக்கு உடை வழங்குது
பசுமை மிக்க கீரை கிழங்கு உடல் வளர்க்குது.
எட்டிப் பார்க்கும் மானை மரையை இறைச்சி
என்கிறோம்
எமது ரத்தம் ஒருவருக்கு அளித்தல் தீமையா?

சிகரெட் புகைக்கும் போது ரத்தம் வரட்சியுற்றது
சினிமா பார்க்கும் வேளை ரத்தம் மூட்டைகொண்டது
நகரும் உயிரைக்காக்க டாக்டர் ரத்தம் கேட்கிறார்
நல்ல மகனே, ரத்த வங்கி செல்லல் பாவமா?

தனது மானம் காக்கத்தமிழன் ரத்தம் சிந்தினன்
ரத்தத்தோடு உயிரும் கூட மேலே சென்றது
உனது ரத்தம் தானம் செய்யப் பீதி யேனடா?
ஓடு! ரத்த வங்கி சென்று உயிரைக் காத்திடு.

மாணவர்கள் செய்த தவறு மூளை தன்னிலே
வருத்தமான எண்ணம் தன்னை வழங்கும் காலையில்
தானே தனது தலையில் ஆணிகொண்டு தாக்கியே
ரத்தம் தன்னைச் சீழாய்ச் செய்தார் சாத்தனரவர்.

உனது ரத்தம் காத்த குழந்தை அரசு செய்யலாம்
உலகம் போற்றும் ஈழதேச அறிஞனாகலாம்
இனிமையான எதிர்காலத்தில் உனக்கும் பங்கடா
இன்று தொட்டு ரத்த தானம் செய்ய நில்லடா

உருவகக்கதை

## பளபளப்பு

— க. கனகலிங்கம் —

அது ஒரு நந்தவனம். இளமரங்கள் பல நறுமலர்களைச் சொரிந்தன. தீஞ்சுவைக் கனிகள் சிதறுண்டு கிடந்தன. மலர்களின் ஜாலங்களில் வண்டினங்கள் தேன் உண்டு களிக்க மலர்களைச் சுற்றி வட்டமிட்டன. காலைக் கதிரவனின் தண் ஒளி பட்டு ரோஜாவின் இதழ்கள் பொன்மயமாக ஒளிர்ந்தன. சில்லென்று வீசிய தென்றல் ரோஜாவிற்குப் போதையூட்டவே, நானே அழகி என்று கர்வம் கொண்டு நாட்டிய தாரா போல் அங்குமிங்கும் அசைந்தாடியது. பக்கத்தே பதுமைப் பெண்ணை வாடாமல்லிகை காட்சியளித்தது. வாடாமல்லிகையை நோக்கிய ரோஜாவிற்குச் சிரிப்பு வந்தது. அதனைக் கேலி செய்ய நினைத்து பேச்சுக் கொடுத்தது.

"என்ன பதுமையாக இருக்கிறாயே, என்னைப் பார்! எவ்வளவு கலகலப்பாக இருக்கின்றேன். என்னைச் சுற்றி எத்தனை ஜீவன்கள் வட்டமிடுகின்றன. உன்னிடம் யாராவது வருகிறார்களா? இல்லை, பேசுகிறார்களா? எப்ப பார்த்தாலும் 'உம்' என்று முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு இருக்கிறாய்" என்று கூறிக் கண் சிமிட்டியது ரோஜா. வாடாமல்லிகை இதைக் கேட்டு தனக்குள்ளே சிரித்துக்கொண்டது. கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம் என்று எண்ணியதுபோலும்.

சற்று நேரத்திற்குள்ளாக விர்ரென்று பறந்து வந்து வண்டொன்று ரோஜா இதழ்களில் அமர்ந்து தேன் சுவைக்க ஆரம்பித்தது. வண்டின் கனம் தாங்காது ரோஜாவின் இதழ்கள் உதிர்ந்தன. வண்டு பறந்துபோயிற்று. படிப்படியாக வண்டினங்கள் தேன் சுவைக்க முற்பட்டதால் ரோஜாவின் இதழ்கள் யாவும் உதிர்ந்தன இறுதியில் பூவின் தண்டும் காற்றின் வேகம் தாங்காது வீழ்ந்தது.

வாடாமல்லிகை தனக்குள் சிரித்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்காக அழுதான்?

## ஜெயகாந்தனின் கதை படமாகிறது

ஆசியஜோதி பிலிம்சார் ஜெயகாந்தன் எழுதிய 'யாருக்காக அழுதான்?' குறுநாவலை, தமது அடுத்த தயாரிப்பாக திரைப்படமாக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இப்படத்துக்கான திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஆகியபொறுப்புக்களை ஜெயகாந்தனே ஏற்றுள்ளார்.

இப் படத்தில் நாகேஷ், பிரதான பாகமேற்று நடிக்கிறார். சிறு ஹோட்டல் ஒன்றில் மேசை துடைப்பவராகவும், எடுபிடி ஆளாகவும் அவர் நடிப்பார்.

டி. எஸ் பாலையா ஹோட்டல் முதலாளியாகவும் எஸ். வி சகஸ்ரநாமம் சமையற்காரநாயுடுவாகவும் நடிக்கின்றனர்

சுமார் 40 நாட்களில் இப்படத்தை பூர்த்தியாக்கத் தயாரிப்பாளர் திட்டமிட்டுள்ளனர்.

## ஜே. ஆர். மூவிஸ் தயாரிப்பில் கண்ணதாசன் பாடல்

ஜே. ஆர். மூவிஸ் என்ற புதிய படக் கம்பனியாரின் முதல் தயாரிப்பிற்கான முதல் பாடல் ஏ. வி எம். ஸ்டூடியோவில் சமீபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது

கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ள இரு குரலிசை பாடலுக்கு, டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா குரல் கொடுக்க எம். எஸ். விஸ்வநாதன் இசையமைத்தார்.

பாடலின் முதலடிகள் வருமாறு:

ஆண்: ''விழியே விழியே
உனக்கென்ன வேலை
விருந்துக்கு வரவா
நாளைக்கு மாலை.''
பெண்:''விருந்துஎன்றாலும்
வரலாம், வரலாம்
மருந்து தந்தாலும்
தரலாம் தரலாம்.''

சாணக்யா டைரக்ஷனில் வளரவிருக்கும் இப்படத்தில் எம். ஜி. ஆர். பிரதான பாகமேற்று நடிக்கிறார்.

வசனங்களை எஸ். எஸ். தென்னரசு எழுத, சுந்தரம் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்தைபி கே வி சங்கரன், பி கே வி ஆறுமுகம் கூட்டாகத் தயாரிக்கின்றனர்.

'ராமு'

## ஜெமினி-விஜயா நடிக்கிறார்கள்

ராமு எனும் சிறுவனின் பாத்திரத்தை மையமாகக் கொண்டு கிராமசூழ்நிலையில் படமாக்கிவரும் ஏ வி. எம். ஸ்டூடியோவினர் 55-வது தயாரிப்பான குடும்பசித்திரத்துக்கு 'ராமு' என்ற பெயரை வைத்துள்ளனர்.

ராமுவாக இப்படத்தில் ராஜ்குமார் என்னும் புதிய சிறுவன் தமிழ்ப்பட உலகுக்கு அறிமுகமாகிறான்.

ஜெமினிகணேசனும், கே. ஆர். விஜயாவும்ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் மற்றும் புஷ்பலதா, அசோகன், வி. கே. ராமசாமி, எஸ் வி சுப்பையா, நாகேஷ், ஓ ஏ கே. தேவர், வி. எஸ். ராகவன், எஸ் என். லட்சுமி ஆகியோர் நடிக்கின்றனர்.

வசனங்களை ஜாவர் சீதாராமன் எழுத, கவிஞர் கண்ணதாசன்பாடல்களுக்கு எம். எஸ். விஸ்வநாதன் இசையமைத்துள்ளார். திருலோகசந்தர் இப்படத்தை டைரக்ட் செய்கிறார்.

## முதல் தயாரிப்பில் எம். ஜி. ஆர்.

நாஞ்சில் புரொடக்ஷன்ஸ் என்னும் புதிய திரைப்பட கம்பனியாரின் முதல்படத்தில் எம் ஜி ராமச்சந்திரன், பி சரோஜாதேவி, ஜெமினி கணேஷ், கே ஆர் விஜயா, அசோகன், நம்பியார், தங்கவேலு ஆகியோர் நடிக்கின்றனர். கே சங்கர் டைரக்ஷனில் தயாராகும் இப்படத்தின் பாடல்களை கவிஞர் கண்ணதாசன்எழுதியுள்ளார்

## 'பண்புள்ள பெண்'

ஜெமினி கணேசனும், பத்மினியும் ஜோடிசேர்ந்து நடிக்கும் தீபாலயம் பிக்சர்ஸாரின் 'பண்புள்ள பெண்' என்ற அவர்களது முதல படத்தின் தொடக்க விழா அண்மையில் ஆரம்பமாகியது. இதில் கே. ஏ. தங்கவேலு, சுபாகினி, உதயசங்கர், மனோரமா ஆகியோர் நடிக்கின்றனர்.

நாடக விமர்சனம்

## படித்த முட்டாள்

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞன் ஒருவனை மையமாகக் கொண்டது 'படித்த முட்டாள்' நாடகத்தின் கதை நாடகத்தின் முடிவு இளைஞருக்கும் பெற்றோருக்கும் புத்தி புகட்டுவதாக இருக்கிறது.

வேலையற்றஇளைஞன் மணிவண்ணனாக வரும் ஒப்பிலாமணி தாம் ஏற்ற பாகத்தைச்சிறப்பாகச் செய்திருக்கிறார். காதல் காட்சிகளில் குழைவு போதாது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

மணிவண்ணனின் தந்தை திருவாசகராக நடித்த சபாரத்தினம் குறைசொல்லமுடியாதபடி நடித்தார் கிண்டலும் சிலேடையும் நிறைந்த வசனங்களுக்கு அவர் தமது உச்சரிப்பின்மூலம் மெருகூட்டினார். வசந்தனாக நடித்த கைலாசபிள்ளை காதற் கட்டங்களில் நன்கு சோபித்தார். தங்கப்பராக நடித்த பேராயிரவர் மாறுபட்ட உணர்ச்சிகளுக்கேற்ப காட்டிய முகபாவங்கள் நடிப்பில் அவரது அனுபவத்தை நன்கு எடுத்துக்காட்டின. குண்டு சந்திரபாலாவின் நகைச்சுவை ரசிக்கும்படியாக இருந்தது. தரகராக வந்த நாகலிங்கத்தின் நடிப்பும் பரவாயில்லை.

நடிகைகளில் வசந்தனது காதலியாக நடித்த சாவித்திரி தமது பாகத்தைச் சிறப்பாக நடித்திருந்தார். திருவாசகரின் மனைவியாக வந்த விஜயாவின்நடிப்பு இயற்கையாக அமைந்திருந்தது.

சில தேவையற்ற காட்சிகளைத் தவிர்த்திருந்தால் நாடகம் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். எனினும் சமூகத்துக்குத் தேவையான ஒருநல்லநாடகத்தை அளித்ததற்காக அராலி சரஸ்வதி நாடக மன்றத்தினரையும் நாடகத்தை எழுதிய நசுந்தரம்பிள்ளையையும் பாராட்டலாம்.

# கலை அரங்கம்

## ஆண் உடையில் பத்மினி

பம்பாய் ஆர். கே. பிலிம்ஸ் ஹிந்தி ஈஸ்ட்மென் கலர் தயாரிப்பான 'மேரா நாம் ஜோக்கர்' என்னும் படத்தின் படப் பிடிப்பு பம்பாயில் நடைபெற்றது.

ஆண் உடையில் மோட்டார் மெக்கானிக்காக பத்மினி தோன்றும் காட்சிகள் அப்போது படமாக்கப்பட்டன.

உலகத்தை சிரிக்கவைக்கும் சர்க்கஸ் கோமாளி ஒருவன் தனது சொந்த வாழ்க்கையில் மனநிம்மதி இல்லாமல் தவிப்பதை கதை சித்தரிக்கின்றது.

ராஜ்கபூரே டைரக்ட் செய்யும் இப்படத்துக்கு சங்கர்-ஜெய்கிஷன் இசை அமைக்கிறார்.

## செல்வம்

சிவாஜி—விஜயா

சிவாஜி கணேசனும் கே. ஆர். விஜயாவும் இணைந்து நடிக்கும் வி. கே. ஆர். பிக்சர்ஸ் தயாரிப்புக்கு 'செல்வம்' என்ற பெயரிட்டுள்ளனர்.

பிரகாஷ் ஸ்டூடியோவில் தற்போதுபடப்பிடிப்புநடைபெற்றுவரும் இப்படத்தில் எஸ். வி. சகஸ்ரநாமம், வி. நாகையா, ரத்னா, எம் வி. ராஜம்மா, சுந்தரிபாய் ஆகியோர் நடிக்கின்றனர்

பி எஸ். ராமையாவின் கதைக்கு திரைக்கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை கே எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றுள்ளார் கே. வி. மகாதேவன் இசையமைக்கும் இப்படத்தை சம்பத் ஒளிப்பதுவு செய்கிறார்.

அமுதும் தேனும்

## முத்துராமன்-தேவிகா ஜோடி

அருணாசலம் பிக்சர்சார் தயாரித்துவரும் தமிழ்படத்துக்கு 'அமுதம் தேனும்' என்னும்பெயர் சூட்டியுள்ளனர்.

மலையாளத்தில் 'காவிய மேளா' என்ற பெயரில் வெளியிடப்பட்ட சிறந்த மலையாளப்படமாக ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்ற படக்கதையின் தழுவலாக இது இருக்கும்.

முத்துராமன் குருட்டுகவிஞனாக நடிக்கிறார். அவரைக் காதலிக்கும்கல்லூரிமாணவியாக தேவிகா நடிக்கிறார்.

தேவிகாவின் தந்தையாகவும் முத்துராமனுக்கு சிகிச்சையளிக்கும் டாக்டராகவும் சுந்தரராஜன் நடிக்கிறார். நாகேஷ், விஜயன், வாணிஸ்ரீ ஆகியோரும் இப்படத்தல் நடிக்கின்றனர்.

கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை தயாரிப்பாளர் ஏ. கே. வேலனே ஏற்றுள்ளார். எஸ். தட்சணாமூர்த்தி இசை அமைக்கும் இப்படத்தை சி. ஜே. மோகன் ஒளிப்பதிவுசெய்கிறார்.

## திருவிளக்கு

ஆனந்தன்-சந்திரகாந்தா

திரிபுராம்பாள்மூவிஸ் என்னும் புதிய திரைப்படக் கம்பனியாரின் முதல் தயாரிப்பான 'திருவிளக்கு' படத்தில் 'விஜயபுரிவீரன்' ஆனந்தனும், சந்திரகாந்தாவும் இணைந்து நடிக்கவிருக்கின்றனர்.

இப்படத்தின் மூலம் பேபி கௌசல்யா, பேபி மைதிலி என்னும் 'குட்டி' நடிகைகள் திரையுலகுக்கு அறிமுகமாகின்றனர். கதை இந்த இரு சிறுமிகளை மையமாக வைத்தே பின்னப்பட்டுள்ளது.

மனோகர், கே. ஏ. தங்கவேலு, புஷ்பமாலா ஆகியோரும் இப்படத்தில்நடிக்கின்றனர்.

திரைக்கதை வசனங்களை 'இன்பக்கனவு' புகழ் விஸ்வம் முக்து எழுத பிரபல பின்னணிப்பாடகர் எஸ். சி. கிருஷ்ணன் இசையமைக்கிறார். [illegible] ஐக்கண்ணுதன் டைரக்ட் செய்கிறார்.

## மேக்கப் இல்லாமல் பிரபல நடிகர்கள்

சித்ராலயாவின் ''நெஞ்சிருக்கும்வரை'' படத்தின் இரண்டாவது 'செட்' படப்பிடிப்பு சாரதா ஸ்டூடியோவில் சமீபத்தில் நடைபெற்றது.

இப்படத்தில் சிவாஜி கணேசன், முத்துராமன், வி. கோபாலகிருஷ்ணன் ஆகிய மூவரும் ஒரேகுடிசையில்வாழும்ஏழைகளாகநடிக்கின்றனர். அவர்களின் வாழ்க்கையில் ஒரு பள்ளி ஆசிரியரின் மகள் குறுக்கிடும்போது அவர்களிடையேயுள்ள நட்பு பெரும் சோதனைக்குள்ளாகிறது. கே. ஆர். விஜயா அப்பெண்ணாகவும், அவரது தந்தை பாடசாலை ஆசிரியராக வி. எஸ் ராகவனும் நடிக்கின்றனர்.

படமாக்கப்பட்ட காட்சிகள் யாவும் தத்ரூபமாக அமையவேண்டுமென்பதற்காக நடிக, நடிகையரனைவருக்கும் 'மேக்கப்' இல்லாமல் காட்சிகள் படமாக்கப்பட்டன.

கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஸ்ரீதர் ஏற்றுள்ளார். கவிஞர்கண்ணதாசன் பாடல்களை எழுத, எம். எஸ். விஸ்வநாதன் இசையமைக்கிறார். கலையை கங்கா கவனிக்கிறார்.

## நடிகர் டி. கே. ராமச்சந்திரன் டைரக்டராகிறார்

நடிகர் டி. கே. ராமச்சந்திரன் சரஸ்வதி புரொடக்ஷன்ஸ் என்னும்திரைப்படக் கம்பெனியைத் துவக்கி ''நினைப்பதற்கு நேரமில்லை'' ''பெரிய மனிதன்'' ஆகிய படங்களைஉருவாக்கியுள்ளது தெரிந்த விஷயம்.

சரஸ்வதி புரொடக்ஷன்ஸாரின் 3-வது தயாரிப்பான ''சிங்கப்பூர் சீமான்'' என்னும் படத்தை டி. கே ராமச்சந்திரனே டைரக்ட் செய்யப்போகிறார்.

இப்படத்தில் ஜெய்சங்கர், கே. ஆர். விஜயா, டி. கே. ராமச்சந்திரன், கே. ஏ. தங்கவேலு, மனோரமா, எம். சரோஜா, உதயசந்திரிகா, சுந்தரிபாய் ஆகியோர் நடிக்கின்றனர்.

## ரவிச்சந்திரன்-பாரதி ஜோடி

பத்மினி பிக்சர்சார் ரவிச்சந்திரனும், பாரதியும் இணைந்து நடிக்கும் குறுகிய கால படமொன்றைத் தயாரிக்கின்றனர்.

இப்படத்தில் கே. ஏ. தங்கவேலு, நாகேஷ், மனோரமா, எம். வி. ராஜம்மா ஆகியோர் நடிக்கின்றனர்.

## சிறுகதை

(II-ம் பக்கத் தொடர்ச்சி)

ராய்சந்திரன் அனுகுலின் பாதங்களில் விழுந்து, தனது இரு கைகளாலும் அவர் கால்களைப் பற்றிக்கொண்டான்.

''எஜமான்! என்னை இங்கேயே இருக்க விடுங்கள். அந்தக் காரியத்தை நான் செய்யவில்லை. அதைச் செய்தவர் கடவுள்!''

ராய்சந்திரன் தான் செய்த குற்றத்தைக் கடவுளின்மேல் போடுகிறானே யென நினைத்து அனுகுல் மேலும் ஆத்திரமடைந்தார். கால்களை அவன் பிடியிலிருந்து உதறி விட்டுச் சற்று நகர்ந்து நின்றார். ராய்சந்திரன் மீண்டும் அனுகுலின் கால்களைப் பற்றிக் கொண்டு கதறினான்.

''எஜமான்! உண்மையில் நான் அதைச் செய்யவில்லை. நான் அதைச் செய்யவேயில்லை!''-கதறினான் ராய்சந்திரன்.

அனுகுலுக்குப் பொறுக்க முடியவில்லை. கீழே குனிந்து ராய்சந்திரனின் தோள்களைப்பற்றி அவனைத் தூக்கி நிறுத்தி வைத்துக்கொண்டு,

''பின்பு யாரடா அத்திருட்டைச் செய்தது? யாரடா செய்தது?'' என்று கத்தினார்.

ராய்சந்திரன் கண்ணீருக்கிடையே கரகரத்தான்.

''அதைச் செய்தது எனது விதி ஐயா! எனது விதி!'' அனுகுல் பலமாகச் சிரித்தார். 'விதி' 'கடவுள்' இத்தியாதிகளைச் சாக்கு வைத்து பேசப்படும் வாதங்களை நீதிமன்றத்தில் கேட்டுக் கேட்டு அவருக்குப் பழக்கமோ என்னவோ?

பெயில்னாவுக்கு இப்போதுதான் விஷயம் சற்றுப் புரிவதாகப்பட்டது. அனுகுலும் மனைவியும்தான் தனது பெற்றோரென்றும், ராய்சந்திரன் தன்னை திருடிக்கொண்டுபோய் வளர்த்திருக்கிறானெனவும் எண்ணிக்கொண்டான். இவ்வளவு நாளும் ராய்சந்திரன் தனது பிறப்புரிமையையே மறைத்து வந்திருக்கிறான் என்று பெயில்னாவின் மனம் எண்ணியபோது, ராய்சந்திரன்மேல் ஆத்திரமாத்திரமாய் வந்தது. ஆனால் தன்னைப் பராமரித்தவனின் பரிதாப நிலையைக் கண்டு மனம் நெகிழ்ந்தவனாய் அனுகுலைப் பார்த்து, ''அப்பா! ராய்சந்திரன் இங்கு இருக்கக்கூடாதென்று நீங்கள் விரும்பினால் அவன் போகட்டும். என்றாலும் அவன் பாவம். அவனுக்கு மாதாமாதம் நாம் சிறிதளவு பணமாவது கொடுத்துதவவேண்டும்'' என்றுசொன்னான் பெயில்னா.

பெயில்னாவின் வார்த்தைகளைக் கேட்டதும் ராய்சந்திரனது அடிவயிறு பகீரென்றது. இதயம் மலைபோல் கனத்தது. இறுதியாகப் பெயில்னாவை-தனது மகனை-ஒரு தடவை கூர்ந்து நோக்கிவிட்டு, வெளியே நடந்து போனான் ராய்சந்திரன்

அம்மாத இறுதியில் பெயில்னாவின் அனுசரணையினால் அனுகுல், ராய்சந்திரன் பெயரில் அவனது கிராமத்துக்குச் சிறிதளவு பணம் அனுப்பினார் ஆனால் கிராமத்தில் ராய்சந்திரன் என்ற பெயருடன் இப்போது யாரும் இல்லையென்ற காரணத்தால் பணம் திருப்பி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

## லண்டனில் கிளே

58 ஆண்டுகளுக்குப் பின் லண்டனில் முதல் தடவையாக நடைபெற்ற உலக அதிபார குத்துச் சண்டை, இம்முறை பலவிதங்களில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பிரிட்டனைப் பொறுத்தவரை அது மிகப் பெரும் நிகழ்ச்சியாக அமைந்தது. அதே சமயம் நமது உள்நாட்டு அபிமானிகள் வழக்கத்துக்கு மாறாக இந்தச் சண்டையில் அதிக சிரத்தை காட்டினார்கள். இந்த இரு அம்சங்களையும் கருதி, மீண்டும் அதைப்பற்றி எழுதுவது பொருத்தமாய் இருக்கும் என நினைத்தோம்.

40,000 பேர் கூடியிருந்த ஹைபரி அரங்கில் இந்தச் சண்டையைப் பார்க்க வந்த பிரபலஸ்தர்களில் புகழ் பெற்ற ஜோ லூயிஸ், ஜொகான்ஸன், சொனிலிஸ்டன், ரொக்கிமார்ஸியானோ ஆகிய 4 முன்னாள் உலக சாம்பியன்களும் காணப்பட்டனர்

இந்தச் சண்டையில் கூப்பரின் ஒரே ஆயுதம், பிரசித்திபெற்ற அவரது இடது கைக் குத்துத்தான். சாம்பியன் கிளேக்கு அவரது வயது, வேகம், கோதா உத்தி ஆகியன ஆயுதங்களாயிருந்தன. இந்த அடிப்படையிலேயே சண்டை முடிந்தது. கூப்பரின் இடது கைக்கு, கிளேயின் வேகம் நேரடிச் சவாலாக இருந்து, அவரை வெற்றி வீரனாக்கியது. ஜோ லூயிஸ், சரித்திரத்திலேயே அதிகப்படியாக, அதாவது 10 ஆண்டுகளுக்கு மேலாக சாம்பியனாக இருந்தார். இது அபூர்வமான ஒருவிஷயம். ஆனால், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேல் பொதுவாக எவரும் சாம்பியனாக நீடிப்பதில்லை. இந்த அடிப்படையில் கவனித்துப்பார்த்தால் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு கிளே சாம்பியன் பட்டத்தை வகிப்பார் போல்தோன்றுகிறது. இந்த ஆண்டுக்குள் அவருக்கு இங்கிலாந்தில் மற்றோர் சண்டையும் இருக்கிறது.

பிரிட்டனைப் பொறுத்தவரை இச்சண்டையின் முடிவு, பெரும் ஏமாற்றமாக அமைந்தது. கூப்பர் ஒரு திறமைவாய்ந்த வீரர். பிரிட்டிஷ் ரசிகர்களின் பேரபிமானி. வெள்ளைக்காரர். லண்டன் வாசியும் கூட.

ஆனால், கிளே ஒரு நீக்ரோ. அதேசமயம் வாயாடித்தன திறனாலோஎன்னவோ அவர் ஓரளவு வெறுப்புக்கும் ஆளாகியிருந்தார். எனினும் 'கறுப்பு முஸ்லிம்' இயக்கத்தில சேர்ந்து, பெயரையும் முகமதலி என மாற்றிக் கொண்டபின், அவர் தன்னடக்கம் காட்ட ஆரம்பித்தார்.

எதுவாயினும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அவர் விஷயத்தில் நடந்துகொண்ட செயல் ஓரவஞ்சகமானது. பாரபட்சமானது. வழக்கமாக ஆர்ப்பரித்துக் கொக்கரிக்கும் கிளே, அமைதியாக லண்டன் வந்து இறங்கினார். ஒரு பெரிய சாம்பியன் பிரிட்டனுக்கு வந்த பின்பும்கூட, கூப்பரின் படங்களும், அவரைப்பற்றிய வருணனைகளுமே அதிகமாக பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியாயின. பிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனமும் இந்த முறையையே பின்பற்றியது. நீக்ரோவாக இருந்தபோதிலும், அமெரிக்காவில் சாம்பியனுக்குத்தான் அதிக பிரபல்யம் இருக்கும்.

அதுமட்டுமல்ல பிரிட்டிஷ் பத்திரிகைகள், கிளே 3 ஆண்டுகளுக்கு முன் (சாம்பியனாக வளருவதற்கு முன்) கூப்பரின் இடது கையினால் அடிபட்டு விழுந்த படத்தையும் செய்தியையும் ஓயாமல் பிரசுரித்துவந்தன. கிளே இதை மறக்க முயன்றாலும், ஓயாமல் இச்சம்பவத்தை அவருக்கு அவை ஞாபகமூட்டி, அவரது மனோபலத்தைக் குறைக்க முயன்றன. ஆனால் முடிவு வேறுவிதமாய் இருந்தது. சாம்பியன், தான் சாம்பியன்தான் என்பதை நிரூபித்தார். உலகஅதிபாரக் குத்துச்சண்டைச் சரித்திரத்தில், தான் அதிவேகமான தாக்குதல்காரர் என்பதை மீண்டும் ஒரு தடவை நிலைநாட்டிவிட்டார்

புகழ்பெற்ற மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி பிரிட்டனுக்கு வந்திருப்பதினாலும், வாணிபக் கப்பல் மாலுமிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாலும் தான் கிளேயின் பெயர் அதிகமாக வெளிவரவில்லையோ என நினைத்தோம். ஏனெனில் பிரிட்டிஷ்காரர்களில் அதிகப்பேர் குத்துச்சண்டையைவிட கிரிக்கெட்டில் ரசிகத்தன்மை உடைத்தவர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. அவர்கள் குத்துச் சண்டையை மறக்கவில்லை. ஆனால் கூப்பரின்திறமையையும், அவரது அடிபட்டு கிளே முன்பு ஒரு சமயம் விழுந்ததையும் எழுத பிரிட்டிஷ் பத்திரிகைகள் மறக்கவில்லை. ஆனால் மூன்றாண்டுகளுக்கு முன் கீழே விழுந்தபோதிலும், கூப்பரைக்கிளே தோற்கடித்தார் என்பதை அவைகள் முக்கியமாகஎழுதவில்லை.

மத்தியஸ்தர், சண்டையை இடையில் நிறுத்தாதிருந்தால் என்னவாகும் என்பதைச் சொல்லத் தேவை இல்லை. எனினும் இதனால் ''நொக் அவுட்'' சான்ஸ் கிளேக்கு இல்லாமல் போய்விட்டது. முன்னைய சண்டையில் கூப்பரின் கண்ணுக்கு ஒன்பது தையல்கள் போடப்பட்டன. இந்தச்சண்டையில் ஆஸ்பத்திரி சென்ற கூப்பர் 8 தையல்களுடன் வெளியே வந்தார்.

கிளேயின் வெற்றி, இந்த ஆண்டு இங்கிலாந்தில் கறுப்பர்களுக்குக் கிடைத்த முதல் வெற்றி. அடுத்த வெற்றி, மேற்கிந்திய கிரிக்கெட்காரர்கள் பெறவிருக்கும் இரண்டாவது வெற்றியாக விளங்கும்.

கிளே-கூப்பர் சண்டையை சினிமாப்படம் எடுக்கும் உரிமை யாருக்கு என்பது குறித்து பிரிட்டனில் மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.

ஹெரிலெவீன் (சண்டைக்கு ஒழுங்குசெய்தவர்), ஆர்தர் ரேங்க் ஸ்தாபனம், ஒலிபரப்பு மந்திரி பென்னின் ஆதரவுடன் பி.பி.ஸி. நிலையம் ஆகிய மூன்று சாராரும் இக்கெடுபிடியில் ஈடுபட்டிருந்தனர்.

எதுவாயினும் இதரநாட்டு ரசிகர்களைப் போலவே இலங்கைரசிகர்களும் கிளே-கூப்பர் சண்டையை வெள்ளித்திரையில் விரைவில் காணலாம் என்பது பலருக்கு ஆறுதலளிக்கும்.

இலங்கையில் இந்தியாவில், 3 ரவுண்டுகளுக்குமேல் குத்துச்சண்டையில் எவரும் ஈடுபடுவதில்லை. 3 ரவுண்டுகளுக்குள் களைத்தும் விடுவார்கள். ஆனால் மேல்நாட்டில் 15 அல்லது 16 ரவுண்டுகள் களைக்காமல் சண்டையிடுகிறார்கள். அதே சமயம் குத்துச்சண்டையையே தொழிலாகக்கொண்டவர்கள் இங்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கவிஷயம்.

அதே சமயம் பெருமளவு பணம் கொடுத்துப் பார்க்கும் உலக அதிபார சாம்பியன் போட்டியில், புதிய ஒரு நிபந்தனையைச் சேர்த்தால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைவார்கள். அதாவது,

10 ரவுண்டுகள் வரை ஒருவர் மற்றவரை 'நொக்அவுட்' செய்யவோ அல்லது செயலற்றுப்போகும்படி செய்யவோ கூடாது. இதற்குப் பின் வேண்டுமானால் அவர்கள் ஒருவரை ஒருவர் வீழ்த்தும் முயற்சியில்இறங்கலாம் என்பதே அந்த நிபந்தனை.

சென்றமுறை கிளேக்கும் கனேடிய சாம்பியன் சுவாலோவுக்கும் 15 ரவுண்டுகள் சண்டை நீடித்ததால், ரசிகர்கள் பயனடைந்தார்கள். கிட்டத்தட்ட இப்படியான நீடித்த சண்டையையே பலரும் விரும்புவர்.

ஹிட்லரின் ஆரியப்பெருமைக்கு ஆளான மாக்ஸிமிலியன் ச்மெலிங்கை ஜோ லூயிஸ் தோற்கடித்து கறுப்பர்களின் பெருமையை ஒரு சமயம் நிலைநாட்டினார். அதேபோல், பிரிட்டிஷார் தமது பெருமையின் சின்னமாக கூப்பரை ஈடுபடுத்தி, கறுப்பரிடம் தோற்றது. பிரிட்டிஷார் சிலரின் நிறப் பெருமைக்கு ஒரு சவாலாக அமைந்துவிட்டது. இது வரவேற்கத்தக்க ஓர் அம்சம்.

★

### பூமியில் குறைந்தவர்கள்

வானவெளி வாகனப் போட்டியில் அமெரிக்கா, ரஷ்யாவைவிட இரண்டாண்டுகள் பிந்தியிருப்பதாக சமீபத்தில் அறிவித்த மேற்கு நாட்டவர்கள், பூமியில் தங்களைவிட ரஷ்யர்கள் பின்னணியில் இருக்கிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சியடைவார்கள். ரஸ்தாக்களில் ஓடும் மோட்டார்களே தான் பூமியில் அவர்கள் பின்னணியில் இருப்பதற்கான காரணம்.

சமீபத்தில்மேற்குநாடான இத்தாலியுடன் ரஷ்யா பெரிய வர்த்தகபேரம் ஒன்றைசெய்து முடித்திருக்கிறது இத்தாலிய 'பியட்' கார் கம்பெனி, நாள் ஒன்றுக்கு 2000 கார்களை உற்பத்தி செய்யும் உற்பத்தி யந்திரங்களை விற்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. இதன் மூலம், இன்னும் 4 ஆண்டுகளில், ஆண்டு ஒன்றுக்கு 8 லட்சம் கார்களை ரஷ்யா உற்பத்தி செய்யும்.

பிரான்ஸிலுள்ள 'ரெனால்ட்' கம்பெனி, பிரிட்டனின் 'மோட்டார் கார்ப்பரேஷன்', ஜப்பானிய 'டோயோடாகம்பெனி' ஆகியன இந்தப்பேரத்தில்போட்டியிட்டுத்தோற்றபின், இத்தாலிய கம்பெனிக்கு வெற்றி கிடைத்தது.

குருஷ்சேவ்பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டபின், புதிய ஆட்சியாளர்களுக்கு ரஷ்ய நகர ரஸ்தாக்களின் வெறுமை என்னவோபோல் இருந்தது. வானவெளியில் இப்படி முன்னேறிய நாம், வீதிகளைச் சும்மா வைத்திருப்பதா என பிரதமர் கோஸிஜின் உட்படப் பலர் யோசிக்க ஆரம்பித்ததன் விளைவே அது.

உலகப் பெருநகரங்களில் ஒன்றான மாஸ்கோவில் 7 பெட்ரோல் நிலையங்கள் தான் இருக்கின்றன என்பதைஎவரும்நம்பமாட்டார்கள். அதேபோல்உலகிலேயே பெரிய நாடான ரஷ்யா முழுவதும் 1280பெட்ரோல் நிலயங்களே இருக்கின்றன. ரஷ்யாவின் மிகமுக்கிய ரஸ்தாக்களில் ஒன்று 2250மைல் நீளமானது ஆனால் இந்த வழியில் 9 பழுதுபார்க்கும் நிலயங்களே உண்டு. இது உண்மையான அதிசயம்.

அமெரிக்காவில் சராசரி 2 பேருக்கு ஒரு கார்விதம் இருக்கிறது. ஆனால் ரஷ்யாவில் சராசரி 238 பேர்களுக்கு ஒரு கார்தான் உண்டு. ரஷ்யா முழுதும் 10 லட்சம் கார்கள் இருக்கின்றன. பிரிட்டனின் மொத்த கார் எண்ணிக்கையில் இது பத்தில் ஒரு பங்குதான்.

வானத்தில்பெரும் சாதனை புரிந்துள்ள ரஷ்யாவில், கவர்ச்சிகரமான கார்களைச் செய்ய ஒரு சிலரே இருப்பதால், மேற்கு நாட்டு உதவியை அவர்கள் நாடவேண்டியேற்பட்டது. நல்லதோற்றமும், பலமும், திறமையும், சிக்கனமும், நம்பிக்கையும் உடைய, சைபீரியக் குளிரிலும் ஓடக்கூடிய கார்களை ரஷ்யர்கள் விரும்புகிறார்கள்.

# "உண்மையின் வழியே செல்லும் விஞ்ஞான மகான்"

— நேருஜீ

பண்டித ஜவஹர்லால் நேரு நாத்திகரல்ல என்றாலும் அவர் வைதிகக் குடுக்கையாக விளங்கவில்லை என்பதற்காக அவரை நிரீஸ்வர வாதியென்று கணக்கிட்டு மனக் குறைப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் பலர்.

பண்டித நேரு நேரடியாக வேதாந்த தத்துவ விசாரணைகளைக் கண்டித்ததுகிடையாது என்றாலும் மதத்தின் பெயராலும் கடவுளின்பெயராலும் நடக்கும்மூடப் பழக்கங்களையும் அக்ரமங்களையும் அவர் பலமாகக் கண்டித்தார். இதுபோதாதா? புத்தரையே நாத்திகரென்று வாதிக்கும் கூட்டத்தவருக்கு நேருஜியின்சீர்திருத்த நோக்கங்களும் நவீனகால மனோபாவமும் எப்படிப்பிடிக்கும்?

மற்றும், ஜோஸ்யம், மந்திரம், மாயம், பில்லிசூன்யம், பேய் பிசாசு ஆகியவற்றைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் பண்டித நேரு பலமாகக்கண்டித்தது வைதிகர்களுக்கும் கர்நாடக பழக்கவழக்கங்களில்மூழ்கியிருப்பவர்களுக்கும் அருவருப்பாயிருந்தது இப்படிப்பட்டவர்கள் ஒரே ஒரு ஆயுதத்தைப் பிரயோகிப்பார்கள். அதாவது 'நாத்திகர்' என்று ஒரே வார்த்தையில் கூறி சபித்துவிடுவார்கள்.

### நேருஜியின் நிலைமை

ஆனால், உண்மையிலேயே பண்டித ஜவஹர்லால் நேருவின் நிலைமைதான் என்ன? அவர் மதவிஷயங்களில் எவ்வளவு ஈடுபட்டிருந்தார், விஞ்ஞானத்தைப்பற்றி அவருடைய மனோபாவந்தான் என்ன? ... எனும் பத்திரிகையில் பண்டித ஜவஹர்லால் நேரு தமது நிலைமையை விளக்கி 1938-ம் ஆண்டில் எழுதியிருக்கிறார். அவர் அதில் தெரிவித்திருப்பதாவது:

''என்னைப்பற்றிவிஞ்ஞான மண்டபங்களுக்கும் கலாசாலைக்கூடங்களுக்கும்பல்லாண்டுகளாகவே தெரியாது. சந்தர்ப்பமும்தலைவிதியும்சேர்ந்துசந்தைக்கடைகளிலும் சந்தடிகளிலும்தூசிகளிலும்என்னைக்கொண்டுபோய் ஒதுக்கிவிட்டன.

மக்கள் வசித்து உழைத்து துன்பப்பட்டு வருகிற வயல்களுக்கும் இயந்திரசாலைகளுக்கும் நான் அழைத்துச் செல்லப்பட்டுவிட்டேன்,

நமக்குச்சொந்தமான இந்தத் தேசத்தைச் சில ஆண்டுகளாகப் பெரும் மனித வருக்கப்புரட்சிகள் ஆட்டிவிட்டன; நான் இதில் ஈடுபட்டுவிட்டேன் எனினும், கிளர்ச்சியும் சந்தடியும்என்னைச் சூழ்ந்து நின்றபோதிலும் இவைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாத ஓர் அன்னியன் போல நான் வேடம் போடத்தயாராய் இல்லை. ஏனென்றால்விஞ்ஞானத்தின் சன்னிதானத்திலே நானும் நின்று வணங்கியிருக்கிறேன் அதனுடைய பக்தகோடிகளில் நானும் ஒருவன் என்று கருதிக்கொண்டிருக்கிறேன்.

### விஞ்ஞானம்

விஞ்ஞானம் பெரிய மாறுதல்களையெல்லாம் உண்டாக்கியிருக்கிறது ஆயினும் அத்தனைமாறுதல்களிலும் மிக மிக முக்கியமானதும் ஆறுதலளிப்பதும் எதுவென்றால், மனிதனை விஞ்ஞானத்துக்கு மதிப்புக்கொடுத்து எதையும் சீர்தூக்கிப்பார்க்கும்படி செய்திருக்கிறதல்லவா, அதுதான்.

விஞ்ஞானத்தின் ஆரம்ப காலங்களிலே விஞ்ஞானத்துக்கும் மதத்துக்கும் போராட்டம் ஏற்படப்போகிறதென்று பெருங்கூச்சல் கிளம்பிற்று. விஞ்ஞானம் உலகத்தையும் உடலையும் பற்றியதென்றும், மதம் ஆத்மார்த்திக சம்பந்தமானதென்றும் ஆர்ப்பரித்தார்கள்.

அத்தகைய போராட்டம் இப்பொழுது கிடையாதென்று நன்றாய்விளங்கிவிட்டது.

விஞ்ஞானம் தனது பரந்த சிறகுகளை விரித்து, உலகம் பூராவையும் தன் ஆணைக்கு உட்படுத்தி அணைத்துக் கொண்டுவிட்டது. திட பதார்த்தத்தைக்கூட வாயுமயமாய் வெறுமையாக்கிவிட்டது.

எனினும், முன்பு போராட்டம் நடந்ததென்னவோ உண்மைதான். மதம் என்ற பெயரைக்கொண்டு அறிவு கொடுமைப்படுத்தப்பட்டது.

### போராட்டம்

முன்பு ஒரு சமயம் மதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் போராட்டம் இருந்ததென்னவோ உண்மை. மதம் என்ற பெயரைக்கொண்டு அறிவு கொடுமைப் படுத்தப்பட்டது. விஞ்ஞானமுறை மனிதனுடைய அறிவைத் தாராளமாய் வளர்த்து வந்தது. ஆகையால் மதத்தின் பேரால் நடந்த 'அறிவு-அடிமைப்பாடு' ஒரு புறமும் விஞ்ஞானமளித்த 'தாராளப்பகுத்தறிவு' மற்றொரு புறமும் நின்று போராடின.

(VIIIம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா



## அண்ணனும் தங்கையும்

-அத்தியடி அருணா-

ராமுவுக்கு லலிதா என்றாலே சிறிதும் பிடிக்காது. அவனுக்கு தனது அம்மா இறந்ததும், லலிதாவின் அம்மாவை தனது தந்தையார் தனக்கும் அம்மாவாக்கிக் கொண்டது ஏனோ பிடிக்காமல் போய்விட்டது!

லலிதாவின் அம்மா ராமுவுக்கு அம்மாவான பிறகு தான் லலிதா பிறந்தாள். லலிதா பிறந்ததால், தன் மீது அப்பா விருப்பமில்லாதவராகிவிடுவாரோ என்று எண்ணி, லலிதாமீது அவன் குழந்தையிலிருந்தே வெறுப்புக்காட்டிக்கொண்டு வந்தான். அதேபோல காலம் செல்லச்செல்ல ராமுவைவிட லலிதாமீதே அதிக செல்லம் காட்டத்தொடங்கினார் ராமுவின் அப்பா.

இதனால்ராமுவுக்கு லலிதா மீது வெறுப்பு அளவுக்கு அதிகமாகிக்கொண்டே போனது.

ராமுவுக்கும் லலிதாவுக்கும் இரண்டுவயது வித்தியாசம்தான். அவன் ஐந்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். லலிதா மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள்.

ராமுவின் சின்னம்மா ராமுவை மிக நன்றாகத்தான் கவனித்து வந்தாள். லலிதா போலவே அன்பு காட்டிவந்தாள் ஆனால் ராமுவுக்கு சின்னம்மாவைப் பிடிப்பதில்லை.

லலிதாபோலவே ராமுவுக்கும் தொப்பி, சப்பாத்து எல்லாம் வாங்கிக்கொடுக்கப்பட்டிருந்தது லலிதாவையும் ராமுவையும் ஒன்றாகவே பள்ளிக்கூடத்துக்கு லலிதாவின் அம்மா அனுப்புவாள். ஆனால் ராமுவுக்கு லலிதாவுடன் ஒன்றாகப் போவதற்குப்பிடிப்பதில்லை. போகும் போதுலலிதாவைவைவான்; அடிப்பான்; அல்லது ஏதாவது செய்வான். ஆனல் லலிதா பாவம், அவள் அழுதுவிட்டு வீட்டில்போய் தன் அண்ணனைப்பற்றி ஒன்றும் சொல்லமாட்டாள்.

அன்றொருநாள்—

ராமுவகுப்பறையில்தனது தொப்பியை வைத்துவிட்டு வெளியேபோய்வந்தபோது-தொப்பி தொலைந்துவிட்டது தேடித் தேடிப் பார்த்தான். அவனுக்கு 'திக்திக்' என்றது.

பாவம், அவனுக்கு தன் அப்பாவை எண்ணியபோது இன்று தன் உயிர்போய்விட்டதாகவே நினைத்தான்.

அழுதான் அப்பா தன் உயிரை வாங்கப்போகிறாரே என்று எண்ணி எண்ணி அழுதான்.

பள்ளிக்கூடமும் முடிந்துவிட்டதற்கு அத்தாட்சியாக மணி அடித்தது.

ராமுவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அப்போது—

லலிதா அவனிடம் வந்து ''அண்ணா, வீட்டுக்குப்போவோம் வா!'' என்றாள்.

''நான்வரவில்லை, நீ போ'' என்று அழுதுகொண்டே பதில்சொன்னான் ராமு.

''ஏனண்ணா அழுவுறாய்? நீ வராவிட்டால் நானும் போகமாட்டேன்'' என்று பிடிவாதம் பிடித்தாள்.

அவன் பதில் எதுவும் சொல்லாமல் அழுதுகொண்டே நின்றான்.

''சொல்லு அண்ணா, ஏன் அழுகிறாய் என்று?''

''தொப்பி தொலைந்துவிட்டது. அப்பா அடிப்பார்!''

அவள் யோசித்தாள் அவள் உள்ளத்திலே திடீரென்று ஓர் எண்ணம்......

அவள் ராமுவைப்பார்த்துப் பேசினாள்.

''இந்தா அண்ணா, எனது தொப்பியை வைத்திரு; எனது தொப்பி தொலைந்துவிட்டதாக வீட்டில் சொல்கிறேன்.''

சொல்லிக்கொண்டே தொப்பியைக்கொடுத்தாள். இருவரது தொப்பியும் ஒரே மாதிரித்தான்.

ராமுவுக்கு அவள் இப்படிச்செய்தது அதிசயமாக இருந்தது. அவளுடன்தான் முன்னர் நடந்துகொண்ட விதங்களையெல்லாம் நினைத்துப்பார்த்தான்

ராமுவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அப்படியே தன் தங்கையைக் கட்டியணைத்துக்கொண்டான்; லலிதா அவள் கண்ணீரைத் தன் சட்டையால் துடைத்துவிட்டாள்.

---

ஆசிரியர்:- (கையில் பிரம்புடன், மாணவர்களைப் பார்த்து) ஏன் எல்லோரும் சிரிக்கிறீர்கள்?

இராமன் என்னும் மாணவன்:- 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே, சேர்.

—உமா-ஏழாலை

---

## வெண்கட்டி

—ச. வே. பஞ்சாட்சரம் —

வெள்ளை வெள்ளை வெண்கட்டி
விரைந்து தேயும் வெண்கட்டி
பிள்ளை களே பாருங்கள்
பெருமை தன்னைக் கேளுங்கள்.

○

பூக்க ளாக மலர்ந்திடும்
பூனை யாக அமர்ந்திடும்
காக்கை யாகப் பறந்திடும்
கரும்ப லகைப் படத்திலே.

○

எண்ணம் பலவாய் மின்னிடும்
எண்கள் பலவாய்த் தோன்றிடும்
கண்ணின் வழியே புகுந்திடும்
கரும்ப லகை எழுத்திலே!

○

தோய்ந்து நீவிர் கல்வியில்
துரிதமாக வளர்ந்திட
தேய்ந்து தன்னை மாய்த்திடும்
சேவை நெஞ்சம் பாருங்கள்.

---

## எங்கள் வீட்டில்....

பெரிய மாடு
சிறிய கன்று
வெள்ளை ஆடு
கறுப்புக் குட்டி
பெட்டை கடுவன்
குட்டி நாய்கள்
கோழிச் சேவல்
பேடு குஞ்சு
யாவும் எங்கள்
வீட்டில் உண்டு.

வி. கந்தவனம்

## பாம்பும் தவளையும்

○ மலேயா, யாவா ஆகிய நாடுகளில் உள்ள ஒரு சாதிப் பாம்பு ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குப் பாயும். அத்துடன் பறக்கும் இயல்பும் கொண்டது, இதைப் 'பறக்கும் பாம்பு' என்று கூறுவர்.

ஒரு பாம்பு 115 பாகை வெப்ப நிலையையே தாங்கும். இதனல் இது நேரான சூரிய வெளிச்சத்தில் சில மணிநேரம் இருந்தால் உடனே இறந்துவிடும்.

பெரிய பாம்புகளுக்கு, பல சிறிய கால்கள் வாலின் கீழ்ப்பகுதியில் உள்ளன!

○ உலகில் உள்ள மிகவும் பெரிய பாம்பு தென் அமெரிக்காவில் உள்ளது( இது 25 அடி நீளமும், ஒரு அடியிலும் கூடுதலான தடிப்பும் கொண்டது.

○ ஆசியாவில்உள்ள 'பறக்கும் தவளை' தனது துடுப்புப்போன்ற காலின் உதவியால் மரத்துக்குமரம் தாவும்.

உலகில் உள்ள தவளைகளில் மிகவும் பெரிய தவளை ஆபிரிக்காவில் உள்ளது. இது 2 1/2 அடி நீளமும், 14 றாத்தல் நிறையும் உடையது. இது ஒரு சாதாரண நாயிலும் பெரியது.

தொகுப்பு:-

கந்த. ரவிச்சந்திரன்
சாவகச்சேரி

---

# குடும்பச் சுடர்



## குடும்ப வாழ்வில் பெண்கள்

—திலகவதி—

கணவனே மனைவியோ ஒருவருக்கு ஒருவர் தாழ்ந்தவர்கள் இல்லை. குடும்பம் என்ற படகைச் சமமாக வாழ்க்கைக் கடலில் துடுப்பு வலிக்கும் முக்கியமான இருவர் கணவனும் மனைவியும் மேல் நாடுகளில் கணவனும் மனைவியும்தனித்தனியே சம்பாதிக்கும் வழக்கம் பெருகிநிற்கிறது.

கணவன் அல்லது மனைவி ஆகிய இருவரில் ஒருவர்மட்டும் சம்பாதிக்க மற்றவர் அதைக்கொண்டு வாழும் நிலை அனேகமாக இல்லை. நமது நாட்டைப் பொறுத்த மட்டிலும் பெண்களும் பணி புரிந்து சம்பாதிக்கும் நிலை வளர்ந்துகொண்டிருக்கிறது கணவன் மனைவி ஆகிய இருவரும் சம்பாதித்து வாழும் பல குடும்பங்களை இன்று நம் நாட்டிலும் பார்க்கமுடிகிறது என்றாலும் கணவன் மட்டுமேசம்பாதிக்கும் குடும்பம் ஏராளம்.

மேல் நாடுகளில் நிலை எப்படி இருந்தாலும், கணவன் குடும்பத்துக்கு தேவையான பொருளைத் தேடி உழைக்க அந்தப் பொருள்களைக் கொண்டு மனைவி குடும்பத்தைச் சீர்பெற நடத்தும் முறையே மிகவும் சிறந்ததென்று உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. நமது நாட்டுச் சூழ்நிலைக்கு இந்த முறைதான் ஏற்றது என்றாலும், வளர்ந்துவரும் பொருளாதாரச்சிக்கல்குடும்பத்தின் இன்பச் சூழ்நிலைக்கு ஊறுவிளைவித்துவிடும் என்ற சூழ்நிலை வலியச்சுமத்தப்படுவதால் கணவனும் மனைவியும் சம்பாதிக்க முற்படுவது தவறல்ல. நமது நாட்டைப் பொறுத்தமட்டில் மனைவியும் சம்பாதிக்க முற்பட்டாலும், சமையல், குழந்தைகளைப்பராமரித்தல் போன்ற பொறுப்புக்கள் இன்னும் பெண்கள்வசமே இருக்கின்றன. உண்மையில் இத்தகைய பொறுப்புகளை ஆண்களைவிடப் பெண்களால்தான் சிறப்புறச்செய்யமுடியும்.

கணவன் மனைவியைவிட எந்தவகையிலும், உயர்ந்தவன் என்றோ,மனைவி அடிமையென்றோ இன்று யாரும் நினைப்பதில்லை. ஆகவே மனைவிக்கு இல்லாத விசேஷ சலுகைகளைக் கணவன்பெற எந்தவித அருகதையும்கிடையாது. ஆனல் அவசியத்தை முன்னிட்டு மனைவி கணவன்பால் சற்று அதிகமான அக்கறையெடுத்துப்பாடுபடுவதைத் தவிர்க்கமுடியாது.

கணவன் அனேகமாக வெளியுலகில் சுற்றிச் சுழல வேண்டியிருக்கிறது. குடும்பத்திற்குவெளியே குடும்பத்தைப்பாதிக்கும் தொல்லைகளைத்தொந்தரவுகளைக் கணவன்தான் எதிர்கொண்டாக வேண்டும். வீட்டில் அமைதிகரமான சூழ்நிலையில் வாழும் மனைவி வெளியில் தொல்லைப்பட்டுத் திரும்பும் கணவனிடம் இன்முகம் காட்டி உபசரிப்பது அவளுக்குத் தாழ்மையை அளித்துவிடாது. கணவன் சற்று கடுமொழி பேசினாலும் மனைவி சற்றுத்தாழ்ந்துநடந்துகொள்ளவேண்டும் என்று கூறப்படுவது இதனல்தான். குடும்ப நிர்வாகத்திற்கு வெளியே நடைபெறும் குடும்ப சம்பந்தமான விஷயங்களில் கணவனுடைய முடிவைக்கூடியவரை மனைவி ஏற்றுக்கொள்வது நல்லது. கணவன் முடிவுக்கு குருட்டுத்தனமாகப் பணிந்து போகவேண்டுமென்பதல்ல. கணவனது முடிவைக்குழப்பிக்கலக்காமல் அதுபற்றி ஆலோசனைசெய்து தன்கருத்தையும் தெரிவிக்கலாம்.

சாப்பாட்டு நேரங்களில் குடும்பப்பிரச்னை, சிக்கல்களைப் பற்றியோ, [illegible] [illegible] பற்றியோ பேச்செடுக்காமல் இருக்கப்பெண்கள் பழகிக் கொள்ளவேண்டும். இப்படிப் பட்டநேரத்தில் எழும் அற்ப தகராறுகள் தாம்பத்திய வாழ்வின் ஒற்றுமைக்கே உலைவைத்துவிடும்.

சினிமா அல்லது கோவிலுக்குப்போகும் நேரங்களிலும், உல்லாசமாக வெளியே போகும்நேரங்களிலும் குடும்பக்கஷ்டங்களை கணவர்களிடம் முறையிடுவதுசூழ்நிலையையேகெடுத்துவிடும். சொந்த விருப்பு வெறுப்புகளைக் குழந்தைகளிடம் காட்டும் அருவருக்கத்தக்க பழக்கத்தை அடியோடு கைவிடவேண்டும்.

குடும்ப வாழ்வில் பெண்களுக்குரிய இடம் மிகவும் சிறந்ததாகும். அற்ப காரணங்களால் இந்த உயரிய இடத்தைப் பறிகொடுத்து விடக்கூடாது.

---

ஆணென்றும் பெண்
ணென்றும் வைத்தான்
-அருள்
ஐயனும் ஆண் பெண்ணா
நின்றான்
காணுமீ தன்பு வளரத்-
தெய்வம்
காட்டும் வழியன்றி
என்னே?

-கி. வா. ஜகந்நாதன்

---

## புதுமைமோகம்

புதுமையில் மோகம் கொள்வதில் பெண்களுக்கு நிகர் பெண்களே. புதுமை மோகம் நேற்றைய இன்றைய நங்கையரோடு பிறக்கவில்லை. மங்கையர் மாநிலத்தில் பிறக்கும் போதே இதுவும் கூடப் பிறந்திருக்கிறது. பிரான்சு மூன்றாவது நெப்போலியனின் மனைவி அரசி யூஜின் ஒருமுறை அணிந்த சப்பாத்தை ஒருபோதும் திரும்பவும் அணிவதில்லையாம்.

---

## விலைபோக வழியுண்டோ?

— புலவர் தமிழ்மாறன் —

தந்தையார் திட்டுமொழி மந்திர மாக
தாயார்தம் ஒப்பாரி வாழ்த்துரை யாக
சொந்தபந்தம் சொத்துசுக மெல்லாம் விட்டு
சுற்றமெலாம் ஊதாரி என்று தூற்ற
சிந்தையிற் கலந்தசெல்வி சீதனமில் லாளெனினும்
சிறப்புமிக உள்ளாள் என்று எண்ணி
கந்தோரில் பதிவுமணம் செய்து அன்றே
காற்சதமும், செலவின்றிச் சதிபதி களானோம்.

இல்வாழ்வுப் பாதையிலே நாங்களி ருபேரும்
எப்பக்க உதவியின்றிப் பயணம் செய்தோம்.
சொல்லரிய துன்பங்களை வென்று வந்தோம்.
சோர்வுதரும் பிள்ளைகளைச் சுமந்து வந்தோம்.
பொல்லாத எம்புதல்வி நான்கு பேரும்
பொறுமை யின்றி மனம்செயப்
புலம்புகிறார்.
நல்லுயிர் நண்பர்கூட வந்து பார்த்து
நாலாயிரம் கேட்டு ஒடுகிறார்.

சீதனத்தை மேடையில் சாடிடும் இளையீர்!
சீர்திருத்தம் எழுத்தினிலே
பேசிடும்பெரியீர்!
நீதியற்ற முறையினிலே நாட்டில் நுழைந்த
நியாய மற்றகொடும் சீதனப் பேயால்
பாதியிலே கதைமுடித்துச் சுவைப்பார் இன்றி
பாழாகும் நான்குநற் பழங்கள் காண்பீர்.
நாதியற்ற அக்கனிகள் விலைபெற்றுப் போக
நல்லதொரு வழியினைச் சொல்வீர் ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயும் சிகிச்சையும்

# தனுர் வாதம்

— க. வேல்மணி —

தேகம் வாதத்தினால் வில்லைப்போல் வளைக்கப்படுமாறால் தனுர்வாதம் என்று வழங்கப்படும். இந்நோய் தனுஸ்தம்பம், ஸர்வாங்க வாதம், தனுர்வாதம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

மனதுக்குக் கஷ்டமான சில பிரதான சதைவளர்ந்து காணப்படுகிற ஒருவித ஜன்னி ரோகத்திற்கு தனுர் வாதமென்று சொல்லப்படும். இதில் சதைகளின் பிடிவு விடாமலிருந்தால் டானிக் ஸ்பாசம் (Tonic-Spasm) என்றும், தளர்வதும் பிடிவுபடுவதுமாய் இருந்தால் கிளானிக் ஸ்பாசம் (Clonic-Spasm) என்றும் ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. இதில் விரல்கள், குதிக்கால், வயிறு, மார்பு, கழுத்து இவற்றைப் பற்றிய வாயு மிகவும் விரைந்து வேகமாய் ஸ்நாயுஜாலங்களை வலித்திழுக்கையில் கண்கள் அசைவற்றுப் போய் முகவாய்க் கட்டை திறக்கவும் மூடவும் முடியாததாய்விட, விலாப் பக்கங்கள் ஒடிந்தவை போலாய்விடும். கோழை கோழையாய் மிக்கவாந்தியாகும். தேகத்தின் உட்புறமனைத்தும் முன்பக்கமாய் வில்லு போல் வளையும். இந்த ரோகத்தையே தனுர் வாதம் என்று அழைப்பார்கள்.

குணம் குறிகள்

கீழ்தாடை, தொண்டை இவைகளின் சதைகளுக்கு இசிவு முதல் உண்டாவதுண்டு. தொண்டைநோவும் பின்கழுத்து இசிவும் இருக்கிறதாய் நோயாளி சொல்லிக்கொள்வான். இப்படியாக வேதனை இருந்து சீக்கிரத்தில் அதிகரித்து நாக்கின் அடிக்குச்சென்று விழுங்குவது கஷ்டமாக இருக்கும். பின்னர் பல்கிட்டிக் கொள்ளும். வியாதி அதிகரிக்க உடம்பிலும் பின்னர் கால் கைகளிலும் இசிவு காணும். இசிவு சுமார் 1/4 மணிக்கொருதரம் கண்டுகொஞ்ச நேரம் இருந்த பிறகு தணிந்துவிடும். முதுகிலுள்ள பலத்த சதைகளுக்கு இசிவு கண்டால் முதுகை வில்லுப் போல வளைத்து, சிரசு குதிக்கால் இவைகளின் உடம்பு திற்கும்படி செய்யும். இதற்கு பின் இசிவு என்றுப் உடம்பு முன்னுக்கு வளைந்திருந்தால் முன் இசிவென்றும் பக்க சதைகளில் இசிவு கண்டால் பக்க இசிவு என்றும் சொல்லுவார்கள். தனுர்வாதரோகத்தில் காணும் இசிவு பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும். முகம் வெளுத்துப் புருவங்கள் சுருங்கிவிடும். நெற்றியில் மடிப்புகள் காணப்படும். கண்கள் பிதுங்கலாக காணப்படும். நாசியின் இதழ்கள் விரிந்திருக்கும். வாய் ஓரங்கள் பின்னுக்கு இழுத்துக்கொள்ளும், பற்கள் வெளித்தள்ளப்படும். நோயாளி நகைப்பவன் போல் எப்பொழுதும் காணப்படுவான். சுவாசம் கஷ்டமாயும் மார்பில் வேதனையுண்டு படுத்துவதாயுமிருக்கும். ஆனால் ஜலம் விழுங்கும்போது வேதனை அதிகரிக்கும். நாடிபலவீனத்தோடு அடிக்கும். சரீரம் எப்பொழுதும் வியர்க்கும். நித்திரையிராது - ஒருவேளை நித்திரைவந்தால் உறங்குவான். புத்தி விகற்பப்பட மாட்டாது. கடைசியில், ரோகி ஆயாசத்தாலும் கஷ்ட சுவாசத்தாலும் இறந்து விடுவான்.

காரணங்கள்

தனுர்வாதமானது ஈரம் இவைகளினாலும் அல்லது காயங்களினாலும் காண்பதுண்டு. சீதளத்தால் அல்லது தற்செயலாய்க் கண்டால் இடியோபதிக் ('diopathic) என்றும், காயத்தால் பிறந்தால் "ட்ரோமடிக்" (Traumatic) என்றும் ஆங்கிலத்தில் சொல்லப்படும். தற்செயலாகக்காண்பதில் சௌக்கியம் உண்டாவதற்கு கொஞ்சம் இடமுண்டு. காயத்தினால் ஏற்படும் தனுர்வாதத்தில் சௌக்கியம் ஏற்படுவது அபூர்வம். எட்டிக் கொட்டை சாப்பிட்டாலும் இவ்வியாதி போலவே காணும். சூட்சமும்-சீதமும் அளவில் சொற்பமும் குணத்தில் இலகுவுமான உணவை உபயோகித்தல், அதிக உடலுறவு, அதிகமாய்க் கண்விழித்து,

அதிக தூரம் வழிநடத்தல் தாதுக்கள் க்ஷீணமடைதல் முதலிய காரணங்களால் உண்டாகின்றன.

வேகங்கள் மந்தமாகவும் இருந்தால் அவன் ஜீவிப்பான். மேலும் உடல் வளைந்தும் உணர்ச்சியற்றும் ஒரு கால் நொண்டியாகவும்-கை முடமாகவும் ஒரு பாரிசம் விழுந்தும் இரண்டு கால் முடமாயும் போயிருந்தால் அல்லது அவயவங்கள் ஸ்வாதீனமற்றுப்போயிருந்தாலும் அவன் பிழைத்துவிடுவான்.

சிகிச்சை

பெல்டோனா அல்லது ஊமத்தமிலை ரசத்தையாவது முதுகு முள்ளந்தண்டின்மேல் போடலாம். 1/2—1 கிறேன் பெல்டோனாவோடு 2 கிறேன் குவைனா சேர்த்து 4 மணிக்கொரு தடவை கொடுத்துவரலாம். விழுங்கக் கஷ்டமாயிருந்தால் ஆசனவஸ்தி மூலம் பேதி கொடுப்பது அவசியம். வயிற்றிலுள்ளவற்றை வெளிப்படுத்தி இலகுவாக்கினால் ரோகிக்கு கஷ்டமே ஏற்படாது.

காலை மாலை 1/2 கிறேன் ரசபஸ்பம் அல்லது அயபஸ்பம் கொடுத்துவரலாம்.

பெருங்காயம்-கஸ்தூரி-மிளகு-இலவங்கம் முதலியவற்றை சம எடை எடுத்து நீர் விட்டு அவித்து 2 அவுன்ஸ் வீதம் தாகவிடாய் உள்ள நேரத்தில் ரோகி பருகலாம்.

1. முகவாய்க்கட்டை நழுவிவிட்டால் கீழ் மேல் தாடைகளில் தாளங்காய் எண்ணை பூசி மெதுவாகத் தள்ளிவிடவேண்டும்.

2. நாக்கு அசைவற்றுப் போகும் தனுர்வாதரோகிக்கு மாவிலங்கம் எண்ணை முதலியவற்றைப் போட்டு உருவிச் சிகிச்சை செய்ய வேண்டும்.

தனுர்வாத ரோகிக்கு சுரம் இருப்பதாகக் கண்டால்

பெரிய கோரோசனை-2 குளிகை அல்லது கஸ்தூரி மிருத்தியாதி- 2 குளிகை வீதம் காலை மாலை-கொத்தமல்லித் தண்ணீரில் கொடுக்கலாம்.

வலிப்புள்ள பாகங்களுக்கு

வேப்பமிலை- வாதமடக்கி இலை இலைக்கள்ளியிலை- மாவிலங்கமிலை-1 பிடி வீதம் எடுத்து இடித்து அதன் பின்னர் ஒரு சீலையில் கட்டி நன்கு ஆவியில் படும்படி எரித்த தன்பின்னர் - நோயாளியின் வலிப்புள்ள பாகங்களுக்கு நாராயண தைலம் நன்கு தேய்த்துப் பூசிய பின்னர் ஆவியில் எரித்தெடுத்த பொட்டணியை இளம் சூட்டுடன் காலை மாலை- வலிப்புள்ள பாகங்களுக்கு நன்கு ஒத்தடம் போடுவது நல்லது.

நாடி பலவீனத்துடன் அடிக்கும் தருணத்தில் நன்கு நீர்விட்டுக் காய்ச்சிய பாலில் கோரோசனை சேர்த்துக் காலை மாலை ஒரு கிளாஸ் வீதம் கொடுத்தல் வேண்டும். நோயாளிக்கு இரவு படுக்கப்போகும் தருணத்தில் இலகுவான உணவுகளை மாத்திரம் கொடுத்தல் நல்லது. இந்த ரோகமானது இலங்கையின் அதிகமான பகுதிகளில் வயதுபோனவர்களிடத்து மாத்திரம் அதிகமாக இற்றைக்கு 25 வருடங்களுக்குமுன் ஏற்பட்டது. இப்பொழுது நவநாகரிக காலத்தில் எவ்வயதினருக்கும் ஏற்படுவதாகக் கண்டுள்ளேன். இது ஓர் பரம்பரையான வியாதியல்ல

நாட்டுப்பாடல் இலக்கியம்

# கடற்கரையிலே தாமரைப்பூ மலராதா?

— தென்புலோலி பண்டிதர் வீ. பரந்தாமன் —

வட்டுக்கோட்டை பெரியார் மு. இராமலிங்கம் அவர்கள் (11-5-66) "ஈழநாடு" இதழில் வெளிப்படுத்திய நாட்டுப் பாடலையும் அதன் பொருத்தமான விளக்கத்தையும் படித்துப் பெரிதும் மகிழ்ந்தேன். ஆனால், அக்கட்டுரையில் சில சொற்றொடர்கள், யான் (19-4-66) "ஈழநாடு" இதழில் வெளிப்படுத்திய நாட்டுப் பாடலில் குற்றங் காட்டுவனவாய் அமைந்திருந்ததைக் கண்டு வருந்துகிறேன்.

19-4-66 "ஈழநாடு" இதழில் நான் வெளிப்படுத்திய நாட்டுப் பாடல் வருமாறு:-

பெண் கூற்று,

கடகரியின் மீதேறி
கடற்கரையே போறவரே
எரிதணலைத் தணிப்பவர்
மேல்
இருப்பவரைத் தருவீரோ?

ஆண் கூற்று,

எரிதணலைத் தணிப்பவர்
மேல்
இருப்பவரை நான்
தருவேன்
மறு பிறப்புப் பிறந்து
மறைப்பவரைத்
தருவீரோ?

பெண் கூற்று,

மறுபிறப்புப் பிறந்து
மறைப்பவரை நான்
தருவேன்
இரணியனைக் கொன்றவனால்
என்மேலே தீண்டாதே

மேற்காட்டிய பாடலில், கடற்கரையில் எரிதணலைத் தணிப்பவர்மேல் இருப்பவர் (தாமரைப்பூ) எப்படிவரும்? என்று வினவை எழுப்பி பெரியார் அவர்கள் என்மீது குற்றங்காட்டியுள்ளார்!

பெரியார் அவர்கள் என் பாற் குற்றங்காட்டுமுன் சிறிது எண்ணிப் பார்த்திருக்கவேண்டும்! நான் காட்டிய பாடலை எனக்குச் சொல்லித்தந்தவர், என்னைத் தன் பிள்ளைபோல் பல்லாண்டு காலமாக வளர்த்து, கல்வியூட்டிப் பண்டிதனாக்கியவரும், மறைந்த ஈழத் தமிழ்ப் பெரும் புலவருமாகிய கந்த முருகேசனார் ஆவர்.

அவர் சொல்லித்தந்த பாடலுக்கு விளக்கம் என்னால் எழுதப்பட்டதென்றாலும் பாடலுக்குப் பொருத்தமாகவே எழுதியுள்ளேன் என்பதே என் துணிபு. முந்தையோர் கூறிய பாடலில் பிழை ஏற்பட்டிருக்கலாம்; அதற்காக அப்பிழையை என்மீது ஏற்றியுரைக்கலாமா?

நீண்ட காலமாக நாட்டுப் பாடல்களோடு பழகியும் அவற்றின் தன்மையையும் உண்மையையும் பெரியார் அவர்கள் உணர்ந்திலர் போலும்!

நாட்டுப்பாடல்கள் நாட்டுக்கு நாடு திரிந்தும் சிதைந்தும் வழங்கும் தன்மையன. அன்றியும், அவை படியாத பாமரமக்களின் பாடல்கள் ஆதலினாலும் வாய்மொழி இலக்கியங்களாதலினாலும் பல பிழைகள் நுழைந்திருக்கும் என்பதை, நாட்டுப் பாடல் இலக்கியத்தை இயல் கையோடு நின்று பார்க்கும் அன்பர்கள் உணர்வார்கள். நாட்டுப்பாடல்கள், பண்டைய பாமரமக்கள் துன்பம் உற்றபோதும் இன்பமுற்றபோதும் பாடியவை. அவர்கள், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்றின்ன இலக்கணங்களை ஐயந்திரிபறக்கற்றுப் பாடினார்கள் அல்லர். கூறியது கூறல் மாறுகொளக் கூறல் போன்றவழுக்கள் அவற்றுள் நுழைந்திருக்கலாம். நாட்டுப் பாடல் இலக்கியம்என்ற வகையில் நோக்குவோர் இப்பிழைகளைப் பாராட்டார். நிற்க,

நான் வெளிப்படுத்திய பாடலில் கடற்கரை என்ற சொல்லைக் கண்டவுடனும் பெரியார் அவர்கள், அலைமோதும் கரையொன்றையே மனத்துள்ளி வழுப்பட்டார். கடற்கரையிலிருந்து நூறு யார் நூற்றைம்பதுயார் உள்ளாகத் தள்ளியிருக்கும் நிலத்தையும் கடற்கரை யென்றே பொதுப்பட வழங்குவார் வழக்கை அறிந்திலார் போலும்! (இதனாலன்றோ, கடலையும் கடல் சார்ந்த நிலத்தையும் நெய்தல் என வழங்குப) கடற்கரையிலிருந்து நூறு யார் தள்ளி நன்னீர்த் தடாகம் அமையாதா? தாமரை மலராதா?

"மடல்பெரிது தாழை
மகிழினிது கந்தம்
உடல்-சிறியர் என்றிருக்க
வேண்டா-கடல் பெரிது
மண்ணீரு மாகா
ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகிவிடும்"

[illegible] கடற்கரையிலேயே நன்னீர் - உண்ணீர் பெறலாம் என்ற பொருள் வெளிடை மலையாய் விளங்கித் தோன்றுதல் காண்க இனி,

ஒரு நிலத்துக் கருப்பொருட்கள் வேற்று நிலத்திலும் காணப்படுதலைக் கண்கூடாக காண்கிறோம் அல்லமோ? ஆசிரியர் தொல்காப்பியரும்,

திணைமயக் குறுதலுங் கடி
நிலையிலவே
நிலனொருங்கு மயங்குத
லின்றென மொழிப
புலவன் குணர்ந்த புலமை
யோரே

(தொல். பொருள் அகம். 12-ம் சூத்.)என்றும்,

உரிப்பொருளல்லன மயங்
கவும் பெறுமே (தொல் பொருள். அகம். 13-ம்சூத்)

என்றும்,

எந்நிலம் மருங்கினும்
பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு
வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த
வாகும்

(தொல் பொருள் அகம். 19-ம் சூத்.) என்றும் கூறியுள்ளார்.

இந்நூற்பாக்களுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஒரு நிலத்துக்குரிய கருப்பொருள்கள், (தெய்வம்-உணவு—விலங்கு— மரம்—பறவை-பறை-தொழில்யாழ் பிறவும்) வேறு நிலத்திலும் மயங்கிவரவும்பெறும் என்று உரையும் எழுதி சங்கஇலக்கியங்களில் எடுத்துக் காட்டும் காட்டியமை தொல்காப்பியம் மேலோர் உரையிற் கண்டுதெளிக.

எனவே, கடற்கரையோரமாகச் செல்லும் இளைஞனை விளித்து தடாகத்தில் இருக்கும் தாமரையைப் பறித்துத் தருக என்றது எப்படிக்குற்றமாகும்என்றுகேட்கிறேன்.

பெரியார் அவர்கள் யான் மேற்காட்டிய உண்மைகளைப் பெருந்தன்மையோடு ஒத்துக்கொள்வார் என்றே கருதுகிறேன். பெரியார் அவர்கள் நாட்டுப்பாடல் இலக்கியத்துக்குச் செய்யும் தொண்டை மனமார வாழ்த்திப்போற்றுகிறேன்.

இன்றும் பல நாட்டுப் பாடல்கள் என்பால் இருக்கின்றன. அவற்றை வாய்ப்பு வரும்பொழுது வெளிப்படுத்துவேன்.

கல்வி யளித்தென்னைக்
காதலித் தேவளர்த்
தோன்
தள்ளரிய சீராள் தமிழ்த்
தாயின்—செல்வத்
தளிரடியில் தாழ்ந்தோன்
அக், கந்த முருகேசன்
மலரடியில் வைத்தேன்
மனம்.

குறள் விளக்கம்

# ஈயும் கை

— பொ சண்முகநாதன் —

"அவரைப் போயும் போயும் ஒரு கொடையாளி என்று சந்திக்கும்படி அனுப்பினீர்களே! அவர் மகா கர்மி போலவும் இரக்கமில்லாதவர் போலவும் நடந்து கொண்டார்" என்றான் அந்த ஏழை நொண்டி.

"யாரைச் சொல்லுகிறாய்? இந்த ஊர்க்கோவில் திருப்பணியை தனது சொந்தப் பணத்திலேயே செய்தவரும், அமைச்சர் வரவுக்கான அரைவாசிச்செலவை தானே ஏற்றுக்கொண்டவரும், நூல் நிலையக் கட்டட நிதியாக ஐயாயிரம்ரூபா நன்கொடை அளித்தவரும் இன்னும் எத்தனையோ அறச்செயல்கள் புரிந்து வருபவருமான நமது செல்வரத்தினத்தையா சொல்லுகிறாய்?இப்படியான ஒரு கொடையாளியைப் பெற்றதில் இந்த ஊரே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் போது நீ என்னடா வென்றால்...?" என்றேன் நான்.

"என்னவோ நீங்கள்தான் அப்படிச் சொல்லுகிறீர்கள். எனக்கோ அதில் நம்பிக்கையில்லை. ஒரு ஐந்து சதம் கூட எனக்கு ஈயமறுத்த அவரை எப்படி ஒரு கொடையாளியாக நான் கருத முடியும்? என்றவாறு ஏழை நகர்ந்தான்.

"ஒருவேளை இப்படியும் இருக்கலாம்" என்று எனது நண்பர் தொடர்ந்தார்— "செல்வரத்தினம் எதையாவது எதிர்பார்த்து மேற்படி அறச்செயல்களைப் புரியலாம். கோவில் திருப்பணி செய்வதால்பத்திரிகைகளில் 'பெயர்' வரலாம். அமைச்சரை வரவேற்பதில் முன்னுக்கு நின்றால் மக்களுக்கு இடமாற்றம் எடுக்கலாம். நூல்நிலைய நன்கொடையால் நாலுபேர் இவரைப்பற்றி நல்லபடியாக கதைக்க

(VIII-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமய

(I-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கொன்று எதிராகவோ, பக்கத்துக்குப் பக்கமாகவோ மிக அதிகமாக ஸ்தாபித்துக்கொள்ளுவது தகாத செயலாகும். ஓர் ஆலயத்தையாவது முறைப்படி நிர்வகித்து நடத்த முடியாமற்போகும். அந்த நிலை நேருமானல் அவற்றை ஸ்தாபித்த சமூகத்துக்கே அது ஒரு சாபக்கேடாகும்.

ஊர்ப்பொது நிலையங்கள் என்ற வரிசையிலேயே ஆலயங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும். அவை தனி ஒரு மனிதனுக்கு உரிமையுடையனவாக இருத்தல் தகாது. தனி ஒரு மனிதனைக் கெடுக்கவேண்டுமென்று விரும்பினுல், அவனை ஆலய அதிகாரியாகவோ, தரும மடாதிபதியாகவோ, புரோகிதனுகவோ ஆக்கிவிடவேண்டுமென்று அறிஞர்சொல்லுவர் ஏனெனில் இவையெல்லாம் பல மக்களுடைய நம்பிக்கைக்குப் பொறுப்பான செயல்கள்; மிக எளிதில் நிர்வாகியின் மனத்தைமாற்றிப் பாபச்செயல் செய்யத்தூண்டக்கூடியவை. அப்படியானுல் எவருமே அவற்றை நிர்வகிக்கலாகாதா என்ற வினுஇங்குஎழலாம் சிந்தித்து விடைகாணவேண்டும்.

பொது மக்கள் பலரும் வந்து வழிபாடு செய்துபயன் பெறவேண்டும்என்ற விரிந்த நோக்கத்துடனேயேஆலயங்கள் அமைக்கப்படவேண்டியன. அப்படியன்றித்தனிஒரு மனிதனுக்கு. அவனது குடும்பத்தினருக்கு, மாத்திரம், வழிபடும் இடமாக ஆலயம் அமைப்பதாயின் அதற்குப் பகிரங்க வாயில் வேண்டியதில்லை. கல்லூரி மாணவரது வழிபாட்டுக்குரிய ஆலயம் அக் கல்லூரிக்குள் அமைவதுபோல ஒருவன் தனக்கு மாத்திரம் வழிபாட்டுக்காக அமையும் கோவிலை- தன் சொந்தச்செலவில்மாத்திரம் அமைத்து நிர்வகிக்கும் கோவிலைத்தனிப்படவே நடத்திவரலாம். அப்படியன்றித் ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற விரிந்தமனப்பாங்கில், பரோபகார சிந்தையுடன், பிறரும் அவ்வாலயத்தில் வந்து வழிபட அனுமதிப்பதானுல், தாராளமாக அப்படிச் செய்யலாம். ஆனுல் அவ்வாலய உரிமையாளர் தாம் அவ்வாலயத்தின் அதிகாரி, ஆதீனகர்த்தர், தர்மகர்த்தா, எசமான் என்ற பெயர் புனைந்து இறுமாப்புக்கொள்ளாதிருக்கவேண்டும், ஆலயத்தினுல் புகழோ, பொருளோ ஈட்டவேண்டுமென்ற நினைவு சிறிதேனும்கொள்ளலாகாது. ஏனெனில், அவையே ஒருவனைத் தீய நெறியில் இலகுவாகப்புகுத்திவிடவல்லன. அதனுலேயே பாபம் நேரும் என அச்சம்கொண்ட அறிஞர்கள் ஒருபோதும் ஆலய அதிகாரிகளாக இருக்க உடன்படார். அப்படியிருக்க நேர்ந்தாலும் தம்மைஆலயஅதிகாரிஎன்று எண்ணுமல் ஆலயத்தொண்டன் என்ற உண்மையான நினைவுடன், எங்கே, எப்போது பாபம் நேர்ந்துவிடுமோ? என்ற அச்சத்துடன் தொண்டுசெய்யமுற்படுவர். அதுவே அறிஞர் செய்யத் தக்கது.

''சிவசொத்து குலநாசம்'' என்று ஒரு வாக்கியம் உள்ளது. சிவசொத்து என்று பிரித்துச் சொல்லப்பட்டாலும் சைவ சமய ஆலயங்களுக்குரிய சொத்துக்கள் யாவும் அவற்றின் வருமானமும் சிவசொத்துக்களேயாம். அவை தருமநெறி தவறிப்பயன் படுத்தப்படுமாயின், அவ்வதிகாரியை மாத்திரமல்ல அவன் சந்ததியையுமே அழிவுப்பாதையில் செலுத்திவிடும்.

இவற்றை ஆழ்ந்து சிந்திக்குமிடத்து, ஆலயபரிபாலனம் தனிப்பட்ட ஒருவருக்கேயுரிமையாக இருப்பது தகாது என்பதும்; அறிஞர்களான பொதுமக்களை உறுப்பினராகக்கொண்ட ஒரு தொண்டர்சபையினரால் நிர்வகிக்கப்படவேண்டும் என்பதும்; பலர் திரண்டு ஏகோபித்த ஒரு முடிபுக்கு வரும்போது இலகுவில் தவறுநேராது என்பதும்; தர்மகர்த்தா என்ற முறையில் ஆலயங்களில் செய்யப்படும் மாலை மரியாதை, கரிப்பொட்டுக் காழாஞ்சி மரியாதை முதலியன அவர் சிவதொண்டன்என்ற மனப்பான்மையை மாற்றுதிலு வேண்டுமென்பதும் பெறப்படும்.

(தொடரும்)

# ஈழத்து இசையாளருக்கு இந்தியக் கலைஞர்கள்

— வி என் பி —

யாழ்ப்பாணத்தில் திருவிழா 'சீசன்' பங்குனி மாதம் தொடக்கம் ஆவணி மாதம் வரை இருக்கும். முன்னுட்களில் தென்னிந்தியாவிலிருந்து பல நாகசுரக்கோஷ்டிகள் இங்கு வந்து தங்கியிருந்து கோவில்களில் மேளம் வாசித்துவிட்டு திருவிழா 'சீசன்' முடிய ஊர்திரும்புவது வழக்கமாயிருந்தது. இதனுல் உள்ளூரிலுள்ள மேள வாத்தியக்காரருக்கு பிழைப்பு வசதி குறைந்து போகவே அவர்கள் சங்கம் கூட்டி அரசாங்கத்துக்கு விண்ணப்பித்தன் பேரில் இந்தியாவிலிருந்து வரும் மேளக் கோஷ்டிகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலுள்ள இசைக் கலைஞரிடையும் பொதுமக்களிடத்தும் பலமான அபிப்பிராய பேதம் இருந்துவருவதாகத்தெரிகிறது. புதிய கலைஞர்களை தருவிப்பதால் இங்குள்ள இளம் கலைஞர்களுக்கும் இசையார்வமுள்ள பொதுமக்களுக்கும் இசைஞானம் பெருகுவதற்கு வசதியுண்டென்பது மறுக்கமுடியாத உண்மை. அதேசமயம் உள்ளூர் தொழில் வித்வான்களின் பொருளாதாரமும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

இவ்வருடம் இந்தியாவிலிருந்து ஐந்து நாகசுரக்காரரையும் மூன்று தவில்காரரையும் தருவிக்க அனுமதி கொடுக்கவேண்டுமென்று யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றம் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்திருக்கிறது. அனுமதி கிடைக்குமென்று வைத்துக்கொண்டால் இந்திய கலைஞர்களை எவ்வாறு தெரிவுசெய்வதென்ற கேள்வி எழுகிறது. அவர்களுடைய வரவால் இலங்கையில் இசைஞானம் வளர வேண்டுமென்ற நோக்கம் இருப்பின் தரமான சிறந்த வித்வான்களையே தருவிக்க வேண்டும். 'இந்தியாமேளம்' என்ற பெயருடன் அங்குள்ள மூன்றும் நான்காம் தரத்தினரை வரவழைப்பதில் பிரயோசனமில்லை. சிறந்த முதலாம் ரக வித்வான்களையே வரவழைக்க வேண்டும். அவர்களுக்கு எப்படியும் அவர்களுடைய தரத்துக்கு ஏற்ற சம்பளம்வழங்கவேண்டும். இந்தப் பிரச்னையைத் தட்டிக்கழிப்பதற்காக சிலர் தரக்குறைவான கலைஞர்களை தருவிக்கமுயன்றல் அதை இங்குள்ள கலைஞர்களும், பிரதேச கலாமன்றமும், பொதுமக்களும்தடைசெய்யவேண்டும்.

இதோடு சம்பந்தப்பட்ட இன்னெரு பிரச்னை சமீபகாலத்தில் இலங்கையில் தோன்றியுள்ளதாக மிக வருத்தத்துடன் கேள்விப்படுகிறேம். சில மேளகாரர் தங்கள் சங்கீத சம்பிரதாயத்துக்கும் தொழில் மேடை சம்பிரதாயத்துக்கும் முற்றிலும் ஒவ்வாத சில காரியங்களைச் செய்யும்படி வற்புறுத்திவருவதாகத் தெரிகிறது. இது முந்திரிக்கொட்டை 'பழத்துக்கு முந்தியவன் நானேதான்' என்று கூறுவது போலிருக்கிறது. வாய்ப்பாட்டுக் கச்சேரியானுலும் வாத்தியக் கச்சேரியானுலும் பிரதானமானது எது என்பதை உலகம் முழுவதும் அறியும். அதைப்பின் பற்றியே பக்கவாத்தியங்கள் அமையவேண்டும், இந்தப் பிரச்னைக்கும் மேலே கூறப்பட்ட-இந்திய கலைஞர் வரவழைக்கப்படும் பிரச்னைக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகவும் சிலர் கூறிக்கொள்கிறுர்கள்.

மேளகாரர் இந்த விதமான சச்சரவுகளில் ஈடுபடாமல் ஒற்றுமையாக இருந்து மேலான இசையைப் பரப்பி பொதுமக்களின் அபிமானத்தையும் ரஸிகர்களின் பாராட்டுதலையும் பெற்றுக் கொள்ள முயலுவதே சிறந்த முறையெனத் தோன்றுகிறது.

இந்திய கலைஞர்களைத் தெரிவு செய்யும் விஷயத்தில் பாரபட்சம் இல்லாத முறையில் நடுநின்று தீர்ப்பு அளிக்கக்கூடியது அகில இந்திய ரேடியோ (ஆகாசவாணி). அவர்கள் வித்வான்களைத் தரம் பிரித்து அதற்கேற்ப அவர்களுக்குக் கூடுதலான சன்மானமும் கூடுதலான ரேடியோ நேரமும் கொடுத்துவருகிறுர்கள். ஆகாசவாணியின் துணையை நாடி கலைஞர்களைத் தெரிவு செய்வது சரியான முறை என்று எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இதன்மூலம் வீண் கலகங்களையும் மனக் கசப்புகளையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

பங்குனி முதல் ஆவணி வரையுள்ள ஆறு மாதங்களில் ஆடிமாதத்தில் திருவிழாப்பட்சம் மந்தம். விவாகம், கிருகப்பிரவேசம் முதலியனவும் ஆடியில் மிகக் குறைவாகவே இருக்கும். ஆகவே இந்த மாதத்தில் மேளகாரருக்கும் உழைப்பு குறைந்துவிடும். இந்திய கலைஞர்களைப் பங்குனி மாதத்திலேயே வரவழைத்துவிட்டால்தான் அவர்களைப் பரிபூரணமாக உபயோகிக்கலாம். இனிமேல் 'பெர்மிட்' கிடைத்து அவர்கள் இங்கு வந்தால் ஆகக் கூடியது இரண்டு மாதமே இங்கு சேவிக்கலாம். அடுத்த வருடத்திலிருந்து இதில் சம்பந்தப்பட்டவர்கள் நேரத்தோடு நடவடிக்கை எடுத்தல் நன்று.

## முஸ்லிம்கள்

(I-ம் பக்கத் தொடர்ச்சி

தில், மிஸ்றிலிருந்து (எகிப்திலிருந்து) தேசப்பிரஷ்டம் செய்யப்பெற்றுஇலங்கைவந்தடைந்த அறபிபாஷா அவர்களும் பெரும் பங்கு கொண்டார்கள். மிஸ்ர் நாட்டின் தேசிய மறுமலர்ச்சிக்குத் தந்தை எனப் போற்றப்படும் இவரின் வருகையினுல் மிஸ்றில் முஹம்மத் அலி அவர்களின் காலமுதல் (1805—1848) கல்வித்துறையில் உண்டான முன்னேற்றங்கள் பற்றியும் முஸ்லிம் உலகம்பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு இலங்கை முஸ்லிம்களுக்குக் கிடைத்தது, இவை அனைத்தும் சேர்ந்து இலங்கை முஸ்லிம்கள் விழிப்புணர்ச்சி பெறுவதற்குத் துணை செய்தன. 1884-ம் ஆண்டில் கொழும்பில் நிறுவப்பெற்ற முதலாவது ஆங்கிலோ-முகமதிய பாடசாலை இந்தவிழிப்புணர்ச்சியின் சின்னமாக விளங்கிற்று அதன் ஸ்தாபகர் சித்திலெப்பை அவர்களாவர். இவர், 1882.ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தாம் நடத்திவந்த [illegible] வாரப்பத்திரிகை மூலமாக முஸ்லிம் மக்களை மேற்குறித்த மாற்றத்திற்குக் தயாராக்கினர். இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம்நேசனே பத்திரிகைத்துறையில் வெற்றிகரமாயமைந்த முதலாவது முயற்சியாகும்.

இலங்கை முஸ்லிம்களிடையே ஏற்பட்ட சமுதாய விழிப்புணர்ச்சியின் காரணமாக, அவர்கள் தமது பிரதான பிரச்னைகளுக்குப் பரிகாரந்தேடமுற்பட்டார்கள். தமது சமுதாயத் தனித்தன்மையைப் பேணுவதில் எவ்வளவுதூரம் அவர்கள் ஆர்வமுள்ளவர்களாய் இருந்தார்கள் என்பதற்கு சட்டசபையில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் இடம்பெறுதற்பொருட்டு அவர்கள் செய்த அயராதகிளர்ச்சி உதாரணமாய் விளங்குகிறது. தமது விவாக பதிவுகளுக்கு அரசாங்க அங்கீகாரம் பெறுவதை அவர்கள் இப்பொழுது ஆட்சேபிக்கவில்லை. கல்வி பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்தில் அடிப்படைமாற்றமுண்டாயிற்று இவ்விதமாக பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஒன்பதாம் பத்தாம் ஆண்டு முஸ்லிம்கள் [illegible] ஆண்டுகளில் அடை[illegible] முன்னேற்றத்தின் விளைப்புக் காலமாய் விளங்கிற்றெனலாம்.

## இ தியர்கள்...

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களை வேறுவிதத்தில் பெற்றுக் கொண்டாலும், இவர்களிடையே நிலவிய சமூகநிலைமை, இலங்கையிலுள்ள இந்தியத்தோட்டத் தொழிலாளர்களின் சமூக நிலையோடு பெருமளவுக்கு ஒத்துக்காணப்பட்டது. இது ஓர் குறிப்பிடத்தக்க இயல்பு.

இலங்கையில்வந்து சேவை செய்த தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தார்கள். மன்னூரிலுள்ள அரிப்பில் வந்து இறங்கிய அவர்கள் மலைநாட்டிலுள்ள தோட்டப்பகுதிகளைக் கால் நடையாகவே சென்று அடைய வேண்டியிருந்தது. 19-ம் நூற்றுண்டில்தோட்ட முதலாளிகளின் அனுதாபமற்ற மனப்பான்மையால் தொழிலாளர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கநேரிட்டது.

முக்கியமாக இக்கூற்று இப்பயிர்ச் செய்கையின் ஆரம்பகாலத்துக்குப் பொருந்தும். முதலாளிகளாலும், கங்காணிகளாலும், நோயாலும், கடும்வேலை குறைந்த சம்பளம் ஆகியவற்றுலும் பெரிதும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கண்ட அரசாங்கமும், குடியேற்ற நாட்டுக்காரியாலயமும், அவர்களைப் பாதுகாப்பதற்குச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டன. தொழிலாளர்களின் நலனுக்கென இயற்றப்பட்ட விதிகள் போதிய நலனை அளிக்கத்தவறின. இதற்குத் தொழிலாளர்களும் ஓரளவு பொறுப்பாக இருந்தனர். முதலாவதாக அவர்களிடையே நிலவிய அறிவின்மையால் தொழிலாளர்கள் பாதுகாப்புக்கென இயற்றப்பட்டசட்டங்களை அவர்கள் அறியவில்லை. அடுத்ததாகத் தென்னிந்தியாவில் காலத்துக்குக் காலம் தோன்றிய பஞ்சத்தினுல், பெரும்பாலும் உண்டாகிய உணவுத் திண்டாட்டத்தினுலும் இவர்கள் தங்களுடைய உரிமைகளைக் கருதாதுதென்னிந்தியாவிலும் பார்க்கச் செழிப்பாக இருந்த இலங்கையில் தமதுவாழ்க்கையை எக்கஷ்டங்களை அனுபவித்தும் கழிப்பதற்குத்தயாராக இருந்தனர்.

இறுதியில், சமயப்போதகர்கள் மற்றைய குடியேற்ற நாடுகளில் தொழிலாளர்களுடைய நலனுக்குச்செய்த சேவையை இலங்கையிலும் செய்யத் தவறியதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இத்தொழிலாளருடைய சமூக நிலைகளைம், வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் காட்டுவது இலங்கை வரலாற்றில் ஓர் புதிய ஆராய்ச்சியாகும்.

## குறள் விளக்கம்

(VII-ம் பக்கத்தொடர்ச்சி)

வழிபிறக்கும். ஆனுல் இவன்போன்ற ஏழைக்குக் கொடுப்பதால் என்னபயன்? அவருக்கும் இவனுடைய குடும்பத்தினருக்கும் தான் அது தெரியவரும்.''

''எது எப்படி இருந்தாலும் கொடுத்தால் அது ஈகைதானே!''

''வள்ளுவர் போன்ற பேரறிஞர்கள் கொடுப்பதெல்லாவற்றையும் ஈகை என்று சொல்லுவதில்லை. ஏழைகளுக்கென்று கொடுப்பதுதான் ஈகை. பயனை எதிர்பாராது கொடுக்கும் ஈகை என்பது, ஏழைகளுக்குக் கொடுப்பதால் மட்டுமே ஏற்படும். பின்பு எதையாவது எதிர்பார்த்து அதற்காக இப்பொழுது கொடுப்பது ஈகையல்ல! அதெல்லாம் வட்டிக்குப் பணம் கொடுப்பது, திருமணம், புதுமனை புகுவிழா போன்றவைகளில் நடைபெறும் 'பணச் சடங்கு' போன்ற தன்மையன.

பாரதியார் கூட ஏறக்குறைய இக்கருத்தை வைத்து 'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினுயிரம்நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கியொளிர நிறுத்தல், அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்' என்று பாடியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்க.

வறியார்க்கொன்று ஈவதே
ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர
துடைத்து.

## உண்மையின்...

(V-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை இரண்டுக்குமிடையே எந்த விதமான சமரசநிலையும் கிடையாது. ஏனென்ருல் எவ்வளவுதான் இனிப்பான பெயரைச் சொன்னுலும், அறிவின் யன்னற் கதவுகளை அடைத்துக் கொள்வதற்கு விஞ்ஞானம் இடங்கொடுக்காது.

இன்னெருவ நம்புகின்ருனென்று கண்மூடித்தனமாய் ஒருவன் நம்புவதை விஞ்ஞானம் ஆதரிக்காது.

### நேருவின் விருப்பம்

ஆகையால் விஞ்ஞானம் வானத்தை நோக்கி வானுலகங்களைத் தன்ஆதீனத்துக்கு உட்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இது மட்டுமல்லாமல், பயமின்றிக் கீழ் நோக்கி நரகக்குழியையும் பார்க்கத் தயாராயிருக்கவேண்டும். இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றுக்குப் பயந்தாலும் அது விஞ்ஞானமாகாது.

வாழ்க்கையிலும், முயற்சியின் பலன்களிலும் சம்பந்தம் வைக்காமல், எங்கு கூட்டிக்கொண்டு போவதாயிருந்தாலும் அதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் உண்மை அழைத்துச்செல்லுகிற வழியைப் பின்பற்றுகிற மகான்தான் வாஸ்தவமான விஞ்ஞானி.

நகரமுடியாமல் ஒரு நங்கூரத்தில் கட்டுண்டு கிடப்பது, உண்மை அழைத்துச் செல்லுகிற வழியைவிட்டு விட்டுத் தடுமாறி நிற்பதாகும்.

உண்மையான மதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் போராட்டமோ முரண்பாடோ இல்லாதிருக்கலாம். அப்படி இருந்துவிட்டால் மதம் விஞ்ஞான ஆடைகளுடன் கிளம்பி அதற்குள்ள பிரச்னைகளை விஞ்ஞான முறைப்படி தீர்த்துக் கொள்ளமுயல வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org